பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 13 ஞாயிற்றுக்கிழமை (26.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:151

## ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு

# மூன்றாம் தரப்பினரிடம் சரணடையுமாறு

# புலிகளிடம் கோருகிறது அமெரிக்கா!



### மோதல்களைத் தவிர்க்குமாறும் இரு சாராரிடமும் வலியுறுத்து

வாஷிங்ரன், ஏப்ரல் 26

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு, மூன்றாம் தரப்பு ஒன்றிடம் சரண் அடைய வேண்டும்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் றொபேட் வூட் வெள்ளிக்கிழமை நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இக்கருத்தை வெளியிட்டார்.

ஆனால் அவர் தாம் கருதும் மூன்றாவது நாடு எது என்பதனை வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

அதே வேளை இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் மோதல்களை நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (20 ஆம் பக்கம் பார்க்க)

### தென்னாசியப் பிராந்திய உதவி அமைச்சராக றொபேட் ஓ பிளேக்



வாஷிங்ரன், ஏப்.26

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தென் [illegible] ய விவகாரங்களுக் [illegible] (உதவி அமைச்ச [illegible] உதவிச் செயலராக றொபேட் ஓ பிளேக்கை ஜனாதிபதி பராக் ஒபாமா நியமித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதராக இப்போது (20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் வேறொரு நாட்டிடம் சரணடைவதற்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டாது!

### பாதுகாப்புச் செயலாளர் அமெரிக்காவுக்குப் பதிலடி



கொழும்பு, ஏப்.26

விடுதலைப்புலிகள் அவர்களது ஆயுதங்களை மூன்றாந்தரப்பு ஒன்றிடம் - இன்னொரு நாட்டிடம்- கையளிப்பதற்கோ அல்லது அந்த நாட்டிடம் சரணடைவதற்கோ இலங்கை அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது.

இலங்கையில் நடைபெறும் போர் எங்களினுடைய உள்நாட்டு விவகாரம். அதில் (20 ஆம் பக்கம் பார்க்க)

### தேசியக் கொடியை எரிக்க முயன்ற ஈழத்தமிழர் ஆதரவாளர்கள் 25 பேர் நேற்றுக் கைது!

சென்னை, ஏப்.26

இலங்கையில் தமிழ்மக்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து இந்தியத் தேசியக் கொடியை எரிக்க முயன்ற 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் சென்னையில் 18 பேரும் தஞ்சாவூரில் 7 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று (20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் போர் நிறுத்தம்: இன்னும் 24 மணி நேரத்தில் நல்லமுடிவு

### நம்பிக்கை வெளியிடுகிறார் அமைச்சர் சிதம்பரம்



சிவகங்கை, ஏப்.26

மோதல்களை நிறுத்துமாறு வலுவான கோரிக்கையை இந்தியா இலங்கைக்கு விடுத்துள்ளது. அதன் பலனாக நல்லதோர் முடிவு 24 அல்லது 48 மணி நேரத்தில் வெளிவரும்.

இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளதாக இந்திய இணையத்தளம் ஒன்று தெரிவித்தது.

நேற்றிரவு சிவகங்கையில் வைத்து செய்தியாளர்களுக்கு அமைச்சர் சிதம்பரம் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் சிவ்சங்கர் மேனனும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## போரை நிறுத்துவதற்கான வழியைக் கண்டாக வேண்டும் என்கிறார் ஹோம்ஸ்



கொழும்பு, ஏப்.26

நேற்றிரவு கொழும்பு வந்துசேர்ந்த ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக் கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் இன்று வவுனியாவுக் குச் சென்று அகதிகளைச் சந்தித்து கலந்துரை யாடவிருக்கிறார்.

தாய்லாந்து வழி யாக சனிக்கிழமை இரவு கொழும்பு வந்து சேர்ந்த ஹோம்ஸ்

ஜனாதிபதி மற்றும் உயர் அதி காரிகளையும் சந்தித்து கலந்துரையாடி விட்டு இன்று இரவு நியூயோர்க் திரும்புவார்.

மக்களின் நிலைமை மிகவும் மோசமாகி உள்ளதால் போரை நிறுத்துவதற்கான வழியைக் கண்டறிய வேண்டும். அதன்பின் சிக்கியுள்ள மக்களை மீட்க வேண்டும் என்று தாய்லாந்தில் வைத்து அவர் செய்தியாளர்களிடம்தெரிவித்தார். (அ-1)

## மேல் மாகாண சபைத் தேர்தல் நேற்று பெரும் வன் செயல்கள் இன்றி நடைபெற்றது

### 65 சதவீதமானோர் வாக்களித்ததாக மதிப்பீடு

கொழும்பு, ஏப்.26

மேல் மாகாண சபைக்கான தேர்தல் நேற்று பெரியளவிலான வன்முறைச் சம்பவங்கள் இன்றி அமைதியாக நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

காலை 7 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு சுறுசுறுப்பற்ற விதத்தில் அமைந்திருந்திருந்த [illegible] அதிக எண்ணிக்கையானோர் வாக்களித்தனர் என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்தது.

சுமார் 65 சதவீத வாக்களிப்பு இடம் பெற்றதாக (20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த இலங்கை அரசைக் கோருகின்றது பாரதீய ஜனதா

புதுடில்லி, ஏப்.26

ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஆகக்கூடிய அதிகார பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்.

பாரதீய ஜனதாக்கட்சி இலங்கை அரசை மேற்கண்டவாறு கோரியுள்ளது. இலங்கை விவகாரம் தொடர்பாக அக்கட்சி (20 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலையான உதயன் ஆசிரியரின் பேனாவிலிருந்து...

அன்புமிக்க வாசகப் பெருமக்களே!

நீண்ட - எட்டு வாரகால - தடுப்புக் காவலில் இருந்து நான் மீண்டுள்ள நிலையில் சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது என்று நினைக்கின்றேன்.

வெள்ளை வானில் வந்த ஆயுத பாணிகளின் அராஜகப் பிடியில் சிக்கி, கண்கள் கட்டப்பட்டு, பின்பக்கம் மடக்கிக் கைவிலங்கிடப்பட்டு, தாக்குதல்களுக்கு இலக்காகி அவலப்பட்ட அந்த இரண்டு மணி நேரக் கொடூரமும்-

பின்னர் அக்கடத்தல், 'கைது' ஆக மாற்றப்பட்டு தடுப்புக் காவலில் அனுபவிக்க நேர்ந்த இரண்டு மாத கால அவஸ்தையும்-

ஒருவாறு இப்போதைக்கு முடிவுக்கு வந்திருப்பதாகக் கருதுகிறேன்.

அடிப்படையோ, ஆதாரமோ அற்ற அபத்தக் குற்றச்சாட்டுகளின் பேரில் தமிழ்ப் பத்திரிகை உலகின் மூத்த பத்திரிகையாசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டு இரண்டு மாத காலத்துக்கு அநியாயமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்திருக்கின்றார் என்பது இன்று அப்பட்டமாகியிருக்கின்றது; அம்பலமாகியிருக்கின்றது.

இந்தக் கைதும், அது இடம்பெற்ற முறையும், இடம்பெற்ற வேளையும், அதை யொட்டி என்மீது அதிகார வர்க்கத்தினால் அபாண்டமாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளும், இவ் விடயத்தையொட்டிய விசாரணைகள் சுமார் இரண்டு மாத காலத்துக்கு இழுத்தடிக் கப்பட்ட போக்கும் இந்த அதிகார அராஜக அத்து மீறலின் பின்னணியில் அரசியல் உள் நோக்கமும் பழிவாங்கலும் பிரதான காரணங்களாக இருந்தன என் பதைத் தெளிவுபடுத்தப் போதுமானவை. (02 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விடுதலையான உதயன் ஆசிரியரின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் காலனித்துவப் பிடியிலிருந்து இலங்கை விடுவிக்கப்பட்ட பின்னர், இலங்கைத் தமிழர்கள் வரலாற்றில் மிக மோச மான - மிகக் கொடூரமான - மிகக் கோர மான - பேரவலத்தையும் பேரணர்த்தத்தையும் சந்தித்துக் கொண்டிருக்கும் பெருந் துயர்மிக்க இச்சமயத்தில் -

இந்தக் கொடூரங்கள் குறித்து சர்வதேச சமூகம் உன்னிப்பாகவும், கூர்ந்தும் அவதானிக்க வேண்டிய அவசரமும் அவசியமும் எழுந்துள்ள இச்சூழலில் -

தம் இன மக்களின் பேரவலம் பற்றிய உண்மை நிலையையும் யதார்த்தத்தையும் உலகுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் முரசறைந்து உணர்த்தும் களப்பணியில் - வரலாற்றுப் பொறுப்பில் - கண்துஞ்சாது ஈடுபட்டிருக்க வேண்டிய ஒரு பத்திரிகை ஆசிரியர், அச்சமயத்தில் அப்பணியில் ஈடுபட விடாது திட்டமிடப்பட்ட வகையில் தடுக்கப்படும் விதத்தில் தடுப்புக் காவலில் கம்பி எண்ணவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்.

இனப்பிரச்சினையையொட்டிய யுத்தம் தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ள இச்சமயத்தில் அது குறித்து சர்வதேச ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இராஜதந்திரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும், கள நிலைமை பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளக்கூடிய செய்தி மூலமாகத் திகழ்பவர்கள் என்போன்ற ஊடக உயர் மட்டத்தினரே என்பது வெளிப்படையானது.

அத்தகைய முக்கிய பொறுப்பில் இருப்பவரை இச்சமயத்தில் அபத்தமான குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்திருந்தமையும் -

அந்தக் கைதையொட்டி அதிகார வர்க்கத்தினர் கிளப்பிவிட்ட 'புலித்தொடர்பு' என்ற கற்பனைக் குற்றச்சாட்டும் -

இந்தக் கைதுத் திருவிளையாடலின் பின்னணியில் புதைந்து கிடக்கக்கூடிய உண்மைகளையும் நோக்கங்களையும் நீங்களே ஊகித்துக்கொள்ளப் போதுமானவை எனக் கருதுகிறேன்.

கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி கொழும்பு வரை தமது விமானத்தில் வந்து தாக்குதல் நடத்திய புலிகளின் நடவடிக்கையுடன் நான் தொடர்புபட்டிருந்தேன் என்பதே அரசின் அதிகார தலைமையினால் என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு.

ஓர் ஊடகவியலாளன் என்ற முறையில் இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக, செய்தித் தரப்புகளோடு தொடர்பு கொண்டு, தகவல்களைச் சேகரித்து வெளியிட்டமை தவிர அதற்கு அப்பால் இவ்விடயத்தில் நான் சம்பந்தப்படவுமில்லை; அத்துமீறிச் செயற்படவுமில்லை.

இப்போது அது விசாரணைகளில் தெட்டத் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது; உண்மை வெளியாகியிருக்கின்றது.

எம்மைப் பொறுத்த வரையில் செய்தியாளர்கள் என்ற முறையில், அரச மற்றும் படை உயர் மட்டங்களில் இருந்து, ஏனைய அனைத்துத் தரப்பினர்களுடனும் செய்திகளுக்காகத் தொடர்புகளை பேணுவது எமது தவிர்க்க முடியாத பணியாகிறது. அத்தகைய கடமைப் பொறுப்புகளுக்கப்பால் எத்தகைய தவறான அல்லது சட்ட விரோதமான செயற்பாடுகளையும் நான் மேற்கொள்ளவில்லை என்பதே உண்மையானதாகும்.

அன்றையதினம் எனக்கு வந்த - அல்லது நான் மேற்கொண்ட - தொலைபேசி அழைப்புகள் குறித்தே முதலில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. அந்த வகையில் உள்ளூரிலும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து வந்த - அல்லது நான் அவற்றுக்கு மேற்கொண்ட - சுமார் இருநூறு வரையான தொலைபேசி அழைப்புக்களின் மூலத்தைக் கண்டறிவதற்கு மிஞ்சி, மிஞ்சிப் போனால் ஒருவாரகால அவகாசம் அதிகம்.

ஆனால் அந்த ஒரு வார காலத்துக்குள்ளேயே - மேற்படி தாக்குதல் சம்பவ சமயத்திலோ அல்லது அதற்கு முன்னர் சுமார் இரண்டு மாத காலத்திலோ குற்றமிழைக்கப்பட்டதாகக் கருதப்படக்கூடிய தொலைபேசி அழைப்புகளுடன் நான் சம்பந்தப்பட்டேன் என்று சந்தேகிப்பதற்கான ஆதாரங்கள் ஏதுமே இல்லை என்பதை என்னை விசாரணை செய்த பொலிஸார் உறுதிப்படுத்திக்கொண்டு விட்டனர்.

தொலைபேசி அழைப்புகள் பற்றிய விசாரணை முடிந்ததும் எனது வங்கிக் கணக்குகள் துருவப்பட்டன. எனது மனைவியின் வங்கிக் கணக்குகள் ஆராயப்பட்டன. 'பயங்கரவாதிகள்' மூலம் தவறான வழியில் நான் வருமானம் ஏதும் ஈட்டிக் கொண்டேனா என்பதைக் கண்டறிய எனது சொத்துக்கள், உடைமைகள் ஆய்வு செய்யப்பட்டன. நான் விற்ற, வாங்கிய சொத்துகள் குறித்தெல்லாம் விசாரிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடை பெற்ற சகல சமாதானப் பேச்சுகளின் போதும் ஊடகவியலாளன் என்ற முறையில் நேரில் பிரசன்னமாகி செய்தி சேகரிக்கும் தனித்துவமான வாய்ப்பு எனக்குக் கிட்டி வந்திருக்கின்றது. இதற்காக அவ்வப்போது பல்வேறு நாடுகளுக்கும் பல தடவைகள் பயணம் செய்திருக்கின்றேன். தவிரவும் மூத்த ஊடகவியலாளருள் ஒருவன் என்ற முறையில் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குபற்றியிருக்கின்றேன்.

இந்த வகையில் கடந்த ஏழு ஆண்டுகளில் நான் மேற்கொண்ட பல்வேறு வெளிநாட்டுப் பயணங்கள், அவற்றின் காரணங்கள், அதற்கான நிதிமூலம் குறித்தெல்லாம் துருவினார்கள்.

எதிலும் குற்றம் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த இரண்டு மாத காலத்தில் இலங்கைப் பாதுகாப்புப் பிரிவின் நான்கு புலனாய்வுத் துறைகளும் என்னைப் பற்றி நடத்திய விசாரணைகள் நான் குற் [illegible] என்பதை நிரூபித்தமையால் வேறு வழியின்றி வழக்கு ஏதும் தொடராமலேயே என்னை விடுவிக்க வேண்டிய நிலைக்கு ஆட்சித் தரப்பு தள்ளப்பட்டது.

என்னைப் 'பயங்கரவாதி' ஆகப் பிரகடனப்படுத்தும் அதிகாரத் தரப்பின் பகிரங்கக் கருத்து வெளிப்பாடு, அவற்றின் பின்புலத்தில் புதைந்து கிடக்கும் சூக்குமங்கள், அபத்தமான குற்றச்சாட்டுகள் போன்றவை மொத்தத்தில் நகைப்புக்கிடமானவை. அவற்றை விவரிப்பின் அது நீண்டு செல்லும்.

எனக்கு நேர்ந்த இந்த அவலத்துக்காக யாரையும் பழிவாங்கும் வெஞ்சினம் எனக்குக் கிடையாது.

அத்தோடு இன்று எமது தமிழ்ச் சகோதரர்கள் அனுபவிக்கும் பேரின்னல்களுடன் ஒப்பிடுகையில் எனக்கு நேர்ந்த அவல அனுபவம் பெரும் சமுத்திரத்தில் ஒரு துளி மட்டுமே.

எனவே, தமிழர் தம் இக்கட்டான வரலாற்றுக் காலகட்டத்தில் ஓர் ஊடக நிறுவனமும் அதன் பொறுப்பான பணியாளர்களும் எதிர்கொண்டாக வேண்டிய கட்டாயங்களில் ஒன்றாக இதனைக் கருதி, எமது பணியைத் தொடர நாம் திடசங்கற்பம் கொள்வதே எமது கருத்தாக இருக்க வேண்டுமென நினைக்கிறேன்.

ஆனால், இத்தகைய அழுத்தந் தரும் அச்சுறுத்தல்களுக்கு ஊடகவியலாளர்கள் என்ற முறையில் நானும் 'உதயன்', 'சுடர்ஒளி' தினசரிகளில் என்னுடன் பணியாற்றும் எனது சக ஆசிரியபீட ஊழியர்களும், ஏனைய அலுவலர்களும் மற்றும் நிர்வாகத்தினரும் அவ்வப்போதும் தொடர்ந்தும் எம்மால் இயன்றவரை எமது கடமைகளைத் தொடர்வோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கு உறுதி கூறுகின்றேன்.

கொழும்பில் இரண்டு மாதகாலம் நான் தடுப்புக் காவலில் கைதியாக வைக்கப்பட்டிருந்தேன் என்பது உண்மைதான். ஆனால், யாழ்ப்பாணத்தில் தங்கள் உயிர்ப் பாதுகாப்புக்காக 'உதயன்' ஆசிரியர் பீடத்தின் தூண்களான இரு உயர் அலுவலர்கள் கடந்த இரண்டரை வருடங்களாக 'உதயன்' அலுவலகத்துக்குள் தங்களைத் தாங்களே முடக்கி சிறைக் கைதிகளாக வைத்துக் கொண்டு ஆற்றும் பணியில்தானே உங்கள் 'உதயன்' திட்டமிடப்பட்டு, இலக்கு வைக்கப்பட்ட தாக்குதல்களைக்கூட எதிர்கொண்ட பின்னரும் தவறாது வெளிவந்துகொண்டிருக்கின்றான் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றல்லவா?

**நன்றி**

இந்த நெருக்கடியான சமயத்திலும் எம்முடன் தோள் கொடுத்து ஆதரவு தந்த சகல அன்பு நெஞ்சங்களுக்கும் சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றேன்.

✱ எத்தகைய நெருக்கடி வரினும் அஞ்சாது பத்திரிகையைத் தவறாது வெளியிட வேண்டும் என்ற தமது நெஞ்சுரத்தை, படுகொலை இரத்தக் களரிகளுக்கு வழிவகுத்த அனர்த்த சம்பவங்களுக்கு நேரடியாக முகம் கொடுத்த சமயங்களில் கூடத் தயங்காது வெளிப்படுத்தி வரும் தமது வழமையான, துணிச்சல்மிக்க பாரம்பரியத்தை, எமது சக ஊழியர்கள் மீண்டும் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். தமது ஆசிரியரை சீருடையினர் சகிதம் வெள்ளை வானில் வந்தோர் கடத்தி, அச் சுறுத்தி அதிர்ச்சி தந்த நிலையிலும் - அவரைப் 'பயங்கரவாதி' ஆகக் குற்றம் சுமத்தி முன்னிலைப்படுத்தியும் கூட - தமது கடமையைத் தவறவிடாது தங்களை சுதாகரித்துக்கொண்டு ஒருநாள் பின்னடைவுதன்னும் காட்டாமல் அதே தரத்தோடும், வீச்சோடும், உறுதித் தெளிவோடும் இச்சமயத்தில் 'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்களைத் தவறாமல் வெளியிடுவதை உறுதி செய்த தைரி [illegible] நிறுவன நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் -

✱ தடுப்புக் காவலில் இருந்த என்னை நேரில் வந்து சந்தித்து உற்சாகப்படுத்திய பல்வேறு நாடுகளின் இராஜதந்திரிகள், அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகள் போன்றோருக்கும் -

✱ நான் கடத்தப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து எனக்காகக் குரல் எழுப்பிய உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல்வாதிகள், ஊடக அமைப்புகள், மனித உரிமை இயக்கங்கள், பல்வேறு சமூக அமைப்புகள் ஆகிய தரப்பினருக்கும் -

✱ என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டமை தொடர்பான விசாரணைக்காகப் பொலிஸாருக்கு ஒத்துழைத்த எனது நண்பர்கள், செய்தி மூலங்கள், உள்நாட்டு - வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் போன்ற தரப்பினருக்கும் -

✱ என்னுடைய வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற கொடுப்பனவுகள் சம்பந்தமான விசாரணைகளை முன்னெடுக்க உதவிய 'இன்டர்போல்' நிறுவனத்துக்கும் -

✱ என்னுடைய விடுதலைக்காக வற்புறுத்தி அழுத்தம் கொடுத்த வெளிநாட்டுத் தூதரகங்கள், இராஜதந்திரிகள் -

✱ இரண்டு மாதத் தடுப்புக் காவலின் போது என்னைக் கௌரவத்துடன் நடத்தி, மரியாதை பேணி, அனுசரித்து நடந்து கொண்ட கொழும்பு குற்றவியல் பிரிவு இயக்குநர் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மற்றும் அவரின் கீழ் பணியாற்றிய பொலிஸ் குழுவினருக்கும் -

✱ நான் தடுப்புக்காவலில் வாடிய வேளை எனது குடும்பத்தவர்களுடன் தொடர்பு கொண்டு தைரியமும், உற்சாகமும் ஊட்டி தார்மீக ஆதரவு தந்த உள்ளூர் நண்பர்கள், உறவினர்கள், வெளிநாட்டு ஆர்வலர்கள் மற்றும் அன்பர்கள் -

அனைவருக்கும் எனது பணிவான நன்றிகள்.

உங்கள் ஆசி மற்றும் ஆதரவுடனும், 'உதயன்', 'சுடர்ஒளி' சக ஊழியர்களின் ஊக்கத்துடனும் எனது ஊடகப் பணி தொடரும் என உறுதி கூறுவதுடன், அதற்கு இறைவனின் அருளையும் இறைஞ்சுகின்றேன்.

ந.வித்தியாதரன்
(ஆசிரியர் - 'உதயன்', 'சுடர்ஒளி')

## இறுதி ஆட்டம்

வலி.வடக்கு, ஏப்.26

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் மூளாய் வளர்மதி விளையபட்டுக்கழகம் நடத்திவரும் லீக் முறையிலான 07பேர் பங்குபற்றிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாம் இடத்துக்கான போட்டி மற்றும் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 3.00மணிக்கு வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

3ஆம் இடம் - நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் அராலி பாரதி விளையாட்டுக்கழகம்

இறுதிப்போட்டி - இளவாலை யன்கேன் றீஸ் விளையாட்டுக்கழகம் எதிர் காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக்கழகம். (1-86)


## உடனடி வேலை வாய்ப்பு

தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பிரதேச ஆதார வைத்தியசாலைகளில் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்யும் தனியார் நிறுவனத்துக்கு அப்பிரதேசங்களில் சுத்திகரிப்பு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். காலை 9 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 060 221 0063, 060 221 0525


## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை சிவசுப்பிரமணியம்

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் வேப்பங்குளம், வவுனியாவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை சிவசுப்பிரமணியம் நேற்று(25.04.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிவசுப்பிரமணியத்தின்(மணியம் மாஸ்ரர்- ஓய்வுபெற்ற ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பழனிவேல், வெற்றிவேல், அருணாசலம் மற்றும் இராசம்மா, தெய்வநாயகி, பாலசுப்பிரணியம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்ளான சிவபாக்கியம், சிவலட்சுமிதேவி, விவேகானந்தன் மற்றும் சிவபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காண்டீபன், தயாபரன், பார்த்தீபன், சத்தியபாமா, ஆகியோரின் தாயும் கமலாசினி, சிவப்பிரியா, லோஜினி(நவாலி மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியும் லக்ஷியா, கஜானன், சேயோன், தனுஷா, யதுர்சனா, லாவர்ண்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.04.2009) ஞாயிற்றுக்கிழமை வேப்பங்குளம், வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
தொ.பே.: 0602241857

தகவல்:
பார்த்தீபன்(பரா).


MONITORS - LCD
Samsung 17" LCD - 14250/-
View Sonic 17" LCD - 15900/-
HP/ Samsung/ Benq/ View Sonic 19" LCD - 17500/-

UPS 650 W
Intex 650 - 5100/-
DCP - 5100/-
Panora 650 - 5500/-
Prolink 650 - 5750/-

MONITORS - CRT
HP Pure Flat 17" - 9000/-
Prolink Pure Flat 17" - 10900/-
View Sonic 17" - 13000/-

UPS 1.2 KV (1200)
Power Tree 1200 (1.2 Kv) - 9700/-
Prolink 1200 (1.2 Kv) - 10500/-
Mercury 1200 (1.2 Kv) - 10900/-

HARD DISK
80 GB SATA - 4600/-
160 GB SATA - 5200/-
250 GB SATA - 5900/-
500 GB SATA - 8200/-
80 GB IDE - 4900/-
160 GB IDE - 5750/-

SUBWOOFWERS
Microlab 2.1 MII3 - 3100/-
Creative SBS 380 2.1 - 3750/-
Microlab 5.1 MIII3 - 6300/-
Creative 5.1 A500 - 7900/-
Microlab (Remote Model) - 7900/-

PEN DRIVE
1 GB - 550/-
2 GB - 850/-
4 GB - 1100/-
8 GB - 1900/-
16 GB - 4500/-

COMPUTER TABLE 3400/-

MP4, MP5 PLAYES (Sony, Orange)
* 2 GB (Expand 2GB) * Camera * FM Radio * MP3 * USB Cable * Voice Recording Games * Driver CD Power Charger * Head Phone
7500/-

SONY MP4 & MP3
* FM Radio * Games * MP3 * MP4 * Head Phone
1 GB - 4500/-
2 GB - 5500/-

SCANNER
Mustek - 6600/-
Cannon - 6750/-
HP - 9700/-

ACCESSORIES
* USB Optical Mouse - 450/-
* Key Board - 450/-
* Head Phone (with Mic) - 400/-
* Web Camera - 1300/-
* Speaker - 550/-
* Intex TV Card Internal - 2750/-
* VGA Card PC Express 512 MB - 6500/-
* VGA Card PC EXpress 1 GB - 9500/-
* ATX Casing Black (with Power Supply) - 3400/-

RAM (Memory)
DDR II 1 GB 800 - 1650/-
DDR II 2 GB 800 - 2750/-
DDR I 512 MB 400 - 2750/-
DDR I 1 GB 400 - 4900/-
SD Ram 256 MB - 1500/-

PORTABLE HARD DISK
160 GB USB Power - 9400/-
250 GB USB Power - 10900/-
320 GB USB Power - 13250/-

MUSIC WORLD & COMPUTERS

Warranty Valid for 1 Year
Stock Available


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடை விலகும் மாணவர் எண்ணிக்கையைக் குறைக்க அரவணைக்கும் போக்கோடு பாடசாலைகள் செயற்படவேண்டும்

**யாழ்.** மாவட்டத்தில் பாடசாலையை விட்டு இடைவிலகும் அல்லது கல்வியை இடைநிறுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் ஏறு வரிசையிலேயே இருப்பதாக அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கின்றது.

யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகத்தினால் கடந்த ஆண்டு முழுவதும் சிறுவர்கள் எதிர்கொண்ட பாதிப்புகள் தொடர்பாகத் தாயாரிக்கப்பட்ட விவரத் தொகுப்பு மூலமே இத்



தகவல் தெரியவந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பாடசாலையை விட்டு இடைவிலகிய சிறுவர்களின் எண்ணிக்கை 458 எனவும், பாடசாலையை விட்டு விலகிய சிறுவர்களின் எண்ணிக்கை 705 எனவும் அந்தப் புள்ளி விவரம் பட்டியல் இட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக பொது நிறுவனங்கள், மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் உதவியுடன் இந்தத் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. ஆகமொத்தம் கடந்த வருடத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் தமது எதிர்காலத்துக்கு ஆதாரமாக விளங்கக்கூடிய கல்வியினைத் தொலைத்து நிற்கிறார்கள் என்பதை மிகுந்த கவலையுடன் இங்கு பதிவிட வேண்டியுள்ளது.

சிறுவர்கள் பாடசாலையை விட்டு இடை விலகுவதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. பொருளாதார நெருக்கடி, சமகாலச் சூழல், உளநெருக்

## இலவச உணவுக்கும் சில பாடசாலைகள் சிறுதொகைப் பணத்தை மாணவர்களிடம் அறவிடுவது ஏன்?

கீடு, கல்வி மீதான வெறுப்பு என்பன போன்ற பல காரணங்களால் மாணவர்கள் கல்வியை இடை நடுவிலேயே கைவிடுவதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய நிலைகளைச் சரிசெய்தால் இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் என்ற கணிப்போடு பல தொண்டு நிறுவனங்கள் களத்தில் இறங்கியும் உள்ளன. எனினும் வெறும் ஏட்டளவிலான புள்ளி விவரங்களை மட்டுமே கணக்கில் எடுத்து அவை செயற்படுவதனாலும், தூரநோக்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தாதனாலும் இன்னமும் இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதற்குப் பதிலாக உயர்ந்து கொண்டே செல்கிறது.

எந்தவொரு மாணவனும் கல்வியைத் தானாகவே இடைநிறுத்துவதில்லை. பல்வேறுபட்ட புறக்காரணிகளின் தாக்கத்தின் விளைவாகவே அவன் தன்னுடைய கல்வியைத் துறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அவர்களுக்குத் தொண்டு நிறுவனங்கள் சரிவர ஒத்தடம் கொடுப்பதில்லை என்றே தோன்றுகின்றது. உதாரணமாக வறுமை காரணமாக பாடசாலையை விட்டு ஒரு மாணவன் இடைவிலகினால் அவனது வறுமையைப் போக்க நிரந்தர நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் கற்றல் உபகரணங்களை வழங்குவதோடு அச் செயற்பாடு நின்று விடுகின்றன. சில வேளைகளில் மாணவன் பாடசாலைக்கு வராமல் விட்ட காரணத்தைச் சரிவர அறியாது தமது செயற்றிட்ட வெற்றியைத் தம்பட்டம் அடிப்பதற்காக இடைவிலகிய மாணவனைப் பாடசாலையில் மீளவும் இணைத்துவிட்டு, அதன்பின்னர் அந்த மாணவன் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாதிருப்பதையும் காணக்கூடியதாகவே உள்ளது. எனினும் பெற்றோரும், பாடசாலைச் சமூகமும் மாணவர்கள் மீது சரியான கரிசனையும் அக்கறையும் கொண்டால் உண்மை யிலேயே மாணவர்களின் இடைவிலகல் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் •

மாணவர்களுக்கு கல்வி மீது நாட்டத்தையும், கல்வி தொடர்பான விளைவுகளையும் ஊட்ட வேண்டிய பாடசாலைகளே அதற்கு நேர்மாறான சில வேலைகளைத் தம்மையும் அறியாமல் செய்துவிடவே செய்கின்றன. மாணவர்களுக்குப் பாடசாலையை நினைத்தாலே ஒருவித பய உணர்வை அல்லது வெறுப்புணர்வை உண்டு பண் ணும் சில கைங்கரியங்களைச் செய்து விட்டு அதன் பின்னர் பாட சாலைக்கு மாணவர்கள் சமூகமளிக்காதோர் எண்ணிக்கை அதிகரிக்கின்றன என அங்கலாய்க்கின்றனர். இது ஆடுகள் யாவும் வெளியேறிச் சென்ற பின்னர் பட்டியை அடைத்த கதைதான்.

மாணவர்களின் போசாக்கு வலுவை அதிகரிக்கவும், பாடசாலை வரவை ஊக்குவிக்கவும், மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் ஒன்று உலக உணவுத் திட்டத்தின் ஆதரவுடன் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்குரிய சகல பொருள்களையும் அரசாங்கமே இலவசமாகப் பாடசாலைகளுக்கு வழங்குகின்றது. எனினும் மரக்கறி, விறகு போன்றவற்றுக்காக மாணவர்களிடம் சிறுதொகைப்பணம் சில பாடசாலைகளில் அறவிடப்படுகிறது. ஏறக்குறைய மாதமொன்றுக்கு ஒரு மாணவனிடம் முப்பது ரூபாய் வீதம் அறவிடப்படுவதாகத் தெரிய வருகிறது. ஆனால் இந்தச் சிறுதொகைப் பணத்தைக்கூட பல பெற்றோர் செலுத்தாததனால், பணத்தைச் செலுத்தாத மாணவர்களுக்கு இலவச உணவு வழங்குவது நிறுத்தப்பட்ட சில சம்பவங்களும் நிகழவே செய்துள்ளன. பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய பெற்றோர்களே இவ்வாறு பிள்ளைகளுக்குரிய மாதாந்தப் பணத்தை செலுத்தத் தவறுகின்றனர் என்று பாடசாலை வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. 'அநேக வறிய குடும்பங்கள் நாளாந்த வேலை செய்து பிழைப்பவர்களாகவே இருக்கின்றனர். ஆயினும் அவ்வாறு உழைக்கும் பணத்தையும் அவர்கள் வீணாகவும், மதுபாவனைக்கும் செலவிட்டு முடித்து விடுகின்றனர். இதனால் அவர்கள் இந்தச் சிறுதொகைப் பணத்தைச் செலுத்த மறந்து விடுகின்றனர். ஆனால் அவர்கள் தமது பிள்ளைகள் மீது உண்மையிலேயே அக்கறை கொண்டவர்களாக இருந்தால் இந்தப் பணத்தைச் செலுத்துவது அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல' என்றும் பாடசாலைச் சமூகங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் 'வெறும் முப்பது ரூபாவுக்காக அரசாங்கம் இலவசமாக வழங்குகின்ற உணவை நிறுத்தி வைப்பது எந்த வகையில் நியாயம். எங்களிடம் பணம் இருந்தால் நாங்கள் ஏன் அதனைக் கட்டாமல் விடுகிறோம். எம்மைப் போன்ற வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காகத்தான் இத்தகைய இலவசத்திட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது. அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாதது பாடசாலைகளின் குற்றம்' என்று வறுமை நிலையில் உள்ள பெற்றோர் அங்கலாய்க்கின்றனர்.

இவ்வாறு பெற்றோரும் பாடசாலைகளும் மாறி மாறி ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டினாலும் உண்மையில் பாதிக்கப்படுவது பிள்ளைகள்தான். அவர்கள் வீட்டில் பசியோடு புறப்பட்டு பாடசாலையிலும் மற்றைய மாணவர்கள் வயிறார உண்ணுகையில் அதைப் பார்த்துக் கொட்டாவி விடவேண்டிய பரிதாப நிலையே ஏற்படுகின்றது. இந்நிலையில் அவர்கள் தமது கல்வி மீதான அக் கறையை இழந்து காலப்போக்கில் இடை விலகிய மாணவர்களில் ஒருவராக அவர்கள் மாறக்கூடும்.

இவ்வாறு இலவச உணவைக்கூட, பணத்தைப் பெற்றுக்கொண்டு மாணவர்களுக்கு வழங்கும் பாடசாலைகள் உணவின் சுவை, தரம் என்பவற்றை கவனத்தில் கொள்வதில்லை என்று பெரும்பாலான மாணவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். எல்லா மாணவர்களும் இலவச உணவைப் பெறவேண்டும் என்ற கட்டாயம் காரணமாகவே உணவைப் பெறுவதாகவும், பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் தாம் வீட்டில் இருந்து கொண்டுவரும் உணவையே மதியவேளையில் உண்பதாகவும் கூறப்படுகிறது. பாடசாலையில் வழங்கப்படும் இலவச உணவைத் தமது உணவுப் பெட்டிகளில் மறைத்து, எடுத்துவந்து வீடுகளில் கொட்டுவதாகப் பெற்றோர் தெரிவிக்கின்றனர். அந்த அளவுக்கு மாணவர்கள் வாயிலே வைக்கக் கூட முடியாத அளவுக்கு வெறும் பெயருக்கு மட்டுமே அது உணவாக இருப் பதே காரணமாகும். உப்பு, மிளகாய்த்தூள், புளி என்பனவெல்லாம் ஒன்றில் மிகையாகவோ அல்லது குறைவாகவோ பயன்படுத்தப்படுகின்றன. சோறும் பெரும்பாலும் குழைந்து போய் ஒருவித துர்நாற்றத் தன்மையோடு இருப்பதாக மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இத்தகைய காரணிகளால் ஒரு நல்ல நோக்கோடு அரசு செயற்படுத்த விழைந்த இலவச உணவுத் திட்டம் தன்னுடைய இலக்கை அடைய முடியாமல் திண்டாடுகிறது எனலாம்.


இதுதவிர மாணவர்களின் மனோ நிலையில் பாதிப்பை உண்டு பண்ணக் கூடிய இறுக்கமான நடைமுறைகளைப் பல பாடசாலைகள் கடைப்பிடிப்பதும் இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணமாகின்றது. எல்லா மாணவர்களும் சப்பாத்து அணிய வேண்டும் என்பது இத்தகைய நடைமுறைகளில் ஒன்று. பாடசாலைகளின் கௌரவத்தை மேன்மைப்படுத்தவும் மாணவர்களின் சுகாதார நலனையும் அவர்களின் உருவ ஆளுமையினையும் பேணவும் இவ்வாறு எல்லா மாணவர் களும் சப்பாத்து அணிய வேண்டும் என்று பல பாடசாலைகள் கட்டாயப் படுத்துகின்றன.

எனினும் எல்லா மாணவர்களும் சப்பாத்து அணிய வேண்டும் என்று எந்தவொரு சுற்று நிருபமும் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப் படவில்லை. எனினும் பொதுவாகக் காலணி அணிவது என்பது பார்ப்பதற்கு ஒரு அழகுணர்வையும், ஒழுக்கவுணர்வையும் ஏற்படுத்தும் ஒன்றாகும். இதனால் மாணவர்களைச் சப்பாத்து அணியுமாறு பாடசாலைகள் வேண்டிக் கொள்வதில் தவறேதும் இல்லைத்தான். ஆயினும் இன்றைய பொருளாதார உயர்வு நிலையில் சப்பாத்து ஒன்றை வாங்க வேண்டுமானால் பெருந் தொகைப் பணம் தேவை. ஆனால் அன்றாடம் உழைத்து வாழும் பல குடும்பங்களுக்கு இன்றும் சப்பாத்து வாங்குவது என்பது எட்டாக் கனிதான். அந்தக் குடும்பங் களைச் சேர்ந்த பிள்ளைகள் சப்பாத்து அணியாமல் வெறும் செருப்போடு மட்டுமே பாடசாலைக்குச் செல்கின்றனர். அவ்வாறு செல்கின்ற மாணவர்களை உடனடியாக வகுப்புகளுக்குள் அனுமதிக்காது சப்பாத்து அணியாததற்குத் தண்டனையாக அடித்தல், மைதானத்தைச் சுற்றி ஓடவிடுதல், முதலாம் பாட வேளை முடியும்வரை வெளியிலேயே நிற்கவைத்தல் என்பவற்றை ஆசிரியர்கள் வழங்குவதைத் தினமும் அவதானிக்கலாம். சமீபகாலத்திற்கு முன்னர் வரை கல்வித் திணைக்களத்தில் உயரதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற ஒருவர் இது குறித்து ''எங்களுடைய காலத்தில் பிள்ளைகளை கட்டாயம் சப்பாத்து அணிந்து வரவேண்டும் என்று கூறியதில்லை. சப்பாத்து அணியாத பிள்ளைகளை திருப்பதி அனுப்பியதுமில்லை. அவ்வாறு இருந்த நிலைமை இன்று இவ்வாறு மாறிவிட்டது. இது எந்தவொரு சுற்றுநிருபத்திலும் இல்லாத புதிய விடயம். இப்படியென்றால் எப்படி பிள்ளைகள் பள்ளிக்கு வரும்?'' என்று கருத்துத் தெரிவித்தார்.

எல்லோரும் பிள்ளைகள் சப்பாத்து அணியவில்லை என்பதற்காகத் தண்டிக்கிறார்களே தவிர, அந்தப் பிள்ளை சப்பாத்தை அணியமுடியாமல் போன காரணத்தை அறிவதற்கோ அல்லது சப்பாத்தைப் பிள்ளை வாங்குவதற்கு வேண்டிய நடைமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கோ எவருமே தயாராய் இல்லை. இதனால் பாடசாலையை நினைத்தாலே பிள்ளைகளுக்கு இயல்பாகவே வெறுப்புணர்வு தோன்றும். நாளடைவில் இதுவே அந்தப் பிள்ளை பாடசாலைக் கல்விக்கு முழுக்குப்போட்டுவிட ஏதுவாகின்றது.

இதைவிடப் பாடசாலை விழாக்கள், சஞ்சிகை வெளியீடுகள், அபிவிருத்தி நிதிகள் போன்ற காரணிகளை முன்வைத்து நாளும் பொழுதும் மாணவர்கள் பணத்தினைச் செலுத்தவேண்டிய நிலையும் காணப்படுகின்றது. அதன்போது அவர்களுடைய பொருளாதாரப் பின்புலம் கணக்கில் கொள்ளப்படுவது அரிதாகவே உள்ளது. எனவே இத்தகைய செலவீனங்களுக்காக வறுமையான சூழலில் வசிக்கும் மாணவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். நாளாந்த வேலைசெய்து உழைக்கும் பெற்றோர் இத்தகைய பெருந்தொகையான பணத்தைப் பாடசாலை நிர்வாகம் குறிப்பிடும் திகதிக்குள் செலுத்தமுடியாதிருப்பதால் வேறுவழியின்றித் தமது பிள்ளைகளின் கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, அவர்களையும் தங்களைப் போல அன்றாடம் காய்ச்சிகளாக்க முயல்கின்றனர்.

மாணவர் உள நலனுக்கு இத்தகைய



ஏராளமான எதிரான செயற்பாடுகளைப் பாடசாலைகள் கொண்டுள்ளன. இத்தகைய செயற்பாடுகளும் இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணியா கிறது என்பதை மறந்துவிட்டு, பாடசாலையை விட்டு விலகும் மாண

– ஒளண்யன் –

வர்களின் எண்ணிக்கை அதிகரித் துக்கொண்டே செல்கின்றது என்று பாடசாலைகளும், கல்வித் திணைக்கள அதிகாரிகளும் புலம்புவதில் எவ்வித நியாயமும் இல்லை. எனவே இனி யாவது பாடசாலைச் சமூகங்கள் விழித்துக்கொண்டு மாணவர் நலனுக்கு எதிரான செயற்பாடுகளைக் குறைத்து, இடைவிலகிய மாணவர்கள் என்ற ஒரு பதம் எதிர்காலத்தில் இல்லாது ஆக்க உழைக்கவேண்டும். மனவிருப்புடன் செய்வார்களா? **********

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு புதிதாக ஆட்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்கு அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மே[illegible]ள்ளப்பட வுள்ளது.

மானிப்பாய் பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்களை பொருத்தமானவர்களிடம் இருந்து கோரியுள்ளார்.வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட ஆண் விண்ணப்பதாரிகள் மட்டும் இதற்கு தகுதியுடையவர்கள். விண்ணப்பதாரி 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் சிறந்த உடல் ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

பதில் நூலக தொழிலாளி, பதில் சுகாதார தொழிலாளி, பதில் காவலாளி ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பதில் நூலக தொழிலாளிக்கு பதவிக்கு ஜீ.சீ.ஈ. சாதாரணதரத்தில் 2 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் உயர்தரப்பரீட்சை மற்றும் நூலக விஞ்ஞானத்தில் சித்திபெற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.

பதில் காவலாளி பதவிக்கு சாதாரண மற்றும் உயர்தரத்தில் சித்தி பெற்றிருப்பதுடன் ஆங்கில மொழியில் சித்திபெற்றிருக்க வேண்டும். பதில் சுகாதார தொழிலாளி பதவிக்கு 10ஆம் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை தலைமை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சபைச் செயலாளர் கேட்டுள்ளார். (04)

## வேலையாள்கள் தேவை

பிரபல கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு வேலையாள்கள் தேவை.

1. காசாளர்
2. சிட்டை எழுதுநர் (ஆங்கிலம் தெரிந்தவர்)
3. விற்பனையாளர்

கையடக்கத் தொலைபேசி விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்.

**யாழ் போன் சொப்,**
இல.9, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P. 0773611282

## கீரை விலை உயர்வு

கோப்பாய், ஏப்.26

யாழ்.நகர் மற்றும் வலி.கிழக்கு பிரதேசத்தில் கீரையின் விலை அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது சந்தைகளில் கீரைப்பிடியொன்று 30 ரூபா தொடக்கம் 40 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பெய்த மழையினால் பெருமளவு கீரைத் தோட்டங்கள் அழிவடைந்தமையாலேயே இவ்வாறு உயர்ந்த விலையில் கீரை விற்பனை செய்யப்படுவதற்கு காரணமென தெரியவருகிறது. (04-72)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் திருமதி கஜனா சசிக்குமார்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி ஜெயரஞ்சினி பரமேஸ்வரன்,**

அன்புச் சகோதரி

**செல்வி ஜனோஜா பரமேஸ்வரன்**

ஆகியோர் காலமானதையிட்டுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தாதிய உத்தியோகத்தர், நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

(84719)

## சித்திர, சிற்பக் கலை போட்டிகள்

நல்லூர்,ஏப்.26

இளைஞர் சேவை மன்றத்தின் சித்திரம், சிற்பக்கலைத்துறைக்கான போட்டிகள் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் தவிர 15 முதல் 29 வயதுக்கு இடைப்பட்ட போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்களும் இதில் பங்குபற்ற முடியும் எனவும் போட்டிக்கு முன்பு இவர்கள் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் இது தொடர்பான விவரங்களை மாவட்ட இளைஞர் சேவை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி ஏ.சக்திவேல் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை வரதராஜா (வரதன்)



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை வரதராஜா கடந்த வியாழக்கிழமை (23.04.2009) அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையாப்பிள்ளை (செட்டியார்)-பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், ஜேர்மனியில் வசிப்பவர்களான தயாழினி, அனா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரனின் அன்பு மாமனாரும், தாரோஸின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

76, ஜின்னா வீதி,
ஒட்டுமடம், .
யாழ்ப்பாணம். (84717)

தகவல்:
**இராமச்சந்திரன் குடும்பம்,**
**பெறாமக்கள்.**


நெல்லியடி
கஜமுகன் மெடிகெயரில்....

★ இன்று (26.04.2009) முதல் நவீன முறையில்
"ULTRA SOUND SCANNING"
சேவை ஆரம்பமாகின்றது

★ OPD சேவை தினமும் யாழ்.பிரபல MBBS வைத்தியர் காலை 9.00-மாலை 4.30 வரை பார்வையிடுவார்.

★ விசேட வைத்தி நிபுணர்கள் சேவை
★ பொது வைத்திய நிபுணர்
★ சத்திரசிகிச்சை நிபுணர்
★ மகப்பேற்று வைத்திய நிபுணர்
★ காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்

இன்று காலை 8.00 க்கு வருகை தரவுள்ளனர்,

★ குழந்தை வைத்திய நிபுணர்
★ கண் சத்திர சிகிச்சை நிபுணர்,
★ இருதய நோய் வைத்திய நிபுணர்
★ வார நாள்களில் இரத்தம், சலம் பரிசோதனை செய்துகொடுக்கப்படும்.

ம.ம.வி.வீதி,
நெல்லியடி, கரவெட்டி
T.P:- 021 226 4875





GET ON THE ROAD TO SUCCESS

HEAD TO CMR, BANGALORE, FOR YOUR EDUCATION.

CMR, Bangalore is synonymous with an intensive and personalised academic experience. CMR is one of Bangalore's leading education groups offering a wide spectrum of courses spread across six campuses in prime locations across the city. Our unique mentorship program monitors students from their arrival in Bangalore, through their course work, to their placements. Our dedicated placement cells are highly proactive in networking with industry and presenting students with promising career options even in these recessionary times.

CMR Institutions have diverse and vibrant student communities of more than 8000 from across the country and ICCR scholars from 31 countries. Technology is extensively used in the teaching learning process, our students regularly secure university ranks and excel in inter collegiate events. Place your trust in a CMR Institution, and get on the road to success.

MBA (VTU) MBA (BU) (DUAL SPECIALISATION) PGDM (INTERNATIONAL BUSINESS & TECHNOLOGY MANAGEMENT)

Admission Contact: S.K. Sivaram, Lakshaya Educational consultant, # 36D, Hampden Lane, Colombo - 06. Sri Lanka
Tel/Fax : 011 2366243, M : +94779703866, E : sksivaram2006@yahoo.com, lakshaya.edu@gmail.com

CMR INSTITUTE OF MANAGEMENT STUDIES
*Affiliated to Bangalore University, Recognised by Government of Karnataka and Approved by the AICTE, New Delhi, Accredited by NAAC. Autonomous status*

UNDER GRADUATE COURSES
BBM-Bachelor of Business Management
BCA-Bachelor of Computer Application
B.Sc. Bio Technology
B.Com-Bachelor of Commerce
(Accredited by Institute of Chartered Accountants of India for CPT Coaching)

POST GRADUATE COURSES
MBA-(Dual Specialisation)
MCA-Master of Computer Application
M.Sc. Bio Technology, M.Sc. Bio Chemistry
M.Com-Master of Commerce
MSW-Master of Social Work
M.Sc. Psychology

CMR LAW SCHOOL
*Affiliated to Bangalore University, Approved by Bar Council of India, New Delhi and Recognised by Government of Karnataka*
LLB 5 years

CMR INSTITUTE OF MANAGEMENT & TECHNOLOGY
*Approved by AICTE, Ministry of HRD-Govt. of India (Autonomous)*
PGDM International Business & Technology Management

CMR INSTITUTE OF TECHNOLOGY
*Affiliated to Visvesvaraya Technological University, Approved by AICTE New Delhi & Recognised by the Government of Karnataka. NBA Accredited*

ENGINEERING PROGRAMMES
Computer Science and Engineering
Information Science and Engineering
Telecommunication Engineering
Electrical and Electronic Engineering
Bio Technology Engineering
Electronics & Communication Engineering

POST GRADUATE PROGRAMMES
MBA-Master of Business Administration
MCA-Master of Computer Application
M.Tech-Computer Science
M.Tech-Digital Electronics
M.Tech VLSI CAD

CMR CENTRE FOR MEDIA STUDIES
*Affiliated to Bangalore University, Recognised by Government of Karnataka and Approved by the AICTE, New Delhi*

B.A. Journalism, Psychology and Communicative English
M.S. Communication
M.Sc. Electronic Media



CMR
GROUP OF INSTITUTIONS

For more information please contact:
Admissions Co-ordinator, C.A. No. 2, 3rd 'C Cross, 6th 'A Main , 2nd Block, HRBR Layout, Bangalore 560 043
T: +91 80 65353899/65971397 | F: +91 80 25424433 | E: info@cmr.ac.in | www.cmr.ac.in


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் தனித்தவிலும் அதீத தன்னம்பிக்கையும்

தமிழகத் தேர்தல் களத்தில் கட்சிகளின் தப்புதாளங்கள் சிரிப்பூட்டுவனவாகவும் அதேசமயம் வியப்பூட்டுவனவாகவும் உள்ளன.


ஜெயலலிதா

முக்கியமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவி ஜெயலலிதாவின் அதிரடி நடவடிக்கைகளும் வினோதமான வியூகங்களும் இதுவரை இல்லாத புதுமைகளைத் தமிழக அரசியலில் புகுத்தியுள்ளது.

வழமையாகத் தரைவழியாக ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு வாகனப் பேரணியாகச் சென்று வழியில் வாக்குச் சேகரிப்பதுதான் அரசியல் தலைவர்களுக்குப் பழக்கமான ஒன்று. பாரிய தூரத்தைக் குறுகிய காலத்தில் உள்ளடக்கித் தேர்தல் பிரசாரம் செய்வதால் இது இலகுவான முறையாக இருந்தது. ஜெயலலிதா இதிலும் வேடிக்கை காட்டத் தொடங்கியுள்ளார். உதாரணமாக, தெற்குமாவட்டங்களில் கடந்த வாரம் பிரசாரம் செய்த அவர் ஹெலிக்கொப்டரில் அங்குமிங்குமாகப் பறந்து சென்று முக்கிய நகரங்களில் மட்டும் பிரசாரக் கூட்டங்களில் பேசியுள்ளார். வீதி வழியாகப்


கருணாநிதி

பயணம் செய்தால் வீதியில் குண்டும் குழியும் இருப்பதாவது புரியும். வானில் பறந்தால் ஏழைகளின் துயர் தெரியுமா என எதிர்க்கட்சிகள் சாடத் தொடங்கி உள்ளன.

இதுதவிர அறிவித்த வேட்பாளர்களை அதிரடியாக நீக்கிப் புதியவர்களை நியமித்துப் புதிய பாரம்பரியம் ஒன்றையும் ஜெயலலிதா அ.தி.மு.கவில் தொடக்கியுள்ளார். இதனால், அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெலவெலத்துப் போயுள்ளனர். ஏனென்றால், சாதாரணமாக வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யும்போது அவர் தேர்தலுக்கு செலவழிக்குமளவு 'பசை' உள்ளவரா எனப்பார்த்தே கட்சிகள் தெரிவு செய்கின்றன. தனக்கு வேட்பாளர் நியமனம் கிடைத்தவுடனே தனது சொந்தப்பணத்தில் வேட்பாளர் தேர்தல்பணியைத் தொடங்கிவிடுவார். இங்கோ வேட்பாளர் அதிரடியாக மாற்றப்படுவதால், பணம் செலவழித்த பிறகு திடீரென நீக்கப்பட்டால் என்ன செய்வது என்ற சிக்கல் உள்ளது. இதனால் வேட்பு மனுத்தாக்கல் செய்து வாபஸ் பெறும் தினம் வரை பொறுத்து செலவைத் தொடங்கலாம் என்ற எண்ணம் அ.தி.மு.க வேட்பாளர்கள் இடையே வலுப்பெற்று வருகிறது.

ஜெயலலிதா தெரிவு செய்த வேட்பாளர்கள் கிட்டத்தட்ட அனைவருமே புதுமுகங்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது, கட்சியில் அவரைத் தவிர செல்வாக்கு என்று எவருக்கும் கிடையாது. அவர் தெரிவுசெய்தால் எவரும் வெற்றி பெறலாம் என்பதான தோற்றத்தை நிரூப்பிக்கவே இந்த ஏற்பாடு எனக் கருதப்படுகிறது. கரூரில் போட்டியிடும் முன்னாள் துணை சபாநாயகரும் மத்திய அமைச்சருமான தம்பித்துரை, சேலத்தில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் செம்மலை தவிர அ.தி.மு.கவில் அனைவரும் புதுமுகங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தான் சுட்டிக்காட்டினால் எந்த புதுமுகத்துக்கும் தமிழக மக்கள் வாக்களிப்பார்கள் என அம்மா இதன் மூலம் நிரூபித்துக்காட்ட முயன்றுள்ளார். அத்துடன் சென்ற தேர்தலில் தோற்றவர்களுக்கும் இடம் ஒதுக்கப்படவில்லை. அதாவது, சென்ற முறை அ.தி.மு.கவுக்கு சிக்கல் நிறைந்த, படுதோல்வி கண்ட தேர்தல். அ.தி.மு.கவின் எந்த வேட்பாளரும் வெல்லவில்லை. அந்தச் சோதனையான தேர்தலில் வென்று கைகொடுப்பவர் களுக்கு இம்முறை நிச்சயமாக இடம் கொடுக்கலாம். மற்றப்படி சென்றமுறை தோற்ற எவருக்கும் இடமில்லை என்பதுபோல் அம்மா நடந்து கொண்டுள்ளார். ஆனால், 1996இல் சட்டசபை மற்றும் லோக்சபா தேர்தலில் அ.தி.மு.க. அரசு படுதோல்வி கண்டு அம்மாவும் தனது தொகுதியில் தோற்றபோது அ.தி.மு.க சார்பில் வென்ற 4 எம்.எல்.ஏக்களில் ஒருவரான திருநாவுக்கரசுவுக்கு அம்மா பின்னாளில் எந்த கௌரவமும் அளிக்கவில்லை. ஆக, வென்றாலும் தோற்றாலும் அம்மா நினைத்தபடிதான் நடப்பார் என்பதை மீண்டும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

ஏற்கனவே பி.ஜே.பியுடன் தேர்தல் கூட்டணி வைக்க மறுத்து விசித்திரமான அரசியல் வியூகத்தை வகுத்த ஜெயலலிதா இப்போது ம.தி.மு.க, மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர்களின் அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டுள்ளார். எனினும், இவர்கள் கூட்டணியில் தொடர்கின்றனர். குறிப்பாக ம.தி.மு.க தொண்டர்கள் ஜெயலலிதா மீது கடும் வெறுப்பில் உள்ளனர். வைகோவும் சென்றமுறை போலன்றி அ.தி.மு.கவுக்காக தமிழ்நாடு முழுவதும் சூறாவளிப் பிரசாரம் செய்யப் போவதில்லை என்று தெரிகிறது.

ஆனால், இவை குறித்து ஜெயலலிதா சிறிதளவாவது கவலைப்படுவதாகத் தெரியவில்லை. வைகோவின் பிரசாரத்தில் தனது வெற்றி தங்கியில்லை; பி.ஜே.பியுடன் வைக்கும் கூட்டணியிலும் வெற்றி தங்கியிருக்கவில்லை எனக் காட்ட இந்தத் தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்பது அவர் திட்டம். அப்படியென்றால் கூட்டணியே வேண்டாமென்று அ.தி.மு.க மட்டும் போட்டியிட்டிருக்கலாமே என்ற கேள்வி எழுகிறது. அதற்கும் ஜெயலலிதா அகராதியில் தகுந்த பதில் உள்ளது. அதாவது, பா.ம.க போன்ற கட்சிகளுடன் கூட்டணி என்று பாச்சா காட்டாவிட்டால் அவை தி.மு.க கூட்டணியில் எப்படியும் சேர்ந்துவிடும். இதில் நிச்சயம் ஆபத்து உள்ளது. எனவே, தி.மு.க கூட்டணி வலுவடைவதைத் தடுக்கவே பா.ம.கவை சேர்த்துக்கொண்டாரே அன்றி தனது அணியைப் பலப்படுத்த பா.ம.கவின் உறவு அவசியம் எனக்கருதியதால் அல்ல. பா.ம.கவுக்கு வெற்றி பெறவே முடியாத தொகுதிகளை ஒதுக்கியதிலிருந்து இந்த உண்மை புலனாகும்.

ஒட்டுமொத்தத்தில் இந்தத்தேர்தல் போட்டி ஜெயலலிதாவின் தனித்தவில் என்று சொன்னால் மிகையாகாது. இது தி.மு.க தலைவரால் கூட புரிந்து கொள்ளமுடியாத விசித்திரமான அரசியல் வியூகம் எனலாம். இதனால் தி.மு.கவுக்கு நன்மையே! ஆனால், தி.மு.க அணிக்குப் பல பிரதிகூலங்கள் இருப்பதால் ஜெயலலிதா இந்த அதி விசித்திர அரசியல் வியூகத்துக்கூடாகவும் வெற்றி பெறக் கூடும். முதலாவது,

**- எஸ்.சுரேந்திரஜித்-**

தி.மு.க அரசு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டாத தவறாகும். இந்திய தேசத்தில் பீஹார், ஜார்கான்ட், உத்திரப்பிரதேசம், ஒரிசா போன்ற படிப்பறிவு குறைந்த வடமாநிலங்களில் ரௌடிகளின் தர்பார் சர்வ சாதாரணமானதாகும். ஆனால், இவற்றைவிடப் படிப்பறிவு கூடிய தமிழகத்தில் கட்டப் பஞ்சாயத்து, கப்பம் போன்ற விடயங்கள் மக்களால் வெறுக்கப்படுபவையாக மாறிவருகின்றன. மத்தியதர, மேல்மத்திய தர வகுப்பு மக்கள் கல்வியறிவு காரணமாக ரௌடி தர்பாரை மாநில அரசு கட்டுப்படுத்த வேண்டுமென வெகுவாக எதிர்பார்க்கின்றனர். ஆனால், தி.மு.க. அரசு இதில் மெத்தனமாக உள்ளது. இத்துடன் கூட்டணிக்கட்சியான காங்கிரஸுக்குள் உள்ள குத்துவெட்டும் குழிபறிப்பும் தி.மு.கவுக்கு பெரும் தலைவலியாக உள்ளது. [illegible] காங்கிரஸ் போட்டியிடும் ஒரு தொகுதியில் தி.மு.க - காங்கிரஸ் உள்ளூர் தலைவர்கள் தேர்தல் கூட்டணியின் வெற்றிகுறித்து ஆராயக் கூடியிருந்தனர். அதில் காங்கிரஸ்காரர்கள் தமக்குள்


விஜய்காந்த்

அடிபட தி.மு.கவினர் அவர்களைச் சமரசம் செய்துவைக்க நேர்ந்தது. இதுதான் தி.மு.கவின் நேசக் கட்சியின் நிலை. தி.மு.கவுக்குள் ஓரளவு ஜனநாயகமும் கட்டுப்பாடும் இருந்தும் காங்கிரஸில் இது மருந்துக்கும் கிடையாது. இந்தச் சுமைகளைச் [illegible]து தேர்தலில் வெல்ல கலைஞரால் முடியுமா என்பது கேள்வியே.

எனினும், கலைஞருக்கு நிம்மதி தரும் விடயம் அம்மாவின் தான்தோன்றித்தன அரசியலாகும். மேலும் விஜயகாந்த், அம்மாவின் வாக்குகளில் கணிசமானதை சுருட்டிக் கொண்டுவிடுவார் என்பதும் நிச்சயம். எனவே, தி.மு.கவுக்கு சாதகமான அம்சங்களும் இருக்கவே செய்கின்றன. ஆனால் தமிழகத்தில் 1984இற்குப் பிறகு மாநில ஆளும்கட்சி லோக்சபா தேர்தலில் வென்றதே கிடையாது என்பதே வரலாறு. அந்தவகையில் பார்த்தால் தி.மு.க தோல்வியடையவே வேண்டும். இந்த வரலாற்றைக் கலைஞர் மாற்றுவாரா என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விடயம்.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை அவர் வெற்றி தனக்கே என்ற பூரிப்பில் உள்ளார். அடுத்த பிரதமர் தானே என மார்தட்டிக் கொள்ளாவிடினும் அடுத்த பிரதமரைத் தானே தீர்மானிக்கப்போவதாக வெளிப்படையாகக் கூறியும் உள்ளார். சென்ற தேர்தலுக்குப் பிறகு மன்மோகன் சிங் பிரதமராக வருவதை தீர்மானிப்பதில் கிங் மேக்கராக விளங்கியவர் கருணாநிதி. இம்முறை அந்தப் பாத்திரம் தனக்கு கிடைக்கும் என அம்மா எற்கனவே கூறிவிட்டார். ஜெயலலிதா இப்படி சொல்வதை கேட்க பல தலைவர்கள் விழி பிதுங்கத் தொடங்கியுள்ளனர். பி.ஜே.பி. மற்றும் மூன்றாம் அணித்தலைவர்களே இவர்கள். இவர் சொல்வதுபோன்ற ஒருநிலைமை ஏற்பட்டால் தமது நிலை அதோ கதிதான் என்பது இவர்களுக்குத் தெரியாததல்ல. 30 தொகுதிகளைத் தாண்டுவது என்பதுதான் அம்மாவின் இலக்கு. ஆனால், இது இலகுவான விடயமல்ல. 22 - 25 தொகுதிகள் என்பதுதான் அ.தி.மு.க. பெறக்கூடிய அதி உச்சம் எனலாம். இதை விட குறையவும் வாய்ப்புள்ளது. விஜயகாந்த் கட்சியின் வெற்றி தோல்வியை பொறுத்தே இது அமையும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டல் கருத்தரங்கு

*After O/L, A/L What next?*

*Make wise decision*

(காத்திரமான முடிவை எடுங்கள்)

வழிகாட்டல் கருத்தரங்கு 10.00 a.m

29th April 2009 நடைபெறும்.

இடம் : யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை.

மேலதிக விவரங்களுக்கு:

*Director,*

*Jaffna college Institute of Technology,*

*Vaddukoddai.*

Tel.No: 060-2213139 / 021-2228275

Registered under Tertiary & Vocational Education Commission (TVEC)


## 31 ஆம் நாள் நினைவுகளும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்:
14.04.1932

இறைவன் அடியில்:
27.03.2009

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியில் வசித்தவருமான

### அமரர் இராசு குலமணி

குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின் இருப்பிடமாய்
நற் பண்புகளுடன் எம்மை வழிநடத்திய
எங்கள் அன்பு அம்மாவே! எம் உயிர் உள்ள ஒவ்வொரு கணமும்
உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்துகொண்டிருப்போம்...

கடந்த (27.03.2009) அன்று இறைபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கின் இறுதிக்கிரியைகளில் உதவி புரிந்தோருக்கும் தொலைபேசியினூடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் அஞ்சலி செலுத்தியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

No.45/6 Z Kalani Ganga
Mill Road,
Mattakuliya, Colombo-15

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 0112521856

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
26 . 04 . 1938



மறைவு
26 . 04 . 2003

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் கனகசபை அரசரத்தினம்

(ரிப்போட்டர்)

காற்றோடு கலந்து ஆண்டு- ஆறு ஆனதுவே
தேறுதல் சொல்ல யார் இருந்தென்ன
உங்கள் திருமுகம் காண்பது போலாகுமோ
எப்போ எம்மோடு உரையாட வருவீரென்று
உங்கள் ஆருயிர் அன்பிற்காய் காத்திருக்கின்றோம்.

ஆத்மா சாந்தி பெற அனுதினமும் பிரார்த்திக்கும்

நீங்காத நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

MRS. J. ARASARATNAM,
56, Thorndon Gardens,
EPSOM, SURREY, KT 19 OQW LONDON.


## அருள் முருகன் திருமண சேவை

மிக இலகுவான, விரைவான திருமணங்களையும் தகுந்த மணமக்களையும் எதிர்பார்ப்போர், இங்குள்ள சாதாரண- உயர்- அதியுயர் தகுதிகளிலுள்ள ஏராளமான மணமக்களில் தெரிவுகளை மேற்கொள்ளலாம். மணமக்களதும் குடும்பங்களதும் எதிர்பார்ப்புகளதும் விவரங்களுடன் வரவும் "வரவியலாதவர்கள்" மட்டும் இவ் விவரங்களை தெளிவுறவும் முழுமையாகவும் விளக்கமாகவும் உடன் எழுதி அனுப்பலாம். மூன்று வீதத்திலும் குறைவான- வரையறை செய்யப்பட்ட சேவைக் கட்டண வசதிகளும் உறுதியான திருமணங்களும் இப்பணியகத்தின் சிறப்பம்சமாகும்.

ஆசிரியர் ஒருவரின் (B.A.Diploma.S.L.T.S -I) ஓய்வுகாலத்தை நிறைவு செய்கின்ற உன்னத சேவைகள் இவை!! 03, யாழ் வீதி, (பெருமாள் கோயில் சமீபம்) சிறாம்பியடிலேன், யாழ்ப்பாணம். TP: 2229334 (இரவு 9.30வரை)

## மாங்கல்யா திருமண சேவை

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலை செய்யும் இருபாலாரது குறிப்புகள் முழுவிவரங்களுடன் உண்டு. நம்பிக்கையான, திருப்தியான, துரிதமான சேவை. ஜாதக குறிப்புகள் எம்மிடம் சகல இடங்களிலும் இருந்து கிடைத்த வண்ணம் உள்ளன. தேர்விற்கு சகல நாள்களிலும் ஒரு மணிக்குப் பின் நேரில் தொடர்புகொள்ளலாம்.

*தொ.பே.:* 021 222 6043 *மொ.இல.:* 0771386846

கு.திருவிளங்கம்,

90. சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு.


## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னதநிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

அடியார்.


## திருமண சேவை

மணமக்களே! WWW.thaalee.com என்கிற Website இல் பல்லாயிரக்கணக்கான மணமக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப்படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களுடைய விவரங்களை யும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு
தொ.பே.: 2523127,2520619. முகவரி: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு- 15


## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்.26

சண்டிலிப்பாய் வடக்கு ஸ்ரீ ஞான வைரவர் சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் செ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் மேற்கு முன்னாள் பிரதேசசபைத் தலைவர் வே.மகேந்திரன் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். (204)

## உடுபுடைவைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

இலங்கை அமெரிக்கன்மிசன் திருச்சபையின் யாழ்.பிராந்தியத்தினர் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு வழங்கவென நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகளை கடந்த வியாழக்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கையளித்துள்ளனர்.

இந்த உடுபுடைவைகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தங்கியுள்ள 750 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 224 பேருக்கு உடனடியாக விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-207)


## Spoken English & INTERNATIONAL ESOL

City & Guilds

இந்த இரண்டு பரீட்சைகளிலும் சித்தியடைந்தால் உலகம் முழுவதும் அங்கீகாரம் பெற்ற City & Guilds இன் Diploma வைப் பெறமுடியும்.

The International ESOL Diploma Covers all four language skills; Reading, Writing, Listening and Speaking

இந்தப் பரீட்சைகள் ஐந்துமட்டங்களில் (Five Levels) நடைபெறும்

- எல்லோருக்கும் ஏற்றதோர் பாடநெறி இரண்டு பரீட்சைகளையும் ஒரே நேரத்தில் எடுக்கவேண்டும் பரீட்சைகள் கொழும்பிலே நடைபெறும். போக்குவரத்து ஒழுங்குகள் தங்குமிட வசதிகள் போன்றவை ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.
- குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற; சரளமாக எந்த சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச; இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத; எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாக படிக்க ஏற்ற ஓர் பாடநெறி
- பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கட்கு சான்றிதல் வழங்கும், Awards Ceremony வைபவம் பண்டாரநாயக்க சர்வதேச நினைவு மண்படத்தில் (BMICH) உரிய சாலத்தில் நடைபெறும்.

### Course Schedule

Mon - Tue - Wed - Thu

| | |
|---|---|
| Duration | 4 Months (120 hours) |
| Time | 08.00 a.m - 10.30 a.m |
| Commencement | 4th May 2009 |

புதிய வகுப்புக்கள் 04.05.2009 இல் ஆரம்பமாகின்றன.

BRITISH COLLEGE OF ENGLISH
City & Guilds Implementation Partner
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P: 060 - 221 - 6027 - 0778803887


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
18.12.1935

இறப்பு
26.04.2002

### திருமதி கனகரத்தினம் புஸ்பராணி

எம் வாழ்வின் விளக்கே! வற்றாத கடலே!
தாயென்று உயரிய பேரன்பின் உறவே!
வாழ்கின்ற காலத்தில் உனை வருத்தியே வாழ்ந்தாயம்மா!
நீ போகின்ற போது எம் புன்னகையும் மறைந்ததம்மா!
மீண்டும் பிறப்பெடுத்து எம் வாழ்வில் கலந்திடம்மா!

சாமியன் அரசடி, யூனியன் லேன்,
கரவெட்டி.

கணவர், பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
03.05.1939

மறைவு:
24.03.2009

### திருமதி கந்தவனம் சரஸ்வதி

குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
நற்பண்புகளுடன் எமை வழி நடத்தி
எமக்காகவே வாழ்ந்த எம்
அன்புத்தெய்வமே!
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாப் பயணம் சென்றாயோ!
எம் உயிருள்ள ஒவ்வொரு கணமும்
உங்கள் நினைவுடன் வாழ்வோம்...

6/2, புறூடி முன் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

மன நெகிழ்வுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏறக்குறைய 65 ஆண்டுகளுக்கு முன்னர், 1940 துகளின் முற்பகுதியில், அமெரிக்காவின் 'வாட்டர் ரவுண்' என்ற சிறிய நகரப் புறமொன்றில் இடம்பெற்ற உண்மைச் சம்பவமொன்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது இக் கதை. "ஒக்ராவுஸ் ரோய் கோஹன்" என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கதையைத் தழுவிய தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.

# பழைய டாக்டரும் புதிய டாக்டரும்

## ஓர் உண்மைக்கதை

## தமிழில் 'பேபி'

**1940** களில் அமெரிக்காவில் ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு சிறிய நகரம் அது. அந்த நகரத்திற்கான வைத்தியசாலை ஒரு பழைய கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருந்தது. அங்கே பணியில் இருந்த ஒரேயொரு வைத்தியர் ஜோசப் எச்.வோல்ட்டன் என்னும் அர்ப்பணிப்புள்ள சேவையாளர். எம்.டி.பட்டம் பெற்ற பின்னரும் அச் சிறிய நகரத்தில் பணியாற்றுவதை விரும்பி ஏற்றுக் கொண்டவர். மிகவும் சிநேகபூர்வமாக எல்லோரிடமும் அவர் பழகும் காரணத்தினால், அரவது இயற்பெயர் மறைந்து ஜோ மாமா (அங்கிள் ஜோ) என்ற பெயரே நகரவாசிகளிடையே பிரபலமாகிவிட்டிருந்தது. அங்கிள் ஜோ என்று சொன்னால்தான் சிறு குழந்தையும் புரிந்துகொள்ளும்.

பிரசவம் பார்ப்பதிலிருந்து எல்லாவிதமான வைத்திய சேவைகளையும் அவர் அந்த நகரவாசிகளுக்கு இரவு பகல் என்று பாராமல், சலிக்காமல் பல வருடங்களாக அளித்துக் கொண்டு வந்ததை எல்லோரும் நன்றியோடு நினைவுகூரும் நிலை இருந்தது. உண்மையில் அந்த நகரத்திலுள்ள முக்கால்வாசி வாலிபர்களும், யுவதிகளும், குழந்தைகளும் அவர் மூலம் தான் இவ்வுலகத்தையே கண்டிருந்தனர்.

இரவோ, பகலோ, மழையோ, வெயிலோ, யார் அழைத்தாலும் தனது பழைய காரில் நேரில் அவர்கள் வீடுகளுக்குச் சென்று வைத்தியம் பார்த்து நோயாளிகளை ஆறுதல் படுத்துவது அவரதுவழக்கம்.

நகரம் அபிவிருத்தி யடைய, வைத் திய சேவைகளை யும் விஸ்தரிக்க நிர்வாகம் முடிவெடுத்தது. அதன் பயனாக மேலிடம் இளமையான, சமீபத்திலே பட்டம் பெற்ற டாக்டர் 'கெண்ட்' என்ற வைத்தியரை அந்த வைத்திய சாலைக்கு மேலதிகமாக நியமித்தது. உண்மையில் டாக்டர் ஜோவுக்கு ஏறத்தாழ ஒரு மேலதிகாரியாகத்தான் டாக்டர் கெண்ட்டின் நியமனம் அமைந்தது.

ஓர் இளைஞர் தனக்கு மேலதிகாரியாக வருகிறாரே என்ற எதுவித காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் அவரை வரவேற்க எல்லா விதமான ஒழுங்குகளையும் டாக்டர் ஜோவே முன்னின்று செய்து முடித்ததுடன், அவர் வசதியாகத் தங்குவதற்கான இடத்தையும் ஒழுங்கு செய்ததை எல்லோரும் வியப்புடன் நோக்கினர்கள்.

1945 ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் டாக்டர் கெண்ட் அந் நகரத்துக்கு வந்து வைத்திய சாலையைப் பொறுப்பேற்கும் நாள், டாக்டர் ஜோ மலர்ந்த முகத்துடன் அவரை வரவேற்றுத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.


இளைஞனான டாக்டர் கெண்ட்டும் சிநேகபூர்வமில்லாத விதத்தில் ஓர் உத்தியோகத் தோரணையில் தன்னை அறிமுகம் செய்து கொண்டதை எல்லோரும் அவதானித்தனர்.

ஆனால் எதுவித உணர்ச்சிகளுமில்லாமல் சந்தோஷமான முகத்தோடு டாக்டர் ஜோ சொன்னார், "உண்மையில் உங்களைப் போன்ற ஓர் இளைஞர் இங்கு வரவேண்டுமென்பது எனது நீண்ட நாள் ஆசை. இனி நான் சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு படகுச் சவாரி கூடச் செய்து மகிழலாம்"

டாக்டர் கெண்ட் தன்னுடைய தொழிலைத் தொடங்கியபோது அதில் ஒரு வேகம், திறமை இரண்டும் கலந்து இருந்தன. ஆனாலும் ஒரு நட்புக் கலந்த அந்நியோன்யம் நோயாளிகளுக்கும் அவருக்கும் இடையே நிலவவில்லை.

இருந்தபோதிலும், அநேகமான இளைஞர்களும் யுவதிகளும் டாக்டர் கெண்ட்டிடம் வைத்தியம் பார்ப்பதையே விரும்பினார்கள். இளைஞர்களின் அபிப்பிராயப் படி, டாக்டர் ஜோ வயது முதிர்ந்த, நவீன வைத்திய முறைகளை அறியாத ஒரு பழங்கால வைத்தியர். இக் காலத்துக்கு டாக்டர் கெண்ட் போன்றோர்தான் ஏற்றவர்கள்.

டாக்டர் ஜோவோடும் அவர் வைத்தியத்தோடும் பரிச்சயப் பட்டவர்கள் கிட்டத்தட்ட அவர் வயதை ஒத்தவர்களுக்கு இளையவர்களின் இந்தப் போக்குப் பிடிக்கவில்லை.



டாக்டர் ஜோவின் தன்னலமற்ற சேவைகளை அவர்கள் மறந்து விட்டார்கள் என்று எண்ணினார்கள். இதைப் பற்றி இளைய சமுதாயத்தோடு முரண்படவும் மூத்த பிரஜைகள் பலர் முயற்சித்தபோது, புன்னகையுடன் அதைத் தடுத்தவரும் டாக்டர் ஜோதான். அவரின் வாக்கைத் தேவவாக்காக எண்ணும் பலர் இன்னும் அங்கே இருந்ததால், இந்த விடயம் அப்படியே அடங்கிப் போனது.

அது மட்டுமல்லாமல் டாக்டர் கெண்ட்டின் அறிவு, திறமை என்பவற்றைப் பற்றி டாக்டர் ஜோ பலர் மத்தியில் புகழ்ந்து பேசவும் ஆரம்பித்தார். டாக்டர் கெண்ட்டின் பெயர் நாளுக்கு நாள் பிரபலமடையத் தொடங்கியது.

இருந்தாலும் ஒரு சிலர் இரண்டு டாக்டர்களுக்குள் இடையே இருந்த வித்தியாசத்தைப் பற்றியும் தங்களுக்குள் பேசிக் கொள்ளத் தவறவில்லை.

டாக்டர் கெண்ட் நோயாளியொருவரைப் பரிசோதிக்கும்போது அவர்கள் சொல்வதை உணர்ச்சியற்ற முகத்தோடு கேட்டுவிட்டு, அவர்களிடம் ஒற்றை வார்த்தையில் சில கேள்விகளைக் கேட்டுவிட்டு நீண்ட, புரியாத ஒரு மருந்துப் பட்டியலைத் (பிரிஸ்கிரிப்ஷன்) தயாரித்து அவரிடம் கொடுப்பதோடு சரி. அடுத்து மற்ற நோயாளியின் பக்கம் அவர் கவனம் திரும்பிவிடும்.

ஆனால் அங்கிள் ஜோவின் அணுகுமுறையோ வேறுவகையானது. நோயாளிகள் தங்களுக்குள்ள பிரச்சினைகளைக் கூறும்போது, இடை யிடையே சில ஜோக்குகளையும் கூறுவார். நோயாளிகளைச் சிரிக்கப் பண்ணுவார். அவர்கள் குடும்ப விடயங்களைப் பற்றி இடையிடையே கேட்டுத் தெரிந்து கொள்வார். கடைசியில் நோயாளி தன் நோயைப் பற்றிக் கூறிமுடித்ததும், "அட, இதுக்குப் போய்த்தான் இங்கு வந்தீர்களா? உங்களுக்கு ஒரு குறையும் இல்லை. நேற்று வயலில் கொஞ்ச நேரம் அதிகம் வேலை செய்ததால்தான் இப்படியிருக்கிறது. இந்த மருந்தைக் குடியுங்கள். எல்லாம் சரியாகி விடும். நாளை மாலை என் னோடு ஒரு கேம் டென் னிஸ் விளையாட உங்களுக்கு நேரம் இருக்குமா?" என்று கேட்டு முதுகில் ஆறுதலாக இரண்டு தட்டும் தட்டி விடுவார். நோயாளி அப்போதே பூரண குணமடைந்துவிட்டது போல் நேர் நடையுடன் கம்பீரமாக வெளியே நடந்து போவார்.

அத்துடன் இன்னுமொரு முக்கிய விடயம் இருந்தது. டாக்டர் கெண்ட் மிகவும் கண்டிப்பான ஓர் உத்தரவையும் பிறப்பித்திருந்தார். அதாவது மிக மிக அவசரமான ஒரு தேவைக் காக மட்டுமே தன்னை இரவில் அழைக்கலாம். அது அவசரம் என்பதை அழைப்பவர் தரும் விவரங்களிலிருந்து அவரே தீர்மானிப்பார். நிச்சயமாக ஒரு வைத்தியர் போகத்தான் வேண்டும் என டாக்டர் கெண்ட் நினைத்தால்தான், அவர் நோயாளியின் வீட்டுக்குப் போவார். இல்லையென்றால் அடுத்தநாள் காலை வரை நோயாளி காத்திருந்து வைத்திய சாலைக்கு வரவேண்டும்.

இதைக் கேள்விப்பட்ட டாக்டர் ஜோ ஒரு நாள் டாக்டர் கெண்ட்டிடம் மிகவும் பணிவாகக் கீழ்க்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

"இந்த நகரவாசிகள் மிகவும் பயந்த சுபாவம் கொண்டவர்கள். ஒரு சின்ன விடயத்துக்கும் பயப்படுவார்கள். ஆகவே நாங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுத்தால் - அதுவும் இரவில் - நல்லதல்லவா? நீங்கள் இந்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் கொஞ்சம் தளர்வுப் போக்கைக் காட்டமுடியாதா?

அதற்கு டாக்டர் கெண்ட் சிறிய புன்முறுவலுடன் கூறினார். "டாக்டர் ஜோ, உங்களுக்கே தெரியும் இப்படி அழைப்பவர்களில் 99 வீதமானவர்கள் வீண்பயத்தினால் தாங்களும் பயந்து எங்களையும் ஓய்வெடுக்க முடியாமல் செய்து விடுகிறார்கள். போய்ப் பார்த்தால் தான் தெரியும் அது வீண் மனப்பிரமை என்பதும் எமது வைத்தியம் உடனடியாகத் தேவை யில்லை என்பதும், சாதாரணமாக ஒரு தலைவலிக்குக் கூட எம்மை இரவு 3 மணிக்கு அழைப்பார் கள். அதற்காக என்னை கருணையில்லாத வன் என்று நினைக்காதீர்கள்.



நோயாளிகளை நான் நாள் முழுவதும் பரிசோதிக்கலாம். ஆனால் வைத்தியரான என்னை தங்களது அடிமை அல்லது எப்போது அழைத் தாலும் நான் வாசலில் நிற்பேன் என்று அவர்கள் எதிர்பார்க்கக்கூடாது அல்லவா?"

இதைக்கேட்டு டாக்டர் ஜோ சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு மீண்டும் டாக்டர் கெண்ட்டைப் பார்த்து கூறினார்.

"சரி டாக்டர் கெண்ட் எனக்கு நீங்கள் தயவு கூர்ந்து ஓர் அனுமதி தரவேண்டும். உங்களுடைய நோயாளிகள் யாரேனும் இரவில் உங்களை அழைத்தால், தயவு செய்து அந்த விடையத்தை நான் கையாளலாமா?"

"உங்களுக்கு வேலைப் பளு அதிகம் என்று தான் என்னை நியமித்தார்கள். நீங்கள் கேட்டுக்கொண்டதை அனுமதித்தால் என் வேலைப் பளுவையும் நீங்கள் எடுத்துக் கொள்வதாக ஆகாதா?"

"இல்லை டாக்டர்! நான் ஒருபோதும் அப்படி எண்ண மாட்டேன். தயவு செய்து இதற்கு நீங்கள் அனுமதி தந்தால் உங்களுக்கு நன்றியுடையவனாக இருப்பேன்."

"நல்லது டாக்டர். அதுதான் உங்கள் விருப்பமானால், நான் அதற்குத் தடை சொல்லவில்லை. இனி இரவில் எனக்கு வரும் அழைப்புக்களை, உங்களுக்கு தெரியப் படுத்தும் படி நான் எனது காரியதரிசிக்கு கூறிவைக்கிறேன்."

## இலக்கியப் பொழில்

"நன்றி டாக்டர்"

அன்றில் இருந்து எந்த இரவில் யார் அழைத்தாலும் சரி அது இருவரில் எவருடைய நோயாளியானாலும் சரி, டாக்டர் ஜோ அழைப்புக் கிடைத்த இடங்களுக்கு எல்லாம் போய் நோயாளிகளைக் கவனிக்க தொடங்கினார். மழை, புயல், பனி எதுவாக இருந்தாலும், இரவில் எந்த நேரமானாலும், அவரது பழைய கார் பலத்த சத்தத்துடன் ஒவ்வொரு இரவிலும் பலதடவை ஓடித்திரிந்ததை அந்த நகரவாசிகள் கண்டனர்.

டாக்டர் கெண்ட்டின் நோயாளிகளை கவனித்தபோது ஒரு டாக்டர் என்ற முறையில் அவர்கள் ஏன் அழைத்தார்கள், அவர்களுக்கு என்ன வைத்தியம் செய்யப் பட்டது என்கின்ற விவரங்களை டாக்டர் ஜோ டாக்டர் கெண்ட்டிக்கு விவரமாக அறிவிக்கத் தவறவில்லை.

இக்குறிப்புக்களைப் பார்த்த டாக்டர் கெண்ட் மிகவும் ஆத்திரப்பட்டார். டாக்டர் ஜோவைச் சந்தித்து கடிந்து கொண்டார்.

"நான் ஏற்கனவே சொல்லவில்லையா? இவையெல்லாம் அவசியமற்ற விடயங்கள் என்று உங்கள் குறிப்பில் இருந்தே தெரிகிறது. 95 வீதமான அழைப்புக்கள் வீண் பயத்தினால் ஏற்பட்டவையென்று. இனியாவது நான் சொன்ன படி நடந்து கொண்டு இந்த வயதில் சற்று ஓய்வெடுங்கள்" டாக்டர் ஜோவோ புன்னகை மாறாத முகத்துடன் "இல்லை டாக்டர் எனக்கு இது ஒரு சந்தோசமான விடயமே. நான் தொடர்ந்து இப்படிச் செய்ய அனுமதியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார் வேறு வழியில்லாமல் டாக்டர் கெண்ட் மௌனமாக ஒப்புதலளித்தார்.

நாள்கள் நகர நகர டாக்டர் கெண்ட்டின் திறமையும் அறிவும் அங்கே புகழடையத் தொடங்கின. அதே நேரம் டாக்டர் ஜோவை எல்லோரும் உயிராக நேசித்தார்கள்.

அந்த வேளையில்தான் அந்த சிறிய நகரத்தையே உலுக்கிய அந்த கோர பஸ் விபத்து நடந்தது. ஐம்பதுக்கும் மேற்பட்ட பள்ளிப் பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு வந்த ஒரு பேருந்து கோர விபத்தில் சிக்கியதில் நான்கு பிள்ளைகள் ஸ்தலத்திலேயே மரணமடைந்ததோடு, 15 பாலகர்கள் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

(14 ஆம் பக்கம் பார்க்க....)

# மனித வாழ்க்கையின் நிரந்தர உண்மைகள்

வாழ்வில் முன்னேறத் துடிக்கும் நாம், உலகம் ஒரு நியாயத்திற்குக் கட்டுப்பட்டு இயங்கி வருவதை உணரவேண்டும். உலகில் நிகழும் எல்லாவித காரியங்களும் ஒரு காரணத்தின் விளைவாகவே நிகழ்கின்றன. விதையிலிருந்து தான் செடி கிளம்புகிறது. ஓர் எண்ணத்திலிருந்து தான் செயல் பிறக்கிறது. காரணம் இல்லாமல் காரியமில்லை. நாம் ஒரு காரியத்தைத் துவக்கினோமானால் அதன் விளைவுகளை எதிர்பார்க்க வேண்டும். அதற்கு நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்று நமது பெரியவர்கள் அழகாகக் கூறியிருக்கிறார்கள். ஆக, நாம் தொடங்கும் செயல்களின் விளைவுகளிலிருந்து தப்பிக்க முடியாது. திருடுபவர்களும், பொய் சொல்பவர்களும், என்னை ஒருவரும் கண்டுகொள்ளவில்லையே என்ற தன்னம்பிக்கையில் பல சமயம் தவறிழைக்கிறார்கள். அங்கே நியாயம் பார்த்துக் கொண்டிருக்கிறது, உண்மை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

தன் மனைவி கண்ணகியை அழைத்துக் கொண்டு வறியவனாய் மதுரை நோக்கிச் செல்லும் கோவலனைப் பார்த்து மாடலன் கேட்கிறான்: "நானறிந்தவரை இம்மையில் நீ செய்தவை எல்லாம் நல்ல காரியங்கள். எப்படி நேர்ந்தது இக்கதி உனக்கு?" என இளங்கோவடிகள் மறைமுகமாக "ஊழ்வினை வந்து உறுத்த," இப்படி நேர்ந்தது கோவலனுக்கு என்று எடுத்துக் காட்டுகிறார். சில சமயம் விளையும் பலன்களுக்கான காரணங்கள் நமக்குப் புரிவதில்லை. அதற்காக "இவ்வுலகம் தறிகெட்டு நடக்கிறது, வாய்த்தவர்களுக்கு வாழ்க்கை" என்று சிலர் வறட்டுத்தத்துவம் பேசுகிறார்கள். இவ்வுலகில் நமக்குத் தெரியாத - விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்க முடியாத எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன.

இவ்வுலகில் எல்லாவற்றுக்கும் ஒரு காலம் உண்டு என்பதை நாம் உணரவேண் டும். பூக்கள் வசந்த காலத்தில் தான் பூக்கின்றன. பழங்கள் பருவ காலங்களில் தான் பழுக்கின்றன. குழந்தை ஒரு குறிப்பிட்ட வயது வளர்ந்த பிறகுதான் இளைஞனாகிறான். அதே போல சில காரியங்கள் நடப்பதற்கும் சில காலம் நேரம் தேவைப்படுகிறது. ஒரு காரியம் நிகழ்வதற்கு அதற்கேற்ற சூழ்நிலை வேண்டி இருக்கிறது. சூழ்நிலை வாய்ப்பாக அமையப் பல மனிதர்கள், சம்பவங்கள் என்று பல விடயங்கள் சேர்ந்து இயங்க வேண்டி இருக்கிறது.

இந்த உணர்வு தேவை. அதற்கு வேண்டிய பொறுமை தேவை. மனப்பக்குவம் தேவை.

தடி கொண்டு அடித்துக் காயைக் கனியாக்கி விட முடிவதில்லை. இந்த மகத்தான உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொள்ளாதபோது, அவசரப்படும் போது அதற்கு நேர் எதிரான பலன்கள் புறப்படுவதைக் காணலாம். ஒரு குறிப்பிட்ட நாள் அடைகாத்த பின்தான் முட்டை குஞ்சாகிறது. ஒவ்வொன்றுக்கும் ஒரு பருவ காலம் உண்டு.

சதா சிந்தியுங்கள். செயற்படுங்கள், அத்துடன் இயற்கையுடன் ஒத்துப் போங்கள். இரவில் விழித்துக் கொண்டு இருப்பவனுக்கு இரவு நீண்டதாய்த் தோன்றும். நோயில் வாடுபவனுக்கு இரவு நேரம் என்றுமே விடியாத இரவாய்த் தோன்றும். நம் அடிமனத்தில் 'பொழுது விடியப்போகிறது' என்ற நினைவு தேவை. பொழுது விடிவதை எதிர்நோக்கும் மனோபாவம் தேவை. அத்துடன் இரவுக்கெதிராகக் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்வதை விடுத்துவிட்டு இரவையும் ரசிக்கத் தெரிந்தவனே- இரவின் அமைதியையும் குளிரையும் அனுபவிக்கத் தெரிந்தவனே- வாழ்க்கையில் வெற்றி காண்கிறான்.

பொருளும் சக்தியும் ஒன்றே என்ற உணர்வு, நம்மை நமது சூழ்நிலையின் நண்பனாக்குகிறது. அணுசக்தியில் பொருள் உடைந்து சக்தியாக வெளிவருகிறது. மன மருத்துவர்கள் மூளைக்கும் மனத்திற்குமுள்ள தொடர்பைப்

## டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி

பற்றி ஆராய்ந்து வருகின்றனர். அவர்களுடைய அதிசயம், மூளை, என்ற சடப் பொருள், எப்படி எண்ணம் என்கிற சடமல்லாத பொருளாக மாறுகிறது என்பதாகும். கல்லும் மண்ணும், [illegible] மனித இனமும் வெவ்வேறு விழிப்பு நிலை பெற்ற சடப் பொருள்கள் என்ற உணர்வு நமக்கும் நமது சூழ்நிலைக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறது. அதையே "வானில் மின்னும் நட்சத்திரங்களுக்கு இப்பிரஞ்சத்தில் எவ்வளவு உரிமை இருக்கின்றதோ, அதே உரிமை மனிதனாகிய உனக்கும் இவ்வுலகில் இருக்கிறது" என்றார் தத்துவ ஞானி. இதன் மூலம் எல்லாப் பொருள்களையும், எல்லா மனிதர்களையும் சமமாக நோக்கும், அகங்காரமற்ற நிலையில் பார்க்கும் ஓர் அறிவு நம்மை அடைகிறது.

இவ்வுலகம் ஒரு கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. கோள்கள் ஒன்றுக்கொன்று ஒரு பரஸ்பர கவர்ச்சியில், ஈர்ப்புச் சக்தியில் இயங்கி வருகின்றன. மனிதர்களுக்கிடையே நிலவும் அத்தகைய சக்தியைக் கவர்ச்சி என்றும், அன்பு என்றும், காதல் என்றும் கூறுகின்றோம். பிறருடைய உரிமைகளுக்கு ஊறு விளைவிக்காத வகையில் ஒரு கட்டுப்பாட்டுடன், ஒரு நெறியில் நம் வாழ்க்கையை இயக்கும்போது நாம் நமது வாழ்வின் தலைவனாகிறோம். நமது விதியை நாம் நிர்ணயிக்கிறோம். கட்டுப்பாடு இல்லாத, நெறியில்லாத, நிதானமில்லாத வாழ்க்கை, தறிகெட்டு ஓடும் கொம்புக் காளைக்குச் சமமாகும். அது பிறரைப் புண்படுத்துவதுடன் தன் வாழ்விற்கும் ஊறு விளைவித்துக் கொள்கிறது.

உணவு, உழைப்பு, தேகப்பயிற்சி, உடலுறவு என்று எதை எடுத்துக்கொண்டாலும் நெறியில்லாத நிலையில் அதன் விதி என்ன என்று யோசித்துப் பாருங்கள். அளவுக்கு மிஞ்சி உண்பவன் நோய்க்கு ஆளாகிறான். அளவுக்கு மிஞ்சி போகிப்பவனும் அப்படியே தன்னை அழித்துக்கொள்கிறான்.

தமிழிலக்கியத்தில் பேசப்படும் கற்பு அத்தகைய ஒரு நெறியாகும். அந்த நெறிக்கு மகத்தான வலிமை உண்டு. அந்த நெறியுள்ளவர்களால் எதனையும் சாதிக்க இயலும். அவர்கள் எதையும் கண்டு அஞ்சுவதில்லை. பட்டினி, விரதம் என்பவை அந்த நெறியை வளர்க்கும் மனப்பயிற்சிகளாகும்.

நெறிஎன்பது கற்பில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் இருக்க வேண்டிய ஒன்று. துரதிஷ்டவசமாக நம் மக்கள் மத்தியில் கண்ணகியின் கற்பு நெறிகள், பேசப்படுகிற அளவிற்கு [illegible] நெறிகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

*(நன்றி: மனம் - பிரார்த்தனை - மந்திரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத் தலைவர்களை அரசியலில் நெறிப்படுத்தியதன்மூலம் பெரும்பான்மையினரின் மதிப்புக்குப் பாத்திரமான அன்றைய தமிழ்த் தலைவர்கள்

நாடு பிரித்தானிய ஆட்சியாளர் களிடமிருந்து சுதந்திரம் பெற்ற கால கட்டத்திலும் அதற்கு முன்னரும் கூட, இந்நாட்டின் தமிழ்த் தலைவர்கள் நாட்டின் அரசியல் செயற்பாடுகளில் குறிப்


சேர். பொன். அருணாசலம்

பிட்டுக் கூறத்தக்க அளவுக்கு நற்பணி ஆற்றியுள்ளனர் என்பதனை வரலாற்றுத் தகவல்கள் மூலம் வெளிப்படுத்தும் வகையிலான இக் கட்டுரைத் தொடரின் மூன்றாவது பகுதி இதுவாகும்.

**சேர்.பொன். அருணாசலம்**

சேர். பொன். அருணாசலமும் இலங்கையின் சுதந்திரத்திற்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும் பாடுபட்ட ஒருவராவார். 11.12.1916 இல் இலங்கைத்தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டபோது, சேர்.பொன். அருணாசலத்தைத் தலைவராக சிங்களத் தலைவர்களும் இணைந்து தெரிவு செய்தனர். தற்போது அரசாங்கப்பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருக்கும் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகை தனது முதலாவது இதழில் சேர்.பொன். அருணாசலத்தின் ஆசிச்செய்தியையே தலைப்புச் செய்தியாக வெளியிட்டது. "Special message from Sir Pon.Arunachalam" என்ற தலைப்புச் செய்தியுடனேயே 'டெய்லி நியூஸ்' பத்திரிகையின் முதலாவது இதழ் வெளிவந்தது.

**ஹன்டி பேரின்பநாயகம்**

ஹன்டி பேரின்பநாயகம் காந்தி சிந்தனைகளால் கவரப்பட்ட ஒரு காந்தீயவாதி. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என்ற இயக்கத்தை (Jaffna youth congress) ஸ்தாபித்த ஹன்டி 1924 - 34 ஆண்டுகள் காலப்பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடினார்.

1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு அமுலுக்கு வந்த பின்னர் நடைபெற்ற தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளை ஏற்றுத் தமிழ்த் தலைவர்கள் எவரும் தேர்தலில் போட்டியிடவில்லை. இதனால் டொனமூர் மந்திரிசபை தனிச் சிங்கள மந்திரி சபையாக அமைந்தது.

இளைஞர் காங்கிரசின் செயற்பாடுகளை வரவேற்று 4.5.1931இல் 'டெய்லி நியூஸ்' பத்திரிகை ஆசிரிய தலையங்கம் தீட்டியது. அந்த ஆசிரிய தலையங்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

''தூக்கத்தில் மூழ்கியுள்ள நாட்டு மக்களை விழித்தெழச் செய்யும் அம்சமாக யாழ்ப்பாணத்துச் செய்தி விளங்குகிறது. யாழ்ப்பாணத்தில் மக்களின் அபிப்பிராயம் மகத்தான சக்தி வாய்ந்ததாக உள்ளது. அதனை மீறிக் காரியமாற்ற எத்தனிப்பவர்கள் தமது தலையில் தாமே மண்ணை வாரிப் போட்டுக் கொள்பவர்கள் ஆவார்கள். வீறு மிக்கவர்களாகவுள்ள யாழ்ப்பாண மக்கள் இந்த நெருக்கடிக்கு முகம் கொடுக்கக் கூடிய மனத்திடமும் பொது நலப்பற்றும் உடையவர்களாக விளங்குகின்றனர்'' என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

1931 ஆம் ஆண்டு ஜூன் 20- 27ல் வெளிவந்த ''சேர்ச்லைற்'' பத்திரிகையில் பிலிப் குணவர்த்தனா பின்வருமாறு எழுதியுள்ளார். ''அடக்குமுறைக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் சீனா, இந்தியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ்,கொரியா போன்ற நாடுகளில் போராடும் இளைஞர்களோடு தோளோடு தோள் நின்று போராடும் காலம் வருமா என்று நான் ஏங்கியதுண்டு. கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் மட்டுமே இலங்கையில் அரசியல் விவேகத்துடன் செயற்படும் இயக்கமாக விளங்கி வந்துள்ளது.

யாழ்.மக்கள் எமக்கு வழிகாட்டியுள்ளனர். பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து பூரண சுதந்திரம் பெறுவதற்கான போராட்டத்திற்கு அறை கூவும்படி அவர்கள் தமது தலைவர்களை வற்புறுத்தி வந்துள்ளனர்.

மாபெரும் வீரம் பொருந்திய சிங்கள மக்கள் இதன் தாற்பரியத்தை உணர்ந்து அவர்களோடு இணைந்து கொள்வார்களா? மாபெரும் போராட்டம் ஒன்றை நாம் எதிர்கொள்ள இருக்கிறோம். தேர்தல் பகிஷ்கரிப்புத் தீர்மானம் இதற்கான சமிக்ஞை மட்டுமே. நாம் எதிர்கொள்ளவிருக்கும் மாபெரும் போராட்டத்திற்கு வெகுசனங்களைத் திரட்ட வேண்டியது ஒவ்வொரு சிங்களவரினதும் கடமையாகும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க தம்பதியினர் சி.சுந்தரலிங்கம் தம்பதியினருடன் இணைந்து இராணி மாளிகையில் வைத்து எடுத்துக்கொண்ட இப்படம் கே.எம்.டீ. சில்வாவினால் தொகுக்கப்பட்ட D.S.Senanayake Pictorial Biography புகைப்படத் தொகுப்பில் முதலாவது படமாக இடம்பெற்றுள்ளது.

டி.பி.ஜெயதிலக, டி.சி.குலரத்ன, ஜி.கே. டபிள்யூ பெரேரா, பிரான்சீஸ். டீ.சொய்சா, சீ.ஈ.கொரியா, என்,எம், பேரேரா, தகநாயக்க (முன்னாள் பிரதமர்), கொல்வின் ஆர்.டி.சில்வா, கொலின் பெரேரா, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க (முன்னாள் பிரதமர்) உட்பட இந்தியத் தலைவர்களான காந்தி, நேரு, ராஜாஜி, கல்யாண சுந்தரனார். ஸ்ரீமதி கமலா தேவி சட்டோபாத்ய ஆகியோர் யாழ்ப்பாணம் வந்து கூட்டங்களில் உரையாற்றியுள்ளனர்.

**சமஷ்டியை எதிர்த்த யாழ்ப்பாணத் தலைவர்கள்**

முன்னாள் பிரதமர் எஸ்,டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்க 1928ம் ஆண்டு ஜூலை மாதம் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் உரையாற்றினார். பண்டாரநாயக்கா தனது உரையில் சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்குப் பொருத்தமானது எனக் கூறினார். பல வெளிநாட்டு அரசியல் யாப்புகளைத் தனது கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டினார் பண்டாரநாயக்கா.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வேண்டுமெனவும், ஐக்கிய இலங்கை ஆட்சியமைப்பே (Unitary constituition) இலங்கைக்குப் பொருத்தமானது எனவும் வாதிட்டது. (ஆதாரம்:- டிறிபியுன் பத்திரிகை (Tribune) 22.2.1975)

**தேசியக்கொடி ஏற்றப்பட்டது**

23.4.1931 ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்யாய யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார். மூன்று வெண்புரவிகள் பூட்டப்பட்ட இரதத்தில் கமலாதேவி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். தொண்டர்கள் யாவரும் கதராடையும் காந்திக் குல்லாயும் அணிந்து கமலா தேவியை வரவேற்றனர். இக் கூட்டத்தில் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. சிவப்பு, பச்சை, மஞ்சள் நிறங்கள் தேசியக் கொடியை அலங்கரித்தன. சிவப்பு முஸ்லிம்களையும், பச்சை தமிழர்களையும், மஞ்சள் சிங்களவர்களையும் குறிப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(ஆதாரம்: Ceylon morning Leader 28.04.1931)

பிரிட்டிஷ் கொடியை எரிக்கும் நடவடிக்கையிலும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் ஈடுபட்டது.

(ஆதாரம்: Handy Perinbanayagam memorial lecture Paper - Seelan Kathirgamar)

**டி.எஸ்.சேனநாயக்கவின் ஆலோசகர் சுந்தரலிங்கம்**

இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் அரசியல் வழிகாட்டி பேராசிரியர் சுந்தரலிங்கம் ஆவார்.

## யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் கட்டுக்கோப்பும் ஒற்றுமையும் சிங்கள அரசியல்வாதிகளை ஆச்சரியப்பட வைத்தது

ஆதாரம்: 1960 ஆம் ஆண்டு தேர்தலின் போது வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுந்தரலிங்கம் இவ்விதம் குறிப்பிட்டுள்ளார்.

''டி.எஸ்.சேனநாயக்காவின் தமையன் எவ்.ஆர்.சேனநாயக்க ஒருநாள் டி.எஸ்.சேனநாயக்காவை அழைத்துக்கொண்டு எனது வீட்டிற்கு வந்தார். இவர் எனது தம்பி. இவருக்கு நீங்கள்தான் வழிகாட்டியாகவும், தத்துவாசிரியராகவும், நண்பனாகவும் இருந்து இவரை ஒரு வழிக்குக் கொண்டு வர வேண்டும் என என்னிடம் கேட்டுக் கொண்டார். நானும் அவரை என்னுடன் கொஞ்ச நாள்களுக்கு விட்டுச் செல்லுங்கள் நான் அவரை ஒருவழிக்குக் கொண்டு வருகிறேன் எனக் கூறினேன். டி.எஸ்.சேனநாயக்கா தினமும் காலையில் வருவார், காலை உணவு நேரத்தில், சில சமயம் மாலையிலும் வருவார். ஒரு நாளேனும் அவர் வராமல் விட்டது கிடையாது, நெருக்கடியான காலகட்டங்களில் கூட. அப்போது நான் எதைச்


எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க.

சொன்னாலும் அவர் செய்வார். மத்திய வங்கி ஆளுநராகப் பணியூற்றிய என்.யு.ஜெயவர்த்தனாவும் அப்போது என்னிடம் வந்து கொண்டிருந்தார்.''

(மேற்கண்டவாறு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது)

**இலங்கையின் தேசியக் கொடியை வடிவமைத்த சுந்தரலிங்கம்**

இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் அமுலுக்கு வந்தபோது சுந்தரலிங்கம் பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். 28.05.1957 திகதியிட்டு எழுதப்பட்ட அக் கடிதத்தில் சுந்தரலிங்கம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

3

''நீங்களும் நானும் அமைச்சர்களாக இருந்தபோது 1947 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சுதந்திர இலங்கையின் அரசியல் யாப்பு முன்னெடுக்கப்பட்டது. நீங்களும் மற்றவர்களும் சிங்களக் கொடிதான் இலங்கையின் தேசியக் கொடியாக இருக்க வேண்டும் என வலியுறுத்தினீர்கள். அந்தநேரம் நானோ, தமிழ் மக்களோ ஆழமாகச் சந்தேகப்பட்டிருந் தால் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத் திருக்குமா?

நான் டி.எஸ்.சேனநாயக்காவின் அமைச்சரவையில் இணைந்திருக்காவிட்டால் இரண்டு இனங்களுக்குமிடையே ஒருமைப்பாடு ஏற்பட்டிருக்க மாட்டாது. பிரித்தானியர்கள் ஒருபோதும் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியிருக்க மாட்டார்கள்.''

சுந்தரலிங்கம் பிற்காலத்தில் தனது அத் தவறுக்காகப் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார்.

இலங்கை சுதந்திரமடைந்தபோது சேர்.ஒலிவர்.குணதிலக சுதந்திரப் பிரகடனத்தைப் பழைய பாராளுமன்றத்திலுள்ள இராமநாதனின் சிலைக்குக் கீழேயே வைத்து வாசித்தார்.

(The Path Traversed to Independence and the Way Ahead டெய்லி நியூஸ் 4.2.98)

தமிழ்த் தலைவர்களின் அன்றைய தூர நோக்கற்ற செயற்பாடுகளால் நாம் இன்று அடிமைகளாக்கப்பட்டுள்ளோம்.

****************

ந.பரமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்களினால் பாதிக்கப்படுவோரின் உணர்வு மாற்றம் அவர்களின் வாழ்க்கையை நலிவடையச் செய்துவிடும்!

இன்று இந்நாட்டில் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் உளநெருக்கீடுகள், குறித்த இக்கட்டுரைத் தொடரின் முதலாவது பகுதியில் அத்தகைய உள நெருக்கீட்டினால் பாதிக்கப்படுவோருக்கு ஆதரவு அளிக்கும் செயன்முறைகள் குறித்து விளக்கியிருந்தேன்.

அத்தகையோர் மத்தியில் ஏற்படும் உணர்வு மாற்றங்கள் மற்றும் அதன் காரணமாக சமூகக் கட்டமைப்பில் ஏற்படத்தக்க தாக்கங்கள் குறித்து இத் தொடரில் ஆராய்தல் பொருத்தமானதாக அமையும்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோரில் ஏற்படும் உணர்வு மாற்றங்கள். ஒருவரை மரணத்தின் வாசற்படிக்கு அழைத்துச் செல்வதுடன் அவர்களது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களை இழப்பதுடன், அவர்களின் உணர்வுகளையே ஆட்டம்காண வைப்பதுடன் வாழ்க்கையையும் நலிவடைய வைக்கிறது.

சாதாரண வாழ்க்கையின் குழப்பம், நிச்சயத்தன்மையற்ற எதிர்காலம், தனிப்பட்ட வாழ்வு, குடும்பவாழ்வு, சமூக வாழ்வு என்பவற்றினை மீள மேற்கொள்ள எதிர்கொள்ளப்படும் சிக்கல்கள் உணர்ச்சிப் பிரச்சினைகளாக சினம்கொள்ளல், பயம், பதகளிப்பு, பீதி, மீளக்காட்சிகள்



வரல், பயங்கரக்கனவுகள், துன்பம் என்பன பொதுவாகக் காணப்படும்.

**உணர்வு மாற்றங்களுக்கு அப்பால் சமூகக் கட்டமைப்பில் தாக்கங்களும் ஏற்படும்**

எல்லா மாற்றங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படும். உணர்வு மாற்றங்களின் வெவ்வேறு அவத்தைகளில் மாறுபாடுகள் ஏற்படும். எனவே இதனை நாம் அறிந்து உதவல் வேண்டும்.

ஆரம்பத்தில் (சில மணித்தியாலங்களில்)

**1) பதட்டம், பதகளிப்பு, பீதி இருக்கும்.**

ஆரம்பநிலையில் என்ன நடக்கின்றது எனசிந்திப்பதற்கே நேரம் இருக்காது. உடனடி மாற்றம் பாதுகாப்புத் தேடி ஓடுவதாகும். பயமே பிரதான இயல்பாகக் காணப்படும்.

**2) அதிர்ச்சி அல்லது விறைத்த நிலை**

அனர்த்த நிலையில் உண்மையை ஏற்றுக்கொள்ளும் தன்மை இல்லாது இருக்கும். பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றுமே நடை

## சமூகக் கட்டமைப்பிலும் மாற்றம் கொண்டுவரும்

பெறாதது போல் இருப்பர். விறைத்த நிலையில் காணப்படலாம். மாறாட்டமும் உணவில் விருப்பமின்மையும் காணப்படலாம்.

**3) மனநிறைவு, மன எழுச்சி, சந்தோசம்.**

சந்தோசம்,மற்றவர்கள் இறந்தபோதும் நான் தப்பியது பற்றிச் சந்தோசம்.

**4) குற்ற உணர்வு**

மற்றவர்கள் இறந்த போது தான் தப்பியது.

**5) குழப்பமடைந்து அலைதல்.** என்ன நடந்ததென்று விளங்காது கண்டபாட்டுக்குக் கதைத்தல்.

**6) மீள சம்பவங்கள் காட்சிக்கு வரல்.**

கனவுகள் வரல், சிறிய சம்பவங்கள் இவற்றினை அதிகரிக்கச் செய்யலாம். இரவில் அதிகம் ஏற்படும். புணர்வாழ்வு வேலைகளில் ஈடுபடுவதால் இவற்றின் தாக்கம் குறைவாக அமையும்.

**அனர்த்தம் ஏற்பட்டு ஒரு மாதத்தில் இருந்து ஆறு மாதங்கள் வரை ஏற்படக் கூடிய தாக்கங்கள்:**

**1. துன்பப்படல்**

ஒருவரை இழப்பதால் ஏற்படும் விளைவு.

கவலை, அடிக்கடி அழுதல், சாப்பாட்டில் விருப்பமின்மை,நித்திரை இன்மை, சாகவிருப்பம் எனக் கூறல், வேலைகளில் நாட்டமின்மை, இழந்ததை எண்ணிக் கொண்டிருத்தல் என்பன காணப்படும்.

**2. உளத்தாக்கத்திற்கு பின்பான மனவடு**

*நோயின் ஆரம்ப அறிகுறிகள் காணப்படும்.

*அனர்த்துங்கள் பற்றிய நினைவுகள்/கனவுகள் வரல்.

*அனர்த்தத்தை நினைவுபடுத்தும் நிகழ்வுகளைத் தவிர்த்தல்.

*நித்திரை கொள்ள முடியாமை, பதற்றமாகக் காணப்படல்.

*பீதி ஏற்படல்.

* பதகளிப்புக்கு உரிய அறிகுறிகளான அமைதியின்மை, படபடப்பு, வியர்த்தல்.

*ஒன்றும் செய்ய இயலாத நிலை.

*மாற்றங்களைச் சமாளிக்கமுடியாத நிலை.

*வீட்டை விட்டு வெளியே வாழுதல். 40- 50 வீதம் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் வாழ விருப்பம் இன்மை.

- உதாரணமாக ஒருவர் இறந்த பின் வேறு இடத்தில் வாழுதல்.

**6 மாதங்களுக்குப் பின்பான மாற்றங்கள்**

* நாள்பட்ட துன்பத் தாக்கம்.

*துன்பம் ஏற்படல் சாதாரண மானது. இயற்கையானது ஓர் இழப்பின் துன்பப் படலை ஏற்றுக்கொண்டு அதில் இருந்து குணமடை தலை விரைவுபடுத்துதல் அவசியமாகும்.

* இழப்பின் பின் உடனடியாகக் கவலைப்படல் .

* தாங்கமுடியாததாக அமையும். இது பல உணர்வுகளின் நேர்மான மாகும். அதாவது இழப்பு, பாதுகாப்பின்மை, ஆதரவின்மை, பயம் என்பவற்றால் ஏற்படும் உணர்வுகளாகும்.

*துன்பப்படும்போது ஒருவர் இதனை அனுபவிப்பார். இதன் காலமும் இதன் செறிவும் ஆளுக்கு ஆள் வேறுபடும். இருவாரங்களாக இருக்கலாம், மாதங்களாகஇருக்கலாம் வருடங்களாகவும் இருக்கலாம். ஆனால் காலப்போக்கில் இதன் வேதனை குறைந்து கொண்டுவரும்

*ஒருவர் துன்பப்படும் போது அவரது உணர்வுகளுடன் செயற்படாவிடின் துன்பப்படும் காலம் நீடிப்பதுடன் வேதனையின் அளவும் அதிகமாக இருக்கும். எனவே துன் பத்தைக் குறைக்கும் படிகளை அறிந்து வேதனை குறைய உதவுதல் வேண்டும்.

* துன்பப்படும்போது ஏற்படும் நிகழ்வுகள்

- கவலையாக இருத்தல்
- சௌகரியம் இன்மை
- இழந்ததை எண்ணிக்கொண்டிருத்தல்
- குற்ற உணர்வு
- நித்திரை இன்மை
- உணவில் விருப்பமின்மை
- சினத்தல்
- தற்கொலை செய்யும் முயற்சி.
- இழப்பினை ஞாபகப்படுத்தும்போது குழப்பமடைதல்

* மாறான செயல்கள்

- குறித்த நபர்களை சந்திக்கும் போது, குறித்த இடத்திற்கு செல்லும்போது வலிப்பு உடல் அசைவுகள்,
- நிறைவேறாத ஆசைகள் நிறைவேறுவதற்காக.
- உளத் தாக்கத்திற்குப் பின்பாக மன வடு
- மனச்சோர்வு
- பாரிய இழப்பு உணரப்படல்
- மனம் மாற்றமடைதல்
- தனிமையில் இருக்க விருப்பம்
- நித்திரை ,உணவு என்பன பாதிப்பு
- சக்தி இன்மை, கிரகிக்க முடியாது இருந்து அழுதல்.
- தனிமை என எண்ணல்,வெறுமை
- தனிமைப்படுத்தப்படுபவர் தம்மைத் தாமே குறைத்து எண்ணுதல் என்பன காணப்படும்.

*அதிர்ச்சியும் மறுப்பும் இல்லாது போக கவலையும்,நம்பிக்கை இன்மையும் வந்து சேரும். இதனால் சாதாரண அன்றாட வேலைகளையே செய்யமுடியாது இருப்பர். அடிக்கடி அழுவர். ஆண்கள் மனச்சோர்வு அடைந்தாலும் அதிகம் அழுவதில்லை.

**நாள்பட்ட விளைவுகள்**

**மீளக்கட்டியெழுப்பும் போது**

1. முயற்சி குறைதல்,வேலை செய்யாது இருத்தல்.
2. போதைப்பொருள் பாவனை அதிகரித்தல்.
3. தற்கொலைகள்.
4. உடல்மாய நோய் / மெய்ப்பாட்டு நோய்கள்.
5. திருமணப் பிணக்கு.
6. குடும்பத்தினைக் கொண்டு நடத்தல் கடினமாக இருத்தல்.
7. முறையற்ற பாலியல் உறவுகள். குடும்பத்தில் ஆண் உறவுகளை இழந்தவர்கள் இலகுவில் பாதிக்கப்படுவர்.

இவை எல்லாம் அசாதாரண சூழலில் நிகழும் சாதாரண நிகழ்வுகளே. வன்முறையை எதிர்கொண்டவர்களில் காணப்படும். வெவ்வேறாக அனர்த்தத்தின் பின் வேறுபட்ட அவத்தைகளில் நிகழும்.

எனவே புணர்வாழ்வும் மீளக்கட்டி எழுப்புதலும் நீண்ட நாள்களுக்கு உரியவை. அனர்த்ததிற்கு பின்பான உணர்வு மாற்றங்கள் காலத்தால் வேறுபடும். ஆளுக்கு ஆள் வேறுபடும். எனவே உளவியல் ஆதாரமானது தொடர்ச்சியான மாற்றத்துடன் கூடியதாக அமையும்.

## அதிகரித்து வரும் சமூக உள நெருக்கீடுகளின் பாதிப்புகள்

* அனர்தத்தின் தன்மை.

*அனர்த்தத்தினை எதிர்கொண்ட அளவு.

*சமூக ஆதரவு கிடைக்கும் தன்மை.

*பால்,வயது,திருமணநிலை,பிரிந்து இருத்தல், குடும்பச்சூழல்,சொந்த இழப்புகள், அனர்த்தத்திற்கு முன்னைய மன நிலை என்பவற்றினைக் கொண்டே நெருக் கீட்டின் தாக்கமும் அதனைஎதிர்கொள்ளலும் அமையும்.

**சமூக உளத்தேவைகளை விளங்கல்**

அனர்த்தத்தினால் வெவ்வேறு அவத்தைகளில் வெவ்வேறு நெருக்கீட்டினை எதிர்கொள்வர்.

**உணர்வு மாற்றங்களுக்கான காரணங்கள்.**

*வசிக்கும் இடம்

*பாதுகாப்பின்மை

*இழப்பினை எண்ணிக்கொண்டு இருத்தல்.

*தனிமை

4. தசைப்பிடிப்பு.
5. படபடப்பு.
6. உணவில் விருப்பமின்னை, வயிற்று நோ, வாந்திக் குணம்.

**உணர்வு ரீதியானவை**

1. சினத்தல்.
2. பயம், பதகளிப்பு.
3. ஆதரவின்மை,கவலை,நம்பிக்கை இன்மை.
4. குற்ற உணர்வு.
5. திரும்பத் திரும்ப ஒரே எண்ணம் வரல்.
6. தற்கொலை எண்ணம்.
7. மறதி.

**உறவுகளில் ஏற்படும் மாற்றம்**

1. ஆதரவுக்கட்டமைப்பு இழக்கப்படல்.
2. நம்பிக்கை இழக்கப்படல்.
3. பொறுப்பும் கடமையும் மாறல்.
4. தங்கி வாழும் தன்மை ஏற்படல்.

**சமூக உள ஆதரவு வழங்கல்**

**1. உணர்வுகளை எதிர்கொள்ளல்**

உணர்வுமாற்றங்களானகவலை, சினப்படல், பீதி, நித்திரை இன்மை, மற்றவர் களில் இருந்து விலகல், பதகளிப்பு என்பன வளர்ந்தோரிலும், பயங்கரக் கனவுகள் சிறுவர்களிலும் சாதாரணமாக எதிர்வு கொள்ளமுடியாத அனர்த்தங்களுக்குப் பின் ஏற்படும்.

வயதானவர்கள், பெண்கள், சிறுவர்கள், அங்கவீனர்கள் அதிக அளவு உணர்வு ரீதியான பிரச்சினைகளுக்கு உட்படுவர். இவை அனைத்தும் அசாதாரண சூழலில் வெளிப்படுத்தப்படும் சாதாரண துலங்கல்களாகும்.

உணர்வுகளை வெளிக்காட்டுபவர்கள் வலிமை குறைந்தவர்களோ, அனர்த்த நிலையை எதிர்கொள்ள முடியாதவர்களோ அல்லர்.

**2. இழப்புகளை எதிர்கொள்ளல்**

அன்புக்குரியவர்களின் இறப்பு, பிரிவு, பொருள்களின் இழப்பு என்பன மனிதனின் வாழ்வில் பிரிக்க முடியாதவைகளாகும்.

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோரில் ஏற்படும் மாற்றங்கள்**

| சாதாரண மாற்றம் | அசாதாரண மாற்றம் |
|---|---|
| பயம், கவலை ↓ | உடனடி உணர்வுகள் |
| மறுத்தல் ↓ | பீதியடைதல், களைப்படைதல் ↓ |
| எண்ணங்கள் மீள வரல் ↓ | சம்பவங்களை மீள நினைவுபடுத்தலை தவிர்த்தல் ↓ |
| உண்மையில் என்ன நிகழ்ந்தது என உணரல் ↓ | சம்பவங்கள் பற்றிய எண்ணங்கள், உருவங்கள் வரல் ↓ |
| | உடல் முறைப்பாடுகள் ↓ |

அசாதாரண மாற்றங்கள் நீக்கப்படல் வேண்டும். (உளவளத்துணையுடன்).

*அழுத்தம்

*சந்தோசமின்மை

*பிரயோசமான வேலைகளைச் செய்ய முடியாது இருத்தல்

நெருக்கீட்டுக்கு உட்பட்டவர்கள் தாமாகக் கூற மாட்டார்கள். ஆனால் அவர்களது நடத்தை யில் இருந்து அறியலாம்.

**நடத்தை மாற்றம்:**

1. வாழ்க்கையில் விருப்பமின்மை.
2. செயற்றிறன் குறைதல்.
3. அமைதி இன்மை.
4. கிரகிக்க முடியாமை.
5. நித்திரை செய்ய இயலாது இருத்தல்.
6. சம்பவங்கள் மீள மீள வரல்.
7. போதை/தீங்கான மருந்துகளை எடுத்தல்.

**உடல் ரீதியான மாற்றங்கள்**

1. உடல் நோ.
2. தலையிடி.
3. களைப்பு.

சாதாரண சூழலில் இத்தகைய சந்தர்ப்பங்களில் குடும்பத்தினதும் உறவினர்களதும் நண்பர்களதும், அயலவர்களதும் ஆதரவு இருக்கும்.

மரணச்சடங்குகள், கிரியைகள், அயலவர் ஒருவரின் இழப்பினை உணர்ந்து சாதாரண வாழ்வுக்கு வர உதவும். அனர்த்த சூழ லில் இவை நிகழ்வது குறைவு. எனவே வெளியார் ஆதரவு கட்டாயம் தேவை. இதற் குச் சமூக உள மேம்பாட்டாளர்கள் உதவ வேண்டும்.

(வளரும்)



டாக்டர் சீ. யமுனாநந்தா (MBBS, DTCD)

## யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் முதலாவது சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் மில்ஸ்

**ஏப்ரல்.1906**

***டாக்டர் மில்ஸ் காலமானார்***

டாக்டர் மில்ஸ், யாழ்ப்பாணத்தில் நன்கு அறியப்பட்ட ஒரு மருத்துவர் ஆவார். ஆரம்பத்தில் யாழ்ப்பாண வைத்தியசாலையில் மருத்துவப்பணி புரிந்த டாக்டர் மில்ஸ், யாழ்ப்பாண வைத்தியசாலையின் முதலாவது சத்திர சிகிச்சை நிபுணராவார்.

யாழ்ப்பாண வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணராகப் பதவி வகித்த மில்ஸ் சிறிது காலத்தில் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு அமெரிக்க மிஷன் ஆஸ்பத்திரியில் (இணுவில் ஆஸ்பத்திரியாக இருக்கலாம்) இணைந்து கொண்டார்.

**இன்றும் நினைவில் கொள்ள .... அன்றைய ஞாபகம் இங்கே....!**

இலங்கை முழுவதிலும் பல மருத்துவர்களை உருவாக்கிய டாக்டர் மில்ஸ், 1906ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மானிப்பாயில் காலமானார்.

எழுபதுகளின் ஆரம்பத்திலும் மில்ஸ் என்ற பெயரில் யாழ்ப்பாண வைத்தியசாலையில் பிரபல வைத்திய நிபுணர் ஒருவர் கடமையாற்றியுள்ளார். இவர் முதலாமவரின் பேரனாக இருக்கலாம்.

தாம்பு ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐ.சி.எல்.கிரிக்கெட்டுக்கு ஐ.சி.சி.அங்கீகாரம் மறுப்பு

ஐ.சி.சி. அங்கீகாரத்திற்காக இந்தியன் கிரிக்கெட் லீக் அமைப்பு வைத்திருந்த கோரிக்கையை சர்வதேச கிரிக்கெட் பேரவை நிராகரித்தது. இந்தப் போட்டி லீக் கிரிக்கெட்டில் விளையாடும் வீரர்கள் மீதான தடை விவகாரம் அந்தந்த உறுப்பு கிரிக்கெட் நாடுகள் வாரிய சம்பந்தப்பட்ட தனிப்பட்ட முடிவாகும் என்று ஐ.சி.சி. கூறியுள்ளது.

டுபாயில் நடைபெற்ற ஐ.சி.சி. உயர்மட்டக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தியாவின் மிகப்பெரிய செய்தி மற்றும் பொழுதுபோக்கு ஊடக நிறுவனமான 'ஜீ' தொலைக்காட்சி நிறுவனத்தின் கிரிக்கெட் அமைப்பான ஐ.சி.எல். கடந்த இரண்டு ஆண்டுகளாக தங்களை அங்கீகரிக்குமாறு ஐ.சி.சி.யிடமும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திடமும் போராடி வருகிறது.

தற்போதைய இந்த முடிவினால் ஐ.சி.எல்.சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளதாக அதன் அதிகாரிகளில் ஒருவரான முன்னாள் வீரர் கிரன் மொரே தெரிவித்துள்ளார்.

ஐ.சி.எல். கிரிக்கெட்டை அங்கீகரிக்க வேண்டுமென்றால் அந்த கிரிக்கெட் நடைபெறும் அந்த நாட்டின் அதிகாரபூர்வ கிரிக்கெட் சபையின் அங்கீகாரம் முதலில் தேவை ; ஐ.சி.எல். அதனைப் பெறவில்லை என்பதால் அங்கீகாரத்திற்கான முக்கிய நிபந்தனையில் ஐ.சி.எல். தோல்வி அடைந்துள்ளது என்று ஐ.சி.சி. தனது அறிக்கையில் கூறியுள்ளது.

# பீற்றர்சனுக்கு எச்சரிக்கை



நடுவரின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்த பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணித் தலைவர் பீற்றர்சனுக்கு, ஐ.பி.எல். நிர்வாகம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. சென்னை சூப்பர் கிங்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதிய ஐ.பி.எல். லீக் போட்டி, போர்ட் எலிசபெத்தில் நடந்தது.

இப்போட்டியில் பெங்களூர் அணித்தலைவர் பீற்றர்சன், முதல்பந்திலேயே சென்னை வீரர் முத்தையா முரளிதரன் பந்து வீச்சில் எல்.பி.டபள்யு. ஆனார். அதிருப்தியுடன் பவிலியன் திரும்பிய பீற்றர்சன், பந்து துடுப்பில் பட்டதாகத் தெரிவித்தார்.

நடுவர் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பேசிய பீற்றர்சனுக்கு ஐ.ப.எல்., நிர்வாகம் கடும் எச்சரிக்கைவிடுத்துள்ளது. ஆனால் தண்டனை எதுவும் அளிக்கப்படவில்லை.

# ரூ.1400 கோடிக்கு ஐ.பி.எல்.காப்பீடு

DLF INDIAN PREMIER LEAGUE

இந்திய பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) கிரிக்கெட் போட்டியை ஒட்டு மொத்தமாக இந்திய நாணயப்படி ரூ. 1400 கோடிக்கு காப்பீடு செய்துள்ளது அந்த அமைப்பு. பயங்கரவாதிகள் மிரட்டல் இருப்பதால் இவ்வளவு பெரிய தொகைக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக ஐ.பி.எல். வட்டாரம் தெரிவித்துள்ளது.

இம்முறை போட்டியில் பங்கேற்றுள்ள வீரர்களில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மஹேந்திர சிங் தோனி, அதிகபட்சமாக ரூ. 51 கோடிக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டு வீரர்கள் தரப்பில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு வீளையாடும் ஜயசூரிய அதிக தொகைக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளார்.

# குவியும் மின்னஞ்சல்களால் ஷாருக்கானுக்குத் தலைவலி!



ஷாருக்கானுக்கு வெறுக்கத்தக்க மின்னஞ்சல்கள் கங்குலியை தலைமை பதவியில் இருந்து நீக்கியதால் தமக்கு வினோதமான வெறுக்கத்தக்க மின்னஞ்சல்கள் மக்களிடமிருந்து வந்துள்ளதாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளர் ஷாருக்கான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் டர்பனில் வைத்து நிருபர்களிடம் கூறியதாவது,

கொல்கத்தா அணியின் தலைமை பொறுப்பில் இருந்து கங்குலி நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக மெக்கலம் நியமிக்கப்பட்டது, அணியின் நலனுக்காக எடுக்கப்பட்ட முடிவு. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எனக்கு வினோதமான வெறுக்கத்தக்க மின்னஞ்சல்கள் மக்களிடம் இருந்து வந்துள்ளன. இவற்றினை நான் சேகரித்து வைத்துள்ளேன்.


ஒவ்வொரு வீட்டுக்காக சென்று என்னால் விளக்கம் அளிக்க முடியும். நாங்கள் தவறு செய்வதாக நீங்கள் உணர்ந்தால், அதனை சுட்டிக்காட்டி எங்களை ஊக்கப்படுத்தும் விதமாக மின்னஞ்சல்களை அனுப்புங்கள்.

சினிமாத்துறையைச் சேர்ந்தவன் உரிமையாளராக இருப்பதாலும், தீவிர கிரிக்கெட் மோகம் கொண்ட கொல்கத்தாவை அடிப்படையாக உருவாக்கப்பட்ட அணி என்பதாலும் எங்கள் அணி அதிகமாக கவனிக்கப்படுகிறது. இதனால் நாங்கள் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறோம். நல்லதோ, கெட்டதோ கொல்கத்தா ரசிகர்கள் ஒரு இரவு எங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். மற்றொரு இரவு எங்களது முடிவை எதிர்த்து தங்களது கோபத்தை வெளிப்படுத்துவார்கள்.

ஆனுல் உங்களது கனவான ஐ.பி.எல். கிண்ணத்துடன் கொல்கத்தா வந்து உற்சாக ஆட்டம் போடுவேன் என்று உறுதி அளிக்கிறேன்-என்றார்.

# சம்பியன் கிண்ணம் நடால் வசம்

அமெரிக்காவின் மொன்டி கார்லோவில் நடந்த மாஸ்டர்ஸ் சர்வதேச டெனிஸ் தொடரின் ஆடவர் பரிவு சாம்பயன் பட்டத்தை ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் பெற்றுள்ளார். இது நடால் வெல்லும் 14 ஆவது மாஸ்டர்ஸ் சம்பியன் பட்டமாகும்.



இறுதிப் போட்டியில் செர்பிய வீரர் நோவாக் ஜோகோவிக்கை எதிர்த்து விளையாடிய நடால் 63, 26, 61 என்ற புள்ளிக் கணக்கில் (21 என்ற செட்கணக்கில்) வெற்றி பெற்றார். இறுதிப் போட்டியில் வென்றதன் மூலம் இத்தொடரின் சம்பியன் பட்டத்தை 5 ஆவது முறையாக வென்றுள்ள நடால், நூறு ஆண்டுகளுக்கு முன் நியூஸிலாந்து வீரர் அன்டனி வில்டிங் செய்த சாதனையை சமன் செய்துள்ளார்.

வெற்றிபெற்ற பின்னர் பேசிய நடால், வெற்றிபெற வேண்டுமென்ற நம்பிக்கையுடன் விளையாடினேன். போட்டியின் போது ஒவ்வொரு நிமிடமும் கவனமாக விளையாடியதால் வெற்றி கிடைத்தது. தொடர்ந்து 5 முறை இத் தொடரில் சம்பியன் பட்டம் வென்றுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைவிமர்சனம்

# ஆனந்த தாண்டவம்



எழுத்தாளர் சுஜாதாவின் நாவல் ஒன்றுக்கு திரைவடிவம் கொடுத்து வெளிவந்திருக்கிறது 'ஆனந்த தாண்டவம்' திரைப்படம்.

சித்தார்த், தமன்னா ஆகியோரின் நடிப்பில் காந்திகிருஷ்ணாவின் இயக்கத்தில் உருவாகியுள்ளது இத்திரைப்படம்.

பொறியாளரான சித்தார்த், தன் தந்தை வேலை பார்க்கும் கிராமத்துக்கு வருகிறார். அங்கு தமன்னாவைக் கண்டு காதல் கொள்கிறார். தமன்னாவும் சித்தார்த்தின்மேல் அன்பு வைக்கிறாள். இருவரின் காதலையும் அறிந்த பெற்றோர்கள் இருவருக்கும் திருமணம் செய்துவைக்க சம்மதிக்கின்றனர். இந்நிலையில் அமெரிக்காவில் வசிக்கும் பணக்கார இளைஞனொருவன் தமன்னாவை திருமணம் செய்ய விரும்புகிறான். தமன்னாவும் குடும்பத்தாரும் மனம் மாறுகின்றனர். சித்தார்த் ருக்மணி என்பவரையும், தமன்னா அமெரிக்க இளைஞனையும் மணம் முடிக்கின்றனர். எனினும் நீண்டகாலத்தின் பின்னர் தமன்னாவும் சித்தார்த்தும் அமெரிக்காவில் சந்திக்கின்றனர். அதன்பின்னர் அவர்கள் வாழ்வில் எழும் சிக்கல்நிலையை எடுத்துச் சொல்கிறது ஆனந்த தாண்டவம்.

காதல் காட்சிகளிலும், சோகக் காட்சிகளிலும் அழுத்தமான நடிப்பை சித்தார்த் பதிவு செய்துள்ளார். தமன்னாவும் குறும்புத்தனம், வாழ்வின் வலி, மோகம் என்பவற்றை சூழலுக்கேற்ப வெளிப்படுத்தி பாராட்டுக்களை அள்ளிக்கொள்கிறார்.

வித்தியாசமான காதல் கதையை சொல்ல முற்பட்ட காந்திகிருஷ்ணாவின் துணிச்சல் பாராட்டுக்குரியதே. திரைக்கதையில் வரும் சில தவறுகளை திருத்தியிருந்தால் படம் இன்னும் சிறப்பாக வந்திருக்கும். ஜீ.வி.பிரகாஷின் இசை எதிர்பார்த்தபடி இல்லாமல் ஏமாற்றத்தையே தருகிறது. எனினும் ஷங்கரின் ஒளிப்பதிவு மனதுக்கு நிறைவை உண்டுபண்ணுகிறது.

ஆனந்த தாண்டவம் திரைப்படம் பார்வையாளர்களை ஆனந்தப்படுத்தும்.




## சாதனை குஷ்பு



நடிகை குஷ்புவுக்கு சாதனைகளும், சர்ச்சைகளும் சகஜமானவை. அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கிக்கொள்ளும் இவருக்கு சாதனை விருதுகளும் கிடைத்தே வருகின்றன. ஒரு காலத்தில் ரசிகர்கள் கோயில் கட்டி கும்பிடும் அளவிற்கு கொடிகட்டிப் பறந்தவர் குஷ்பு. இப்போது சின்னத்திரையில் கோலோச்சிவரும் அவருக்கு திரைத்துறையில் சாதனை படைத்ததற்கான விருது கிடைத்துள்ளது. விக்ரோறியா தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், உலக மகளிர் தினத்தை முன்னிட்டு ஐந்து சாதனைப் பெண்களை விருது வழங்கிக் கௌரவித்தது. அவர்களில் திரைத்துறைக்கான விருது குஷ்புவுக்கு வழங்கப்பட்டது.

## மீண்டும் பெரியார்



தங்கர்பச்சானின் இயக்கத்தில் பிரபுதேவா நாயகனாக நடிக்கும் படம் 'களவாடியபொழுதுகள்'. இவருக்கு ஜோடியாக பூமிகா தோன்றுகிறார். இதுவும் தங்கர்பச்சானின் தனித்துவமான படம் என்பதால் இப்போதே இந்தப் படம் பற்றிய எதிர்பார்ப்பு அதிகமாகியுள்ளது. களவாடிய பொழுதுகள் படத்தில் பெரியார் தோன்றுவது போலவும் சில காட்சிகள் திரைக்கதையில் அமைக்கப்பட்டிருந்தது. பெரியாராக யாரை நடிக்க வைக்கலாம் என யோசித்த இயக்குனருக்கு ஏற்கனவே பெரியார் படத்தில் கலக்கிய சத்தியராஜின் முகமே ஞாபகத்துக்கு வந்தது. தன் எண்ணத்தை அவர் சத்தியராஜிடம் கூற அவரும் சம்மதித்துவிட்டார். சத்தியராஜ் பெரியாராகத் தோன்றும் காட்சிகள் அண்மையில் படமாக்கப்பட்டன.

## இன்னுமொரு இயக்குநர்



இயக்குனர்கள் கதாநாயகர்களாக அரிதாரம் பூசிக்கொள்வது இப்போது அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. சேரன், எஸ்.ஜே.சூர்யா, அமீர், சுந்தர்.சி, சசிக்குமார் போன்றோரின் வரிசையில் இப்போது இன்னுமொரு இயக்குனரும் நடிகராக அவதாரமெடுக்க இருக்கிறார். இயக்குனர் ஷங்கரிடம் உதவியாளராக இருந்து இப்போது ஜீவன் - மேக்னா நடிப்பில் உருவாகும் 'கிருஷ்ணலீலை' என்ற படத்தை இயக்கிவரும் செல்வன்தான் அந்த இயக்குனர். இவரது உதவியாளரான முரளிசாமி என்பவர் இயக்கும் 'மாக்கான்' என்ற படத்தில் செல்வன் கதாநாயகனாக அறிமுகமாகக் காத்திருக்கிறார்.

## மைதிலி



தனியார் தொலைக் காட்சிகள் தமது பார்வையாளர்களை அதிகரித்துக் கொள்வதற்கு தொலைக்காட்சித் தொடர்களையே அதிகமாக நம்பியிருக்கின்றன. குடும்பப் பெண்களை இலக்காகக் கொண்டே பெரும்பாலான தொலைக்காட்சித் தொடர்களின் கதைகள் அமைந்துள்ளன. இந்த இலக்கணத்தை மீறாத வகையில் கண்ணீரும் கம்பலையுமாய் அலைகின்ற பெண்ணொருத்தி தன் உழைப்பால் உயர்ந்த கதையை சொல்ல விழைகிறது மைதிலி என்ற தொலைக்காட்சித் தொடர். அண்மையில் கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிவரும் மைதிலி தொடருக்கு ஏராளமான ரசிகர்கள் உருவாகியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இத்தொடரை எம்.விஸ்வநாத் என்பவர் இயக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமறைக் கலாமன்றம்
எமது மன்றக் கலைஞன்
இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் அவர்களின்
மிருதங்க அரங்கேற்றம்

காலம்: இன்று (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.30 மணி
இடம்: கலைத்தூது க் கலையகம்
286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
திருமறைக் கலாமன்றம்.

இன்று மிருதங்க அரங்கேற்றத்தை
மேற்கொள்ளும் எமது கலைஞன்
திரு.இரத்தினசிங்கம் ஜெயகாந்தன்
அவர்களை வாழ்த்தி நிற்பதுடன்,
இவரது வளர்ச்சிக்குக் காரணமான
பெற்றோரையும், குருவாக நின்று
பயிற்றுவித்த
யாழ்.பல்கலைக்கழக
இசைத்துறை மிருதங்க
விரிவுரையாளர் லயஞான வாரிதி
திரு.சி.மகேந்திரன் M.phil.
அவர்களையும்
பாராட்டுகின்றோம்.
இயக்குநர்,
அங்கத்தவர்கள்.
திருமறைக் கலாமன்றம்.

(சி/558191)


# வன்னியிலிருந்து வரும் நோயாளர்களால் நிரம்பி வழிகிறது வவுனியா ஆஸ்பத்திரி

வவுனியா, ஏப்.26

வன்னியில் இருந்துவரும் காயமடைந்தவர்கள் மற்றும் நோயாளர்களால் வவுனியா வைத்தியசாலை நிரம்பி வழிகிறது.

அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப் போதிய வைத்தியர்கள், தாதியர்கள் இல்லாததால் பணியில் உள்ளவர்கள் இரவுபகலாகப் பணியாற்றுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலையில் 448 கட்டில்கள் மட்டுமே இருக்கின்றன. எனினும் 1500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றார்கள். காயமடைந்தவர்கள், நோயாளர்கள் என நாளாந்தம் இங்கு 400 பேர் வரையில் கடந்த சில தினங்களாகச் சிகிச் சைக்காக அனுமதிக்கப்படுவதாகவும், இதேபோன்று கணிசமான எண்ணிக்கையானவர்கள் சிகிச்சையின் பின்னர், இடைத்தங்கல் நிவாரண நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வைத்தியசாலையின் 9ஆம் 10ஆம் விடுதிகளில் 400க்கும் மேற்பட்ட நோயாளர்களும், 7ஆம் 8ஆம் விடுதிகளில் 200க்கும் மேற்பட்ட நோயாளர்களும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்ற போதிலும், இவர்களைக் கவனிப்பதற்கு 2 வைத்தியர்கள் மாத்திரமே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் உள்ள சத்திரசிகிச்சை நிலையத்தில் நாளாந்தம் இரவு ஒரு மணி, இரண்டு மணிவரையில் வைத்தியர்களினால் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் எம்.எஸ்.எவ் எனப்படும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வைத்திய தொண்டு நிறுவன வைத்திய நிபுணர்களும், சுழற்சி முறையில் நாட்டின் தென்பகுதியில் இருந்து வருகின்ற வைத்தியர்களும் மேலதிகமாக இங்கு பணிபுரிகின்றார்கள்.

அத்துடன் ஐ.சி.ஆர்.சியின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்களும், வவுனியா, மட்டக்களப்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர ஆகிய தாதியர் பயிற்சிக் கல்லூரிகளின் மாணவர் குழுக்களும் இங்கு பணியாற்றும் குறைந்த எண்ணிக்கையிலான தாதியர்களுக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா வைத்தியசாலையில் நிலவுகின்ற இடநெருக்கடி காரணமாக விடுதிகளின் விறாந்தைகள், நடைபாதைகளிலும் நோயாளர்கள் படுத்திருந்து சிகிச்சைபெற நேர்ந்துள்ளது.

இந்த வைத்தியசாலைக்கு மேலதிக கட்டில்கள், ஸ்ரெச்சர்கள், சக்கர நாற்காலிகள் உட்பட பல முக்கியமான உபகரணங்கள் அவசரமாகத் தேவைப்படுவதாக அதிகாரிகள், சுகாதார அமைச்சு மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள் ஆகியோரது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் நிலவுகின்ற வைத்தியர் மற்றும் தாதியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சிடம் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)




சேவைநலன் பாராட்டு விழா

திருமதி
ஸ்கந்தசோதி
சாந்தராஜா
(Spl.Trd. (Science), S.L.T.S. - I)

ஆசிரியர் சேவை

| | |
|---|---|
| அநு/ஹோராப்பொல முஸ்லிம் வித்தியாலயம் | 21.03.1972 - 19.05.1973 |
| யா/ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம், புத்தூர் | 20.05.1973 - 19.05.1974 |
| யா/துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை | 20.05.1974 - 08.01.1978 |
| யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | 09.01.1978 - 31.12.1979 |
| யா/ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, அரியாலை | 01.01.1980 - 31.12.1981 |
| கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை | 01.01.1982 - 14.05.1987 |
| யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் | 15.05.1987 - 26.04.2009 |

கல்விப் பணியில் 37 வருடங்களாகச் சிறப்புடன் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் எமது வித்தியாலய ஆசிரியை, ஓய்வுகாலத்தில் சீருடனும், சிறப்புடனும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

(84697)



## இறைச்சிக்கோழி விற்பனை

நிறை கூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

செம்மணி பாம்
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

(84694)



## தவறிவிட்டது

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியுடைய கணேசமூர்த்தி பிரசாத் என்பவருடைய தே.அ.அ.(இல.911992167 V) 20.04.2009 அன்று சுன்னாகம் ஸ்ரேசன் வீதிக்கும் பஸ் நிலையத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீகரன் புக் சென்ரர், ஸ்ரேசன் வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(84704)



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 33 வயது, ஆயிலிய நட்சத்திரம், Software Engineer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. லக்கினத்தில் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக்கிரகபாவம்.

இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
Profile Number 53 போன்: 2523127, 2520619

C558187



## மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 32 வயது, பூச நட்சத்திரம், Software Engineer ஆகக் கடமையாற்றும் Canada Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. செவ்வாய்தோஷம் இல்லை. மூன்று சுற்றுக்கிரகபாவம்.

இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
Profile Number 5446 போன்: 2523127, 2520619

C558187



இழந்த சக்தியை மீண்டும்
பெற்றிட பாவியுங்கள்
றோயல்
குளுக்கோஸ்
100% சுத்தமானது




PACKED BY: ROYAL Industries
Colombo 12
T.P. 0777277670

அனைத்துப் பார்மசிகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.26

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த இளம் தம்பதியினர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த 22ஆம் திகதி கொடிகாமத்தில் இடம்பெற்றது.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த சிவஞானம் அகிலன் (வயது 23) அகிலன் சிந்துஜா (வயது 20) ஆகியேரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(04-207)


## கண்ணீர் அஞ்சலி



யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை
ஆசிரியை திருமதி
பத்மலோஜினி காந்தரூபன்
அவர்களின் தந்தை
செல்லையா சீவரத்தினம்
அவர்கள் இறைபதம்
அடைந்தமையையிட்டுத்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை.



31ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்



அமரர் குண்டுமணி
திரவியநாதன்
(உப அதிபர், யா/இமையாணன்
அ.த.க.வித்தியாலயம்)

தோற்றம் 22.06.1956
மறைவு 27.03.2009

கடந்த 27.03.2009 அன்று
இறைபதம் அடைந்த எங்கள் அன்புத்
தெய்வத்தின் அந்தியேட்டிக்
கிரியைகள் இன்று (26.04.2009)
ஞாயிற்றுக்கிழமை
காலை 7 மணியளவில்
நடைபெறும். அதனைத் தொடர்ந்து
இடம்பெறும் மதியபோசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்
கொள்ளுமாறு அன்புடன்
கேட்டுக் கொள்கின்றோம்).


குடும்பத்தினர்.
நாவலடி, உடுப்பிட்டி.

(84689)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தந்தை செல்வா அமரத்துவம் அடைந்த நினைவு நாள் (26.04.2009) இன்றாகும். 1986 ஆம் ஆண்டில் தந்தை செல்வாவின் நினைவு நாளன்று வெளிநாட்டுப் பத்திரிகையொன்றில் வெளியான இக் கட்டுரை இங்கு மீள் பிரசுரம் செய்யப்படுகிறது.**

# ஈழத்துக் காந்தி தந்தை செல்வா



"தமிழர்களுக்கு ஓர் தாயகம் உருவானால் உலகத்தமிழர்களுக்கு விடுதலை'' என்று கூறியவர் தமிழர் தலைவர் தந்தை செல்வா. தமிழ்த் தந்தை என்றும், ஈழத்துக் காந்தி என்றும் பெரியவர் என்றும் இலங்கைத் தமிழர்களால் போற்றப்படும் தலைவர் பிறந்த நூற்றாண்டு நிறைவை நினைவு கூரும் முகமாக 1998இல் இலங்கையிலும் கடல் கடந்த நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழர்கள் விழா எடுத்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து ஈழத் தமிழர் வரலாறு உணர்ச்சியும் கிளர்ச்சியும் கலந்து உருவான ஒரு காவியம். சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை (எஸ்.ஜே.வி.) செல்வநாயகம் என்பது அந்தக்காவிய நாயகன் பெயர். கடந்த அரை நூற் றாண்டு காலமாக ஈழத்தில் எழுச்சி கொண்டுள்ள தமிழ்த் தேசியவாதத் தின் தந்தை இவர். பெரியவர் செல்வா தலைமையில் 1914 மே மாதம் யாழ்ப் பாணம் வட்டுக் கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட் டணி மாநாட்டில் முதன்முதலாக பிர கடனப்படுத்தப்பட்ட தனித் தமிழ் ஈழக் கோரிக்கை இலங்கை அரசிய லில் போராட்டமயமான ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. ஈழத்தமிழரின் உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் இன்று ஏற்பட்டிருக்கும் தீவிரப் போக்கையும். பயங்கரமான பரிமாணங்களையும் செல்வா நிச்சயம் எதிர்பார்த்திருக்க முடியாது.

1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு

## நிதானவாதியான எஸ்.ஜே.வி. பிரிவினை கோரத் துணிந்தது ஏன்?

முன்பாகவே செல்வா மறைந்து விட்டார். ஆயினும், தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து அமோக வெற்றியீட்டி நாடாளுமன்றத்தில் தமிழர்களின் ஏகப்பிரதிநிதியாக விளங்கியது. 1983 ஜூலை மாதம் இலங்கையில் அரங்கேறிய தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து தமிழ ரின் அரசியல் வாழ்வை தீவிரவாதி களான ஆயுதப் போராளிகள் சுவீகரித் துக் கொண்டதும், இதனால் மிதவாதி களும் ஜனநாயகவாதிகளும் ஓரங் கட்டப்பட்டதும் தனிக்கதை. எனினும், தீவிரவாதிகளும் மிதவாதிகளும் செல்வாவைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழருக்கு இனவுணர்வை ஊட்டியவர் என நிதான வாதிகளும், தம் நெஞ்சங்களில் விடுதலை வேள்வித் தீயை மூட்டியவர் எனத் தீவிரவாதிகளும் இவரைப் போற்றுவார்கள்.

1948- ஆம் ஆண்டு இலங்கை அரசு தோட்டத் தொழிலாளர்களான பத்து இலட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் சட்டத்தின் மூலம் ரத்துச் செய்தது. இதனால் இவர்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்திலிருந்த ஐந்து எம்.பிக்கள் பதவியிழந்தனர். நாடாளுமன்றத்தில் இச்சட்டத்துக்கு ஆதரவாக தாம் சார்ந்திருந்த கட்சி வாக்களித்த போது, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வா எதிர்த்து வாக் களித்து விட்டு, அக்கட்சியிலிருந்து வெளியேறி தமிழரசுக்கட்சியை நிறுவினார். இந்தியாவில் அமைந் துள்ளது போல சமஷ்டி அமைப்பு முறையில் தமிழர் வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து தனி மாநிலமாக்க வேண்டும் எனக் கோரியதால் இக்கட்சியை 'பெடரல் கட்சி'' என அழைத்தனர்.

''கண் உள்ளவர்களே! பார்த்துக் கொள்ளுங்கள். இன்று இந் திய வம்சா வளித் தமிழ னுக்கு இழைக் கப்படும் அநீதி நாளை இலங்கைத் தமிழனுக்கு எதிராகவும் நடக்கும். சிங் களப் பேரா திக்கப் பிரள யத்தை இன்றே தடுத்து நிறுத்த வேண்டும்'' என செல்வா தீர்க்கமாக எச்சரித்தார். இந்தியாக் காரன் என நிந்திக் கப்படும் தமிழனும் இலங்கைத் தமிழனும் உறவால் ஒன்றுபட்டவனே என்ற புதிய மந்திரத்தை இலங்கைத் தமிழர்களுக்கு உணர்த்தினார்.

தமிழரசுக் கட்சிக்குக் கருவிலேயே கண்டம். 1952- ஆம் ஆண்டு தேர்தலில் கட்சி தோற்கடிக்கப்பட்டது. பெரியவரே காங்கேசன்துறைத் தொகுதியில் தோல்வியுற்றார். அரசாங்க சார்புப் பத்திரிகைகள் ''சமஷ்டிக்குச் சாவு மணி'' எனக் கொட்டை எழுத்துக்களில் தலைப் பிட்டு கொக்கரித்தன. செல்வாவுக்கு கட்சி சந்தித்த முதல் தேர்தல் ஒரு தத்துவத்தின் பிரசவ வேதனை. தளர்ந்துவிடாது தம் பணியைத் தொடர்ந்தார். அடுத்து நடைபெற்ற 1956-ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி தமிழர்களின் தனிப் பெரும் கட்சியாக வெற்றி பெற்றது. 1974- இல் ஏனைய தமிழ்க் கட்சி களுடன் கூட்டிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பரிண மித்தது.

செல்வா, சட்டத்துறையில் சாதனை கள் புரிந்து கொழும்பிலுள்ள உச்ச நீதிமன்றத்தில் புகழ்பெற்ற வழக் கறிஞர். இதனால் பிரித்தானிய மகா ராணியால் வழங்கப்படும் Queen's Counsel என்ற தகைமையைப் பெற்ற வர். விருது பெற்ற வழக்கறிஞராயி னும் தமிழர் உரிமைகளுக்காக சாத்வீக முறையில் சட்ட மறுப்புப் போராட் டங்களில் ஈடுபட்டு சிறைவாசம், தடுப்புக் காவல் என விழுப்புண் பட்டவர். இலங்கை அரசியல் களத் தில் காந்திய நெறி[illegible] அறிமுகப்படுத்[illegible]

ஈழத்து காந்தி என்ற சிறப்புப் பெய ருக்கும் உரித்தானவர். ஒரு தடவை இந்தியப் பிரதமர் நேருவின் இலங்கை வருகையின்போது விமான நிலை யத்தில் வரவேற்க வந்த செல்வாவை பிரதமர் பண்டாரநாயக்க, 'அடிக்கடி காந்திய கிளர்ச்சிகளை நடத்தி என்னை மிரட்டுகின்றவர் இவர்' என்று வேடிக் கையாகக் கூறி நேருவுக்கு அறிமுகம் செய்தார்.

இலங்கைத் தமிழர்கள் பிரதேச பேதங்களினால் பிளவுண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், வன்னியான் என இவர்களுக்குள் பரஸ் பர அவநம்பிக்கைகள். 'மண்ணின் மைந்தர்கள்' போன்ற பிரதேச கோஷங்களுக்கும், துவேசத்திற்கும் குறைவில்லை. சிங்கள ஆட்சியாளர் தமிழர்களை கூறுபோட்டு, துவேசத் தீயை வளர்த்து குளிர்காய்ந்தனர்.

பிளவுகளை அகற்றி தமிழரை ஒரு கொடியின் கீழ் ஓர் அணியில் திரட்டி வலிமையான ஒரு சக்தியாக உருவாக் கியவர் பெரியவர் செல்வா.

அந்த அபூர்வ மனிதரின் தலைமை யில் இன்னோர் அற்புதமும் நிகழ்ந்தது. இலங்கைத் தமிழர்களின் 87 சத வீதத்தினர் இந்துக்கள். பெரியவர் செல்வா ஒரு கிறிஸ்தவர். தமிழ் நாட்டை அண்மையில் விகாரப்படுத் தியுள்ள மதவெறி, ஈழத் தமிழ்ச் சமுதாயத்தில் இல்லை. அங்கு தமிழரின் சகோதரத்தவ உணர்வுகளை மதாச்சராரியர்கள் ஆக்கிரமிக்கவில்லை. அவரை இறுதிவரைதம் தலை வனாக அபிமா னத்துடன் ஆராதித்தனர். தமிழ்மக் களின் அடிப்படை உரிமைகளுக்காக செல்வா போராட்டங்களை நடத்து வதும், அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து உறுதி மொழிகள் தந்து உடன்படிக்கைகள் செய்வதும் பின் அவற்றை மீறுவதும் இலங்கைப் பிரதமர்களுக்குக் கைவந்த கலை. 1957 இல் (அதிபர் சந்திரிகாவின் தந்தை யான) பிரதமர் பண்டாரநாயக்கவுடனும் 1960 இல் தாய் சிறிமாவுடன் அடுத்து 1965 இல் பிரதமரான டட்லி சேன நாயக்கவுடனும் பெரியவர் செய்து கொண்ட ஒப்பந்தங்கள், எழுதிய மை உலர்வதற்கு முன்பாகவே மீறப்பட்டன. சிங்களத் தலைவர்களால் மீண்டும் மீண்டும் ஏமாற்றப் பட்டதாலும் தமிழரின் குறைந்தபட்சக் கோரிக்கைகளைக் கூடச் சிங்களத் தலைவர்கள் நிராகரித்த தாலும் நிதானவாதியான செல்வா பிரிவினைக்குத் துணிந்தார். தமிழ் ஈழக் கோரிக்கையினை முன்மொழிந்தார்.

1972 ஆம் ஆண்டு சிறிமா அரசு தமிழர்களின் உரிமைகளை மேலும் கட்டுப்படுத்தும் விதத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்கிய போது தமிழரின் எதிர்ப்பைக் காட்டுவதற்காகத் தமது நாடாளுமன்றப் பதவியை இராஜினாமாசெய்து காங்கேசன் துறை யில் இடைத்தேர்தலைச் சந்தித்தார். மீண்டும் அமோக வாக்கு வித்தியாசத் தில் வெற்றியீட்டினார்.

[illegible]தமிழர்களின் கோரிக்கை களுக்கு இந்தியத் தலைவர்களின் தார் மீக ஆதரவைத் திரட்டுவதற்காக 1972 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமிர்தலிங்கத்துடன் இந்தியா வந்தார் செல்வா. பெரியார் ஈ.வெ.ரா. காம ராஜர். காயிதே மில்லத், ம.பொ.சி. கருணாநிதி உட்பட பல தமிழ்நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். அடுத்து பிரதமர் இந்திரா காந்தியைச் சந்திப்பதற்கான ஏற்பாடு. மிரண்டு போன இலங்கை, தூதர் மூலம் அச்சந் திப்பைத் தடுத்து நிறுத்தி விட்டது.

பெரியவர் செல்வா சிறிய விபத் தினால் மூளை நரம்பு பாதிக்கப்பட்டு, 1977 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி மறைந்தார். அவர் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட் டிருந்தபோது அவரைப் பரிசோதிப்பதற்கென நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தியை சென்னையில் இருந்து விசேஷமாக அனுப்பி வைத்தார் அன் றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.

இலங்கை அரசியலில் நேர்மையும் கண்ணியமும் மிக்க ஒரு தலைவராக சிங்களத் தலைவர்களாலும் மதிக்கப் பட்டவர் செல்வா. அவர் மறைந்த போது நாடாளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய ஜே.ஆர். ஜெயவர்த்தன உட்பட அனைத்துச் சிங்களத் தலைவர்களும் பெரியவரின் தூய்மையான அரசியல் வாழ்வைப் பாராட்டிப் பேசினார்கள்.

'கத்தியின்றி இரத்தமின்றி யுத்த மொன்று வருகுது' என முன்பு இந்திய சுதந்திரப் போருக்குக் கட்டியம் கூறி னார் நாமக்கல் கவிஞர். தமிழர் உரிமை களைக்காக்க பெரியவர் செல்வா சத் திய யுத்தத்தைத் தொடங்கினார். திவ்வியமாக ஆரம்பித்த போர் திசை மாறியதற்கு சிங்கள மக்களே பொறுப் பாளிகள். காந்திய நெறியில் தொடங்கி இன்று ஏ.கே 47 துப்பாக்கிகள். ஏவு கணைகள், கனரகப்பீரங்கிகள் என பரிணமித்துள்ளது. வேலுப்பிள்ளை செல்வநாயகம் முதல் வேலுப்பிள்ளை பிரபாகரன் வரை போராட்டப் பாதையில் தமிழரின் நீண்ட பயணம் இன்னும் முடிய வில்லை. முடிவதாகவும் இல்லை. ஆயிரக்கணக்கானோர் யுத்த களத்திலே செத்து மடிகிறார்கள். பல்லாயிரக்கணக் கான அப்பாவித் தமிழர் உற்றார், உற வினரையும், வீடு, வாசல்களையும் இழந்து அகதியாகியுள்ளனர். யுத்தம் தொடர்கிறது. இந்த யுத்தத்தை காலத் தின் கொடுமை என்பதா? இங்கு அவல வாழ்வை நடத்தும் தமிழர்கள் பாவப்பட்ட ஜென்மங்கள். மறை வதற்குச் சில நாள்களுக்கு முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் தமிழரை இனிக் கடவுள் தான் காக்க வேண்டும் என்றார் செல்வா. விரக்தியில் கூறினாரா? அல்லது விசயம் அறிந்து தான் கூறினாரா? *****

ச. நவரத்தினம்
சட்டத்தரணி
(கரிகாலன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழைய டாக்டரும் புதிய டாக்டரும்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நகர மக்களும் டாக்டர்கள் ஜோவும் கெண்ட்டும் உடனடியாகவே ஸ்தலத்துக்கு விரைந்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

அப்போதுதான் அந்த நகரம் இதுவரை கண்டிராத வகையில் டாக்டர் கெண்ட்டின் அறுவைச் சிகிச்சைத் திறனும் அர்ப்பணிப்பும் ஓய்வில்லாமல் அந்தப் பிள்ளைகளைக் காப்பாற்ற அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் வெளிப்பட்டன. டாக்டர் கெண்ட் மின்னல் வேகத்தில் செயற்பட்டுத் தன் வீட்டையே ஒரு சத்திரசிகிச்சைக் கூடமாக மாற்றியதோடு, பக்கத்து நகரத்தில் இருந்து மூன்று அனுபவம் மிக்க தாதிமாரையும் இரண்டு மயக்க மருந்து கொடுக்கும் நிபுணர்களையும் வரவழைத்தார்

விபத்து நடந்த நிமிடத்திலிருந்து அடுத்து வந்த 36 மணித்தியாலங்களும் டாக்டர் கெண்ட் உணவருந்தவோ சிறிது நேரம் ஓய்வெடுக்கவோ இல்லை. இடையிடையே ஒரு கப் கோப்பி மட்டும் அருந்திவிட்டு தன் சிகிச்சையைத் தொடர்ந்தார். டாக்டர் ஜோ மட்டுமல்ல அந்த நகரவாசிகளே மூக்கின்மேல் விரல் வைக்குமளவுக்கு, மருத்துவ உலகமே வியக்குமளவுக்கு, படுகாயமுற்ற அந்தப் பிள்ளைகளின் உயிரைக்காப்பாற்றக் கிட்டத்தட்ட 40 மணிநேரம் கண்துஞ்சாமல் போராடினார் டாக்டர் கெண்ட். அவரது அயராத போராட்டம் எட்டுச் சிறுவர்களை உயிர் பிழைக்க வைத்தது. மருத்துவ ரீதியாக இந்த எட்டுச் சிறுவர்களும் பிழைத்தது அதிசயமாகவே கருதப்பட்டது. டாக்டர் கெண்ட்டின் சத்திரசிகிச்சைத் திறமையும், அர்ப்பணிப்பும் அயல் நகரவாசிகளுக்கும் பரவியது. அவரை ஒரு கதாநாயகனைப் போலவும் வீரனைப் போலவும் எல்லோரும் நோக்கினார்கள்.

விபத்தின் சோகத்திலிருந்து கிராமம் மெல்ல மெல்ல மீண்டது. வாட்டர் டவுன் அந்த நகரத்தில் ஒவ்வொரு வருடமும் நகர நிர்வாகமும், வர்த்தக சமூகத்தினரும் இணைந்து, வீரமும், தியாகமும் இணைந்த தீரச் செயலைச் செய்யும் ஒருவருக்கு ஒரு பெரிய விழா எடுத்து அவரைக் கௌரவிப்பதோடு ஒரு பெரிய வெள்ளிக் கிண்ணமும் பரிசாக அளிக்கும் வழக்கம் நீண்டகாலமாக அங்கு வழக்கில் இருந்து வந்தது

அந்த வருடம் இப்பரிசினைப் பெறத் தகுதியுடையவராக டாக்டர் கெண்ட் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்

விழா நாள், மண்டபம் ஜனத்திரளால் நிரம்பி வழிந்தது. கிராமமே திரண்டிருந்தது. அயல் நகரங்களிலிருந்தும் பிரபலமானவர்கள் வருகை தந்திருந்தார்கள். சந்தோசத்தால் மலர்ந்த முகத்துடன் டாக்டர் ஜோவும் முன் வரிசையில் அமர்ந்திருந்தார்.

இந்தச் சூழ்நிலையில்கூட டாக்டர் கெண்ட் வழக்கம் போல் எந்தவித உணர்ச்சியையும் முகத்தில் வெளிக்காட்டாமல் மேடையில் அமர்ந்திருந்தார். இதென்ன கொஞ்சம் கூட உணர்ச்சி இல்லாத மனிதராக இருக்கிறாரே என்று கூடச் சிலர் நினைத்தார்கள்.

பின்னர் சம்பிரதாய பூர்வமான ஆரம்ப உரை, வரவேற்புரை என்பவற்றின் பின்னர் ஈற்றில் நகரத்தின் மேயர் எழுந்து ஒரு சிறப்பான பாராட்டுரையை வழங்கிவிட்டு, ஒரு பெறுமதிமிக்க வெள்ளிக் கோப்பையைப் பலத்த கரகோஷங்களுக்கு மத்தியில் டாக்டர் கெண்ட்டிடம் வழங்கினார். பரிசினைப் பெற்றுக்கொண்ட டாக்டர் கெண்ட் மேடையில் ஒலி வாங்கிக்குநேரே வந்து, நோயாளிகளுடன் பேசும் அதே அதிகாரம் கலந்த - சிநேகபூர்வமில்லாத - இறுக்கமான தொனியில் பேச்சைத் தொடங்கினார்.

''அன்பர்களே! நீங்கள் எனக்கு அளித்த இந்த மறக்கமுடியாத கௌரவத்துக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன். ஆனாலும் எனது மனதில் தோன்றும் சில கருத்துக்களை உங்கள் முன்வைக்க விரும்புகின்றேன். இங்கே நடந்த கோர விபத்தின் போது காயமுற்றோருக்கு நான் அளித்த சேவைகளுக்காக நீங்கள் என்னைக் கௌரவித்திருக்கிறீர்கள் என எண்ணுகிறேன். ஆனால் ஒரு டாக்டராக இருப்பவன், இப்படியான ஓர் இக்கட்டான சந்தர்ப்பத்தில், தனது முழுத்திறமையையும் காட்டவேண்டும். இல்லையேல் அவன் வைத்தியத் தொழிலைக் கற்றுக்கொள்வதில் எதுவித அர்த்தமுமில்லை. அன்று நடந்த விபத்தைப்போல, எதிர்பாராத அவலமொன்று நடக்கும்போதுதான் எமது சேவையை நாம் முழுதாகச் செய்யும் சந்தர்ப்பமும், எங்கள் அறிவைப் பிரயோகிக்கும் வேளையும் வருகின்றது. உண்மையில் எமக்குக் கிடைக்கும் அறிவைப் பிரயோகிக்கும் அச் சந்தர்ப்பம் எமக்கு ஒரு கடமையே தவிர இப்படியான ஒரு பாராட்டுக்கு அந்தச் சம்பவங்கள் அருகதையாகாது என்பதுதான் எனது தாழ்மையான அபிப்பிராயம். அன்று அவரவர் திறமைக்கேற்ப இந்தநகர மக்கள் செயற்பட்டார்கள். டாக்டர் என்ற முறையில் நான் செயற்பட்டேன். ஆகவே இதை ஒரு விசேட செயலாகக் கருதி இந்தப் பாராட்டை எனக்குத் தருவது பொருத்தமில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

இங்கு நடந்ததைப் போன்ற விபத்துக்கள் எப்போதோ ஒரு முறைதான் எதிர்பாராத வகையில் நடக்கின்றன. ஆனால் அப்படியான சந்தர்ப்பங்களில் மட்டும்தான் நாம் மனிதாபிமானமுள்ள ஒரு வைத்தியனாக நடந்து கொள்ளவேண்டும் என்பதில்லை. அதற்கு அப்பாலும் தினசரி வாழ்க்கையிலும் நாம் மற்றவர்களுக்கு மேலான நிலையிலுள்ள ஒரு வைத்தியனாக நடந்து கொள்ளவேண்டும். அது தான் எங்கள் யாவராலும் எதிர்பார்க்கப்படுவது.

ஆனால் கடந்த மூன்று வருடங்களில் நான் அப்படி நடந்துகொண்டிருக்கவில்லை என்றே நினைக்கிறேன். இரவில் யாராவது அழைக்கும் போது மிக அவசரம் என்று நான் அந்த நிலையை உணர்ந்தால் மட்டுமே அதுவும் சற்றுத் தயக்கத்துடனே சென்றிருக்கிறேன். ஆனால் என்னைவிடப் பல வருடங்கள் மூத்த டாக்டரான ஜோ அவர்கள் இரவு பகல் பாராமல் எந்தக் கஷ்டமான கால நிலையிலும் அந்த அழைப்புகளுக்காக நேரில் சென்றிருக்கிறார். கடைசியில் எனக்கு வரும் அழைப்புக்களையும் அவரே ஏற்றுச் செயற்பட்டிருக்கிறார்.

என்னுடைய நோயாளிகளையும் இரவில் அழைப்புவரும்போது தாம் சென்று பார்க்க அனுமதிக்கவேண்டும் என்று அவர் கேட்டபோது, முதலில் என் மனதில் பட்டதை நான் இப்போது பகிரங்கமாகக் கூறுகிறேன். வைத்தியசாலையில் கிடைக்கும் சம்பளம் அவருக்கும் போதவில்லைப் போலிருக்கிறது. ஆகவேதான், இப்படிக் கொஞ்சம் 'எக்ஸ்ட்ராவாக' உழைக்கவிரும்புகிறார் போலிருக்கிறது என்றுதான் நான் அப்போது நினைத்தேன். சரி உழைத்துவிட்டுப் போகட்டும், என்றுதான் அதற்கு அனுமதியும் கொடுத்தேன். ஆனால் பின்னர் எனக்கு உண்மை தெரிந்தபோது நான் மிக மிக ஆச்சரியப்பட்டேன். தன்னுடைய சொந்தக் காரிலே, தமது செலவிலேயே பெட்ரோல் நிரப்பிக் கொண்டு ஓர் இரவில் கிட்டத்தட்ட ஆறு ஏழு இடங்களுக்கு, அதுவும் ஒரே வழியில் இல்லாமல், அவர் போய் வந்திருக்கின்றார். அதற்காக அவர் பார்த்த நோயாளிகளிடமிருந்தோ அல்லது என் நோயாளிகளைப் பார்ப்பதற்காக என்னிடமிருந்தோ அவர் ஒற்றைச் சதம் கூடப் பெற்றுக்கொண்டதில்லை:

ஏன் இப்படி என்று ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினேன். அப்போதுதான் இரவில் ஓர் அழைப்பு வரும்போது அதற்கு ஏன் நான் உடனடியாகப் போகவேண்டும் என்ற உண்மை புரிந்தது. எனது கோணத்தில் பார்க்கும்போது, அது அவசரமில்லாத அழைப்பு என்பது வைத்தியரான எனக்குத் தெரியும். ஆனால் நோயாளர் என்ற கோணத்திலிருந்து சிந்தித்தபோதுதான் எனக்குத் தெளிவு பிறந்தது.

விடயம் முக்கியமும் அவசரமும் இல்லை என்று எனக்குத் தெரியும். ஆனால் நோயாளிக்கோ, அவரது மனைவிக்கோ, பிள்ளைகளுக்கோ அது தெரியுமா? அவர்களைப் பொறுத்தவரையில் தமது தாயோ, தகப்பனோ, பிள்ளையொன்றோ இரவில் நோயிற்றிருக்கிறார். அவரை வைத்தியசாலைக்கு அந்த இரவில் கொண்டுபோக முடியாது. அவர் உடல் நலம் அடைய வேண்டும். அதற்கு ஒரேவழி வைத்தியர் வந்து பார்ப்பதுதான் என்று அவர்கள் துடிப்பார்கள். இந்தத் துடிப்பைத் தணித்து அவர்கள் அனைவருக்கும் ஒரு பாதுகாப்பு உணர்ச்சியை உருவாக்குவது வைத்தியரின் வரவு ஒன்றுதான். வைத்தியரைக் கண்டவுடனேயே நோயாளிக்கு அரைவாசி நோய் தீர்ந்துவிடும். சுற்றியுள்ளவர்களோ நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள். அதுவும் நோயாளிக்குப் பெரிய வருத்தம் இல்லையென்று வைத்தியர் தன் வாயால் சொல்லிவிட்டாலோ, அந்தக் குடும்பத்தின் மகிழ்ச்சிக்குக் கேட்கவேண்டுமா? இந்த மகிழ்வையும் பாதுகாப்பு உணர்வையும் இரவில் ஒரு நோயாளிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் கொடுப்பது, வைத்தியத் தொழிலிலேயே ஒரு புனிதமான பகுதியல்லவா?

இதைத்தான் தன் ஓய்வையும் மறந்து இரவில் கண்விழித்து, எந்தவித வருமானமுமில்லாமல் டாக்டர் ஜோ செய்து வந்திருக்கிறார்.

''வைத்தியத் தொழிலின் புனிதத்தன்மையை அவரிடமிருந்துதான் நான் கற்றுக் கொண்டேன். தனது வாழ்நாள்களையே இந்த நகர மக்களின் நல்வாழ்வுக்கும், நிம்மதிக்கும், மகிழ்ச்சிக்கும், பாதுகாப்பு உணர்ச்சிக்கும் செலவிட்டு அதற்கு இதுவரை எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் இருக்கின்றார்.''

இந்த இடத்தில் டாக்டர் கெண்ட் சற்றே நிறுத்தினார். சாதாரணமாக உணர்ச்சியற்ற அவரது முகம், சிவந்து கண்கலங்குவதை அங்குள்ளோர் கண்டார்கள், தனது கைக்குட்டையால் இவர் கண்ணைத் துடைத்துக்கொண்டபோது கூட்டத்திலும் அநேகமானோர் தாமும் அதையேதான் செய்தார்கள். மண்டபத்தில் ஆழ்ந்த நிசப்தம் நிலவியது. ஓரிரு நிமிட நிசப்த்தின் பின்னர் மீண்டும் டாக்டர் கெண்ட்டின் குரல் கணீரென ஒலித்தது.

''ஆகவே நண்பர்களே, நீங்கள் இன்று எனக்கு வழங்கிய பாராட்டும் இந்த விலைமதிப்பற்ற வெள்ளிக் கிண்ணமும் டாக்டர் ஜோவுக்குத்தான் உரியது என்பதை இப்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இன்று மட்டுமல்ல என்றுமே அவர்தான் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய பெருமகன் என்பது எனது உறுதியான நம்பிக்கை.''

தனக்கு அளிக்கப்பட்ட வெள்ளிக் கிண்ணத்தைக் கையிலேந்திக் கொண்டு மேடையிலிருந்து கீழிறங்கிய டாக்டர் கெண்ட் கலங்கிய கண்களுடனும் திகைத்த முகத்துடனும் நின்று கொண்டிருந்த டாக்டர் ஜோவின் அருகில் சென்றார்.

''டாக்டர் ஜோ! இந்தப் பரிசில் உங்களுக்கே உரியது. தயவு செய்து இதனைப் பெற்றுக் கொள்ளுங்கள். என்றாவது ஒரு நாள் நானும், உங்கள் கடமையுணர்ச்சியிலும் தியாகத் திலும் ஓர் அரைப்பங்கையாவது நிறை வேற்றி ஒரு நல்ல வைத்தியராகச் சேவை செய்வேன் என்று உறுதி கூறுகிறேன்.''

தழுதழுத்த குரலில் டாக்டர் கெண்ட் இப்படிக் கூறிவிட்டுக் கலங்கிய கண்களுடன் ''அங்கிள் ஜோ இதை வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்று சொன்னபோது அரங்கத்திலுள்ள பலரும் தங்கள் பனித்த கண்களைத் துடைத்துக் கொண்டார்கள்.

''வைத்தியர்கள்'' என்பதற்கு உதாரண புருஷர்களாக சுட்டிக் காட்டப்படவேண்டியவர்கள் இவர்களல்லவா? ✱✱✱

(ஆங்கில மூலம்: ''ரீடேர்ஸ் டைஜிஸ்ட்'' ஜனவரி - 1950)

## சொற்சிலம்பம் - போட்டி இல:58

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | | | ■ | |
| ■ | 13 | | | | ■ | 14 | |
| 15 | | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | | |
| 19 | | ■ | 20 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### மேலிருந்து கீழ்

1. இது நின்றால் நமது உயிர் பிரிந்துவிடும்.
2. கவிதை.
3. அமெரிக்கா தற்போது பிரயோகிப்பது.
4. பட்சிபோல் வானத்தில் சஞ்சரி.
5. முன்னைய காலத்தில் அவசரச் செய்தி அனுப்ப இதுதான் ஊடகம்.
6. அர்த்தமற்று விவாதித்தல்.
8. சிங்கம்.
10. அருந்துதல்.
13. தீய்தல்.
14. முடிவு.
15. ராணி.
16. போற்ற/ வணங்க.
18. பிழை அல்ல.

### இடமிருந்து வலம்

1. ஒருவரின் இயல்பு.
4. தொழில் நிலைமை.
7. வதங்கல்.
8. மேன்மையான/உயர்ந்த.
9. கூடிக் குலாவுதல்.
11. பலம்/ வலி.
12. பெண்ணொருத்தி திருமணமானவர் என்பதை உறுதிப்படுத்தும் அடைமொழி.
13. கையுக்கும் விலாவுக்கும் இடைப்பட்ட பகுதி.
14. ஆசைப் பெருக்கம்.
15. குறைந்து போதல்.
16. தாங்க/விழாமல் பிடிக்க.
17. விதம்.
18. ஒலியால் கேட்பது.
19. குளிர்வதும் இப்படி/ வண்டு சத்தமிடுவதும் இப்படி.
20. வரலாறு.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 58**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர் (06.05.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 58 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 10.05.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பிவருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 56 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்

(1) அபிமன்யு. (5) சக. (7) முரண். (8) வரைதல். (9) தசை. (10) கதி. (11) கவி. (12) பண். (13) அம்மா. (14) கண்டனம். (15) பட்டம். (16) பாசி. (18) தடம். (19) சிரிப்பு. (21) விளை. (22) பறை. (23) பிகு.

மேலிருந்து கீழ்

(1) அமுதம். (2) பிரசை. (3) மண். (4) யுவதி. (5) சதகம். (6) கல்விமான். (10)கண்டம். (12) பண்டம். (13) அம்பாரி. (14) கட்டளை. (15) பதவி. (17)சிப்பி. (19) சிறை. (20) புகு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் : 56 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள்வருமாறு:

**1 ஆம் பரிசு** கி.இந்திரகலா,
இல.89 A, காரைக்காட்டு வீதி,
வண்.வடமேற்கு, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** கி.வஜிரனி,
விக்னேஸ்வரா கல்லூரி வீதி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

**3 ஆம் பரிசு** மு.லிங்கராசாநீதி,
ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) அ.அமலறோஸ்,
இல.33, [illegible]
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(2) ர.மீனுஜா,
பலாலி வீதி,
கோண்டாவில்.

(3) ஜெயசேகர நகுலன்,
671/3, பூநாறிலேன், கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(4) அ.சியாம்சுந்தர்,
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(5) கணேசராசா கபிலன்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பதைக் கொண்டு சிறப்பாய் வாழ்

புத்தூர் என்னும் கிராமத்தில் நிசாந் என்னும் வியாபாரி இருந்தான். அவனுக்கு ஜீவன் என்றொரு நண்பன் இருந்தான். இருவரும் சந்தையில் வியாபாரம் செய்பவர்கள். இருவரும் ஒரே விவசாயியிடம் மரக்கறி வாங்குவார்கள். ஜீவனது எண்ணம் தான் பணக்காரன் ஆக வேண்டும் என்பதாகும். அதனால் தான் வாங்கும் மரக்கறிகளை அதிக விலைக்கு விற்பான். நிசாந்தோ இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழ வேண்டும் என்ற நோக்குடன் நியாயமான விலைக்கு விற்பான். நிசாந் எவ்வளவு கூறினாலும் ஜீவன் கேட்க மாட்டான். அனுபவப்பட்டால்தான் தெரியும்



என்று ஜீவன் அவன் போக்கில் விட்டு விட்டான். ஜீவனிடம் மரக்கறிகளின் விலை அதிகம். ஆனால் நிசாந்திடம் மரக்கறிகள் நியாயமான விலையில் கிடைப்பதால், மரக்கறி வாங்கும் அனைவரும் நிசாந்தின் கடையையே சூழ்ந்தனர். ஜீவனின் மரக்கறி விற்பனை குறையத்தொடங்கியது. இதனால் ஜீவன் நிசாந்தைப் பார்த்துப் பொறாமைப்பட்டான். அப்போது நிசாந் ''நீ அனுபவப்பட்டுவிட்டாய். இனிமேல் நீ இவ்வாறு செய்யாதே. அளவுக்கு அதிகமாக ஆசைப்படாமல் உள்ளதைக் கொண்டு சிறப்பாக வாழக் கற்றுக்கொள்வாய்'' என்றான். அன்றிலிருந்து ஜீவன் நிசாந்தின் நல்ல சொற்களைக் கேட்டு அளவுக்கு அதிகமாய் ஆசைப்படாமல் நல்லவனாய் நடந்தான்.

*நா.துவாரகா, தரம் - 8, யாழ்/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.*

# பொது அறிவு

| | | |
|---|---|---|
| 01. ஜனநாயகத்தின் பிறப்பிடம் | - | கிரேக்கம் |
| 02. உலகில் ஒரே ஒரு இந்து மத நாடு | - | நேபாளம் |
| 03. உலகின் மிகப்பெரிய வளைகுடா | - | மெக்சிக்கோ |
| 04. கூடிய நாடுகள் கொண்ட கண்டம் | - | ஆபிரிக்கா |
| 05. நதிகள் ஓடாத நாடு | - | சவுதி அரபியா |
| 06. உலகில் மிகச்சிறிய நாடு | - | வத்திக்கான் |
| 07. உலகில் மிகப் பெரிய கடல் | - | தென் சீனக்கடல் |
| 08. உலகில் மிகக் குளிரான இடம் | - | அந்தாட்டிக்கா |
| 09. மிக உயரத்தில் உள்ள ஏரி | - | டிற்றிக்கா |
| 10. சூரியன் உதிக்கும் நாடு எனக் கூறப்படும் நாடு | - | ஜப்பான் |
| 11. சாய்ந்த கோபுரம் உள்ள நாடு | - | இத்தாலி |
| 12. உலகின் மிகப் பெரிய மலை | - | இமயம் |
| 13. மிகப் பெரிய சமுத்திரம் | - | பசுபிக் சமுத்திரம் |
| 14. மிகக்கூடிய சனத் தொகை உள்ள நாடு | - | சீனா |
| 15. உலகின் மிகப் பெரிய தீவு | - | கிறீன்லாந்து |

சி. செந்தூரன், *தரம்- 7B, யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.*




# சீருடை

**பள்ளிச்சிறுவர் சிறுமியர்**
**பெருமையோடு அணிவது**
**அள்ளும் அழகுச் சீருடை!**
**அதற்கு ஈடு இல்லையே!**

**பட்டு ஆடை அணிகளும்**
**பார்ப்பதற்கு அழகு தான் !**
**இட்டமுடனே சிறுவர்கள்**
**இதனை அணிவார் ஆயினும்**

**ஏழை எளியர் என்கின்ற**
**ஏற்றத் தாழ்வைப் போக்கியே**
**எம்மதமும் சம்மதம்**
**என்று பறை சாற்றிடும்**

**திங்கள் தொடங்கிச் சனிவரை**
**தினமும் நாங்கள் அணிவது**
**எங்கள் பள்ளிச் சீருடை**
**என்னை மிகவும் கவர்ந்தது.**

*சோ.கரிகரன்*
தரம் - 9C, யாழ்.இந்துக் கல்லூரி

# கல்வி



கல்வி என்பது எல்லையில்லாதது. பெறுமதி மிக்கது. வீரன் ஒருவனுக்கு உடல் தளருமேயானால் வீரம் அவனிடம் இருந்து விலகிவிடும். அதே போல் பணக்காரனிடம் பணம் பறிபோனால் அவன் ஏழையாகி விடுவான். இவர்களை மதித்தவர்கள் யாவரும் மிதிப்பார்கள். ஆனால் கல்வியோ அப்படியானது அல்ல. ஒருவன் இறந்த பின்னும் கூட வரும் என்று பழந் தமிழ் நூல்கள் கூறுகின் றன. எனவே உங்களால் முடிந்தவரை கல்வி கற்க வேண்டும். சாதாரணமாக ஒரு மனிதன் தனது ஐந்தாவது வயதில் கல்வியைத் தொடங்குகிறான். ஆனால் பலர் கல்வியை இடையிலே கைவிட்டு விடுவார்கள். ஒருவன் இறக்கும் வரை கல்வியைத்தொடர வேண்டும். ஒருவன் அறிவின்மையால் கெட்ட ழிந்து போவதைப் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. அத்துடன் ஒருவன் எந்தெந்த வயதில் என்ன செய்ய வேண்டும் என்பதை கல்வி கூறுகிறது. கல்வியை நாம் இளமையில் கற்க வேண்டும். கற்காவிட்டால் பின் கற்க முடியாது. எனவே நீங்கள் பாடசாலைக்குச் சென்று கல்வியை ஒழுங்காகக் கற்றுக் கொள்ளுங்கள்.

*கல்வியைக் கற்றால்*

*வாழ்வில் முன்னேறலாம்.*

*ச.அருள்வாணி, தரம் - 8*
யா/ இணுவில் மத்திய கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? - 15

01. ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரின் பெயர் என்ன?
02. டென்னிஸ் உலகில் இப்போது கொடிகட்டிப் பறக்கும் சகோதரிகளின் பெயர் என்ன?
03. பற்பசையில் அடங்கியுள்ள இரசாயனப் பொருள் என்ன?
04. விண்வெளிக்கு இந்தியா அனுப்பிய முதலாவது செயற்கைக் கோளின் பெயர் என்ன?
05. சர்வாதிகார கிட்லரின் பிறந்த தினம் எப்போது?

**விடை தெரியுமா?**

**தெரிந்தால் 06.05.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.**

### விடை தெரியுமா?-11
சரியான விடைகள்

(1) மகேந்திரசிங்டோனி. (2) தென்னாபிரிக்கா.
(3) கோர்டன் பிறவுண்.
(4) திலீப்குமார்.
(5) மணிமொழி.

### பரிசுபெறுவோர்

01. ச.தயாளினி,
*தரம் - 9B, யா/ நெ/ மகா வித்தியாலயம்.*
02. ந.மதுநிலவன்,
*தரம் - 7A, யா/ புற்றளை மகா வித்தி.*
03. ச.சாரங்கா,
*தரம் - 9B, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாட.*
04. ஜெ. துவாரகா,
*தரம் - 3 C, யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாட.*
05. ஸ்ரீ.அகில்றாஜ்,
*தரம் - 9B, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.*
06. சி.கிருஷ்ணப்பிரியா,
*தரம் - 7D, வேம்படி மகளிர் உயர்தரப் பாட.*

குறிப்பு:
விடை தெரியுமா பகுதியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குகொள்ளலாம். விடைத்தாள்களுடன் சிறுவர் கதிர் விண்ணப்பப் படிவம் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். விடைத்தாளுடன் பெயர், தரம், பாடசாலை போன்ற விபரங்களை மறக்காது குறிப்பிடுங்கள்.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்




தாம் இன்னமும் மாயத்தீவில் இருப்பதையும், தம்மைப் பிடிப்பதற்கு மந்திரக்கிழவி வகுத்துள்ள திட்டத்தையும் அறிந்த மூவரும் பயம் ஏற்பட்டதில் வியப்பேதுமில்லை. ஆனால் அந்தப் பயமே அவர்களுக்குள் ஒரு வீரத்தையும் உண்டு பண்ணியிருந்தது. அரச வம்சத்தவர் மூவரும் பதுங்கியிருந்த அறை மூடியிருந்ததால் ஒரே இருட்டாயிருந்தது.

சந்திர வர்மா உன்னிடம் உள்ள இரத்தினக் கல்லை வெளியே எடுத்து ஒளிரச்செய். அப்போதுதான் இங்கிருந்து தப்பிப்பதற்கு ஏதாவது வழி கிடைக்கிறதா எனக் கண்டு பிடிக்க முடியும் என்றான் இந்திரவர்மன். அவனது சொல்லுக்காகவே காத்திருந்தவன் போல அடுத்த கணமே ஒளிரும் தன்மை கொண்ட இரத்தினக்கல்லை வெளியே எடுத்தான் சந்திரவர்மன். அப்போது, ''இளவரசர்களே! இந்த ஒளிரும் கல்லை உள்ளே எடுத்து வையுங்கள். இதன் ஒளி அறைக்கதவிலுள்ள துவாரத்தின் மூலம் வெளியே கசிந் தால் அதை வைத்தே நாமிருக்கும் இடத்தை மந்திரக் கிழவி அறிந்துவிடுவாள்'' என மணிமொழி பயங் கலந்த குரலில் கூறினாள். அவளது பயத்தை அறிந்ததும் அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் இந்திரவர்மனுக்குச் சிரிப்பு வந்தது

''மணிமொழி இதனை நீ சாதாரணமான ஒளிக்கல்லாக நினைத்து விடாதே. இதன் ஒளி நமக்கு மட்டும் தான் புலப்படும். இது ஓர் அபூர்வக்கல்'' [illegible] மணிமொழிக்கு நிம்மதியாக [illegible] நேரமே நீடித்தது. அதற்குள்.........



(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாணவர் தூரிகை



ஸ்ரீ.தர்சிகன், தரம் -5 B,
யா/பண்ணாகம் மெய் கண்டான் ம.வித்தி.




ச.நிதர்சினி, தரம் - 6 C,
யா/மெ.பெ.உ.பாடசாலை.



சு.கஜியன், தரம் - 3D,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.



நா.கீர்த்திகா, தரம் - 7A,
யா/இணுவில் மத்திய கல்லூரி.



ச.யதுசன், தரம் - 6 C,
யா/மகாஜனக் கல்லூரி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோசப் மரியநாயகம் மேரி பிலோமினா



கொடிகாமம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் மரியநாயகம் மேரி பிலோமினா 22.04.2009 வலைஞர் மடத்தில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி - எவுசேனி தம்பதியரின் அன்புப் புதல்வியும் யோசப் மரியநாயகத்தின் பாசமிகு மனைவியும் மேரி ஜஸ்ரின், மேரி அல்பினா, ஜோண் பப்ரிஸ், ஜோண் புளோரன்ரையின், மேரி எட்னா, காலஞ்சென்ற மேரி இஜினா ஆகியோரின் அன்புத் தாயும் செபஸ்தியாம்பிள்ளை, சந்திரிக்கா ஆகியோரின் அன்பு மாமியும் ஷறான்சிஜா, றொக்சன், டெசிக்கா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கடந்த வியாழக்கிழமை 23.04.2009 வலைஞர்மடம் கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில், கொடிகாமம். (84714) தகவல்: குடும்பத்தினர்.

## கந்தையா கனகலிங்கம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி பரலோகமாதா கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகலிங்கம் (23.04.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - சீதேவி தம்பதியரின் அன்பு மகனும் நீர்வேலி பரலோகமாதா கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அருளப்பு (தம்பு) - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அருள்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருள்சோதி (ரதி), கனகராசா (ரவீந்திரன்), அருள்ராஜ் (சந்திரன்), மகிழ்ராஜ் (லோறன்), அருள்சிசிலியா (ரோகினி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பூமணி (மணி), சுதா [illegible] (சுதா), சுகந்தி, அன்ரனி (நியூட்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஹர்சினி, மதுசினி, ரோகினி, மதுசியா, மௌழிகா ஆகியோரின் அன்புப் பேரனும் அருட்பிரகாசம், அருளானந்தம் (ராசு), அருள்தாஸ் (துரை -கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை இல.112/44, சென்.பெனடிக்ற் மாவத்தை, கொழும்பு - 13 இல் உள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 4.30 மணிக்கு சென்.லூசியஸ் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மாதம்பிட்டிய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.112/44,
சென்.பெனடிக்ற் மாவத்தை,
கொழும்பு -13

தகவல்:
அருட்பிரகாசம் (மைத்துனர் - நீர்வேலி),
T.J.கந்தசாமி (தொட்டமகன்),
தொ.பே: 077 6684942.

# நினைவு அஞ்சலி

| 31ஆம் நாள் | 12ஆம் ஆண்டு |
|---|---|
| மலர்வு 28.06.1942 – உதிர்வு 27.03.2009 | மலர்வு 08.06.1972 – உதிர்வு 01.08.1997 |



**அமரர் கார்த்திகேசு பாலசுப்பிரமணியம்**

திதி: 26.04.2009 (துதியை)



**பாலசுப்பிரமணியம் ருசிகாந்தன்**

நினைவில் எம்முடனும் நிஜத்தில் ஆண்டவன் பாதங்களிலும்
கலந்திருக்கும் நீங்கள் எம்மைவிட்டு மறைந்துவிட்டாலும்
உங்கள் நினைவுகள் ஒருபோதும் எம் நெஞ்சங்களை விட்டு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு. மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.26

கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி வெளி வீதி வலம் வரவுள்ளார். அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறவுள்ளது. (201)

* * *

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரண்டு தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201)

* * *

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் தினமும் முற்பகல் 11 மணியளவில் சைவப்புலவர் நித்திய தசீதரனின் "முருகன் பெருமை" எனும் சொற்பொழிவு இடம்பெறும். (9-29)

## சீரணி மணிமண்டப திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஏப்.26

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் சீரணி மணிமண்டபத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.(204)

## ஜெயந்தி தின விழா

யாழ்ப்பாணம், ஏப்.26

சிவஸ்ரீ முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் (மோனகுரு) 104ஆவது ஜெயந்தி தின விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் கொண்டாடப்படவுள்ளதால் அனைவரையும் வருகை தந்து சுவாமிகளின் அருளாசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கடவுள் சுவாமிகளின் அடியார்கள் அறிவித்துள்ளனர்.

அன்றையதினம் செல்வச்சந்நிதி முருகப் பெருமானுக்கு விசேட பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூசை இடம் பெறவுள்ளது. (201)

# இடம்பெயர்ந்தவர்களுக்கு 30 ஆயிரம் ரூபா நிதியுதவி

சுழிபுரம், ஏப்.26

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் 30 ஆயிரம் ரூபாவை இடம்பெயர்ந்து யாழ்.மாவட்ட நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு உதவுவதற்காக வழங்கியுள்ளனர்.

இந்த நிதியை கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலில் சென்ற வாரம் நடைபெற்ற தேர், தீர்த்த திருவிழா நாள்களில் அடியார்களிடம் இருந்து திரட்டிக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (04-28)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி துரை (ஹட்டன் துரை)

**(முன்னாள் வர்த்தகர், டிக்கோயா)**



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு, வட்டிவினியை வதிவிடமாகவும் தற்போது குமரகோட்டம் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரை (25.04.2009) சனிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமணியின் அன்புக் கணவரும் சரவணபவன் (வர்த்தகர்), தனராணி (சுவிஸ்), பிரணவச்செல்வன் (ஸ்ரீ அம்மன் றேடர்ஸ்), அபிராமி மனாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேமதாசன் சசிகலா, கௌரி ஆகியோரின் பாசமிகு மாமனும் தர்சிகன், தர்மினி (சுவிஸ்), நிஜந்தன், கஜானன், நிஷாயினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம், கோண்டாவில்.
தொ.பே: 021 222 7372 (84708) தகவல்: குடும்பத்தினர்.

## நல்லையா தனபாலசிங்கம் (தனம்)

(முன்னாள் நீர்ப்பாசன அதிகாரி - தண்ணீர் முறிப்புகுளம் - முல்லைத்தீவு)

கரணவாய் வடக்கு, நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், புளியங்குளம், பளையை வதிவிடமாகவும் கனடா (ரொறண்டோ)வை வதிவிடமாகவும் கொண்ட நல்லையா தனபாலசிங்கம் 20.04.2009 அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - செல்வராணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற பளை (கச்சார்வெளி) வீரகத்தி - பூரணத்தின் அன்பு மருமகனும் மங்கையர்க்கரசி (மங்கை)யின் அன்புக் கணவரும் அமரர் சற்குணராஜா மற்றும் செந்துவடிவேல் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் மலர்விழி (பிரான்ஸ்), ஜெயமாலினி (பிரான்ஸ்), ஜெயதீபன் (கனடா), ஹரிகிருஷ்ணா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்காந்தராசா (பிரான்ஸ்), விஜயரூபன் (பிரான்ஸ்), சதாலஷ்மி (கனடா) ஆகியோரின் மாமனும் கஜீதன், றேனுஜன், ஜிலக்ஷி, சரண், சகீரன், சாரகி (பிரான்ஸ்), தீக்ஷா (கனடா) ஆகியோரின் பேரனும் விஜயராணி (பிரான்ஸ்), ராஜேஸ்வரி (கனடா), தர்மகுலசிங்கம் (G.S.- வவுனியா), ஜெயவீரசிங்கம் (இந்தியா), சோதிமலர் (வவுனியா), பத்மராணி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவநாதன் (ரூபி ஹோட்டல் - புளியங்குளம்), பாலசுப்பிரமணியம், விஜயலட்சுமி, வளர்மதி, நகுலேந்திரராஜா, கணேசன், திருமதி மனோன்மணி, இராசமணி, கணேசன், பூமணி, சிதம்பரநாதன், காலஞ்சென்றவர்களான புஷ்பா, செல்வகுலசிங்கம், குணரட்ணம் மற்றும் மல்லிகாதேவி, கமலவேணி, பாலசிங்கம், நடேசு, சிவகங்கா, பேரின்பநாதன், கௌசலா, கிருஷ்ணதாசன், நாகபூசணி, சத்தியவதனி, சுந்தரலிங்கம், தேவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 2035 Weston Road, North York இல் அமைந்துள்ள Ward Funeral Home இல் புதன்கிழமை 22.04.2009 பி.ப.3 மணி முதல் 9 மணி வரையும், வியாழக்கிழமை 23.04.2009 காலை 9 முதல் 11 மணி வரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 11.30 மணியளவில் Riverside Cremation இல் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன என்பதை அறியத்தருகிறோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:
மங்கை (மனைவி): 4162429098, ஜெயதீபன் (மகன்): 4169036998
தகவல்: ந.ஜெயவீரசிங்கம் (சகோதரன்)
70/2, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13, இலங்கை.
போன் - 0094112478875.






## தவறிவிட்டது

இல.112, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஜேசுதாசன் கஜேந்திரகுமார் என்பவரது தேசிய அ.அட்டை(833044907 V) 23.04.2009 அன்று யாழ்ப்பாணத்திற்கும் கொடிகாமத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.01, முதலாம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. 0776381293

## விற்பனைக்கு

புதிய, பழைய வீடியோப் படக்கொப்பிகள் விற்பனைக்குண்டு. மொத்தம் 2000 கொப்பிகள்
**நரேன் வீடியோ சென்ரர்**
140, பருத்தித்துறை வீதி [வீரமாகாளியம்மன் கோயில் அருகில்].

## காணி தேவை

யாழ்.மாநகசபை எல்லைக்குள் பிரதான வீதிகளில் 1-2 பரப்புக் காணி தேவை.
இடைத்தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0771744581
(84821)

## மணமகன் தேவை

Jaffna Hindu கௌரவகுடும்பம், 28 வயது, திருவாதிரை நட்சத்திரம், BBA, CIMA Fully Qualified, Australia P.R. மணமகளுக்கு மணமகன் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. 3 சுற்றுக் கிரக பாவம். இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) Profile Number 3, T.P.2523127, 2520619. (சி/568187)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈரானிய ஜனாதிபதி உரை ஏற்படுத்திய சர்ச்சை



இனப்பாகுபாட்டுக்கு எதிராக போராடுவதற்காக உலக நாடுகளை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்ட ஐ.நா மாநாட்டை இம்முறையும் அமெரிக்காவும் பல மேற்குலக நாடுகளும் புறக்கணித்துள்ளன.

இனப்பாகுபாடு, பாலியல் சமத்துவமின்மை மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பது போன்ற முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான உலகளாவிய தளமொன்றை ஏற்படுத்துவதே ஐ.நாவின் இம்மாநாட்டின் நோக்கம்.

1978இல் முதன் முதலாக இம்மாநாடு இடம்பெற்றவேளை முற்றுமுழுதாக தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கை குறித்து மாத்திரமே கவனம் செலுத்தப்பட்டது.

அதன் பின்னர் இரு தடவைகள் இந்த மாநாடு நடைபெற்றுள்ளது. 1983இல் ஜெனீவாவிலும் 2001 இல் தென்னாபிரிக்காவின் டேர்பனிலும் இம்மாநாடு நடைபெற்றது.

2001இல் டேர்பனில் இடம்பெற்ற மாநாட்டில் ஒடுக்குமுறைக்கு உள்ளான சிறுபான்மைச் சமூகங்கள் குறித்து ஆராயத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், இஸ்ரேலிய - பாலஸ்தீன மோதல் முக்கியத்துவம் பெற்றதால் மாநாட்டின் நோக்கம் தடம்புரண்டது.

சியோனிஸத்தை இனவெறியுடன் ஒப்பிட்டு இஸ்ரேல் இனக்கொலை யுத்தக் குற்றங்களைச் செய்கிறது என குற்றம் சாட்டும் தீர்மானமொன்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவும் இஸ்ரேலும் டேர்பன் மாநாட்டிலிருந்து வெளியேறியிருந்தன.

இஸ்ரேலுக்கு எதிராக அரச சார்பற்ற அமைப்புகளும் கடும் பிரசாரத்தை மேற்கொண்டிருந்தன.

ஜெனீவாவில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகள் சபையின் இனவெறிக்கெதிரான மாநாட்டில் மீண்டும் இதே மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

அமெரிக்கா, இஸ்ரேல், ஜேர்மனி, இத்தாலி, கனடா உட்பட பல நாடுகள் பகிஷ்கரித்துள்ள இந்த மாநாட்டை ஈரானிய ஜனாதிபதி அஹமடி ஜாட் தனது உரையில் மிகுந்த கொந்தளிப்பானதாக மாற்றியுள்ளார்.

யூதர்களின் துயரத்தை சாக்காக வைத்து பாலஸ்தீனர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர் என குற்றம் சாட்டிய அவர் இஸ்ரேலை உலகின் கொடூரமான இனவெறி அரசாங்கம் என்றார்.

மேற்குலகின் பல பிரதிநிதிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தனர். கேலிக்கூச்சல்கள் எழுப்பப்பட்டன. கோமாளி வேடமணிந்த ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் அப்புறப்படுத்தப்பட்டார்.

**- ரஜீவன் -**

இஸ்ரேலை உருவாக்கி பாலஸ்தீனர்களை அகதிகளாக்கியதும் இனவெறியே என ஈரானிய ஜனாதிபதி தெரிவித்தது கடும் விமர்சனத்துக்குள்ளாகி இருக்கிறது.

அஹமடி ஜாட்டை இனவெறிக்கு எதிரான மாநாட்டில் ஆரம்ப உரை ஆற்றுமாறு அழைத்தது 'தாவர உணவு குறித்த மாநாட்டுக்கு கசாப்புக் கடைக்காரனை அழைத்தது போன்றது' என்ற கடும் விமர்சனங்கள் மேற்குலகிலிருந்து எழுந்துள்ளன.

இம்முறை மாநாட்டை அமெரிக்கா பகிஷ்கரித்துக்கு பாலஸ்தீனம் குறித்த விவகாரமே காரணம் என்பது முக்கியமானது.

2001இல் டேர்பனில் நடைபெற்ற மாநாட்டு பிரகடனத்தை மீள வலியுறுத்தியுள்ளதை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை.

டேர்பன் பிரகடனத்தில் வெளிநாட்டு ஆதிக்கத்தில் உள்ள பாலஸ்தீன மக்கள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம் என்ற வாக்கியம் இடம்பெற்றிருந்தது.

அமெரிக்காவும், இஸ்ரேலும் இதனை அவ்வேளை கடுமையாக எதிர்த்திருந்தன.

1983 ஜெனீவா பிரகடனத்தில் இஸ்ரேல், பாலஸ்தீனம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

எனினும், 2001ஆம் ஆண்டு பிரகடனத்தை தற்போதைய ஜெனீவா மாநாடு மீள வலியுறுத்தியுள்ளதை ஏற்பதற்கு அமெரிக்கா தயாரில்லை.

டேர்பன் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 'வெளி ஆக்கிரமிப்பு' என்ற பதம் தற்பேது வெளி ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள அனைவரையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியமாக புதிய தீர்மானத்தில் இடம்பெற்றுள்ளதையும் அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை.

மத நிந்தனை அல்லது அவதூறு குறித்த விவகாரமும் ஜெனீவா தற்போதைய மாநாட்டை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

மாநாட்டுக்கு முன்னர் இடம்பெற்ற பேச்சுக்களின்போது இஸ்லாமிய நாடுகள் மத நிந்தனை என்ற கருத்தை புகுத்துவதற்கு தீவிர முயற்சிகளை மேற்கொண்டன.

எனினும், கருத்துச் சுதந்திரத்தை இது பாதிக்கும் என்ற கருத்து மேற்குலகால் முன்வைக்கப்பட்டது.

தற்போதைய ஜெனீவா மாநாடு பற்றி சுட்டிக்காட்டப்படும் மற்றுமொரு விடயம் அமெரிக்கா இம்மாநாட்டை புறக்கணித்தமையாகும்.

அமெரிக்காவின் வலது சாரி யூத சமூகமும் இஸ்ரேலும் கொடுத்த அழுத்தங்களே அமெரிக்கா மாநாட்டை புறக்கணித்தமைக்கு காரணம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு ஒபாமா இஸ்ரேலின் அழுத்தங்களுக்கு அடிபணிந்தமை அவர் எப்போதும் இஸ்ரேலின் பக்கமே சாயப் போகிறார் என்ற உணர்வை இஸ்ரேலிய சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தலாம்.

மேலும் எதிர்கால சமாதான முயற்சிகளில் நேர்மையான அனுசரணையாளராக ஒபாமாவால் செயற்பட முடியாது என்ற உணர்வும் உருவாகியுள்ளது.

பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தீவிர முயற்சிகள் காரணமாக மாநாட்டின் இறுதித் தீர்மானத்தின் நகலிலிருந்து மிகவும் சர்ச்சைக்குரிய வார்த்தைகள் அகற்றப்பட்டிருந்தன.

இஸ்ரேல் உட்பட எந்த நாட்டையும் தனிப்படச் சுட்டிக்காட்டுவது தவிர்க்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்ட போதும் அமெரிக்கா மாநாட்டில் கலந்துகொள்ளத் தவறியதன் மூலம் அமெரிக்காவும் ஒபாமாவும் இனவெறிக்கு எதிரான போராட்டத்துக்கு தலைமை தாங்குவதற்கான வாய்ப்பை தவற விட்டுவிட்டனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. ★

---

# இப்போது இல்லையேல், இனி எப்போதும் இருக்காது



"எனது உடலைக் கைப்பற்றி ஈழப் போராட்டத்தைக் கூர்மையாக்குங்கள்" என்று முழங்கி ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்த வீரமகன் முத்துக்குமாரின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த போது ஏற்பட்ட எழுச்சி தமிழகத்தின் தன்னெழுச்சி.

வழிநெடுகிலும் கண்ணீரும் கம்பலையுமாக மெழுகுவர்த்தியோடு அந்தத் தியாகியை வழியனுப்பிய மக்கள், இந்த எழுச்சி இத்தனை வேகத்தில் அடங்கிப்போகும் என எதிர்ப்பார்த்திருக்கமாட்டார்கள்.

போராடிய வழக்கறிஞர்கள் மீது தாக்குதல், கல்லூரிகளுக்கு விடுமுறை என காங்கிரஸ் - கருணாநிதி அரசு தொடுத்த அடக்குமுறைகளுக்கு பலியானது தமிழகம்.

ஆனால், ஈழத்தமிழர்களுக்காக போராடிய, போராடிக் கொண்டிருக்கும் நண்பர்கள் ஒன்றை கவனிக்கத் தவறுகிறார்கள்.

அதாவது, இந்தப் போராட்டங்களை இந்திய அரசியல் சட்டமோ அதனை நடைமுறைப்படுத்துகிற நீதிமன்றங்களோ தடுக்கவில்லை.

மாறாக இந்த ஈழத் தமிழர் எழுச்சிப் போராட்டங்களுக்கு ஒருவிதமான சட்ட அங்கீகாரத்தை நீதிமன்றங்கள் வழங்கியிருக்கின்றன.

இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பேரவை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்தபோது, அதனை சட்டவிரோதம் என அரசு நிர்வாகத்தைக் கொண்டுதான் தமிழக முதல்வர் கருணாநிதி தடுத்தார்.

ஆனால் உச்சநீதிமன்றமோ "மக்களின் உணர்வுகளில் தலையிட முடியாது" என்று சொல்லி பணிப்புறக்கணிப்புக்கு தடைவிதிக்க மறுத்து விட்டது. அன்றைய தமிழகம் தழுவிய பணிப்புறக்கணிப்புக்கு கிடைத்த சட்டப் பாதுகாப்பு அது.

அதுவே, இன்று பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் விடயத்திலும் இடம்பெற்றிருக்கிறது. அவர்களைக் குண்டர் சட்டத்தில் அடைத்தது செல்லாது என்று சொல்லிவிட்டது சென்னை உயர்நீதிமன்றம்.

இதோ இப்போது சீமானை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தது செல்லாது எனச் சொல்லி அதை இரத்தும் செய்து விட்டது நீதிமன்றம். சீமான் இன்னும் இரண்டொரு நாளில் விடுதலையாகிறார்.

கொளத்தூர் மணி, நாஞ்சில் சம்பத் என அனைவரினதும் விடுதலைக்கு இத்தீர்ப்பு ஆதாரமான ஒன்றாக மாறியிருக்கிறது. வழக்கறிஞர்களைத் தாக்கிய வழக்கிலும் உச்சநீதிமன்றம் மாநில அரசுக்கு சாதகமாக இல்லை.

இதெல்லாம் சட்டத்தின் நுணுக்கங்கள். ஆனாலும் ஒரு ஜனநாயக எழுச்சியை ஒடுக்க நினைக்கும் கருணாநிதி - காங்கிரஸ் கூட்டுக்கு தொடர்ந்து கிடைக்கும் சவுக்கடி.

கடந்த சில மாதங்களாக சோர்ந்து போய்க்கிடந்த தமிழகப் போராளிகளுக்கு இது தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பு.

நூறு பெண்கள் சாகும்வரை உண்ணா நிலைப் போராட்டம் இருக்கிறார்கள். மீண்டும் காங்கிரஸ் அலுவலகத்துக்கு முன் பெண்கள் மறியல் செய்கிறார்கள். சென்னைக்கு வெளியிலும் பலர் போராடுகிறார்கள்.

இதோ மீண்டும் பதின்மூன்றாவதாக ஓர் இளைஞன் தீக் குளித்திருக்கிறான். இந்த பதின்மூன்று பேரும் எதற்காகச் செத்தார்கள்? அவர்களைக்கொண்டு போய்ப் புதைக்கவா?

ஒவ்வொரு முறை எரிந்து விழும் போதும் விதையாக நினைப்பவர்களை நாம் விதைக்காமல் புதைக்க நினைத்ததன் விளைவு, போராட்டங்கள் நீர்த்துப் போயின.

பிணங்களைக் கொண்டு அரசியல் செய்து ஆட்சிக்கு வந்ததுதான் காங்கிரஸ் கட்சியின் வரலாறு. நாம் அரசியலுக்காக அல்ல ஈழ மக்களின் விடிவுக்காக, அங்கே செத்து மடிந்து கொண்டிருக்கும் எமது சொந்த மக்களுக்காக, போராடுவதற்கான ஒரு வாய்ப்பாக இந்தத் தருணங்கள் எமக்கு உருவாகி வருகின்றன.

நாம் இதில் தோற்றுப் போவோம் என்றால் அன்றைக்கு மழையில் நனைந்து, பதவி விலகல் கடிதங்களைப் பெற்று, கவிதை எழுதி, கண்ணீர் விட்டு, கடைசியில் காலை வாரியபோதும் நாம் ஏமாந்த தமிழர்கள்தான் என்பது உண்மையாகி விடும்.

முப்பதுக்கும் அதிகமான நாடுகளில் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பின் கொடியை புலம்பெயர் தமிழர்கள் சுமந்து அலைகிறார்கள். இரவு - பகலாய் அனைத்துலக சமூகத்தின் முகத்துக்கு முன்னால் ஓர் இனத்திற்கு இழைப்பட்ட அநீதியை முன்வைத்து நியாயம் கேட்கிறார்கள்.

இத்தனைக்கும் அவர்கள் எந்தக் கொடியை தங்கள் தோள்களில் சுமக்கிறார்களோ அந்த கொடி அந்த நாடுகளில் தடைசெய்யப்பட்ட கொடி என சிலர் ஈழ மக்களைப் பயமுறுத்துகிறார்கள்.

**தமிழ் நாட்டிலிருந்து**
**அ.பொன்னிலா**

மேற்குலகம் அந்தப் போராட்டங்களை முற்றுமுழுதாகத் தடை செய்யவில்லை. கரிசனையோடு பதில் சொல்கிறது. பட்டும் படாமலும் பேரினவாத அரசிடம் கெஞ்சிக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா, நோர்வே என எல்லா நாடுகளும் ஈழத் தமிழர்கள் மீது கவலை கொள்ளும் போது ஒரு சின்னஞ்சிறு தீவு ஏன் அந்த மேற்குலகின் குரலை உதாசீனப்படுத்துகிறது என்று தமிழக மக்களாகிய நாம் நினைக்கப் பார்த்ததுண்டா?.

ஆமாம் தென்கிழக்கில் எமது நாடான இந்தியாதான் இப்போதைய சண்டியர். அதுதான் இலங்கைப் போரை முட்டுக்கொடுத்து நடத்துகிறது. இதை நான் சொல்லவில்லை. இலங்கையின் சுகாதாரத்துறை அமைச்சர் சிறிபால டி சில்வாவே வெளிப்படையாகப் பல தடவைகள் கூறியிருக்கிறார்.

இதை இந்தியாவும் மறுக்கவில்லை.

ஆமாம், தென்னாசியாவில் இந்தியாவை மீறிப் தற்கால உலகச் சூழலில் மேற்குலகம் ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போட முடியாது நண்பர்களே! அதனால்தான் அது எல்லாவற்றையும் வேகமாக முடிக்க நினைக்கிறது.

பெரும் தொகையான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட பின்பும் போர் நிறுத்தம் பற்றி இலங்கையிடம் இந்தியா வாய் திறக்கவே இல்லை!

சோனியாவை கருணாநிதி வற்புறுத்துவாராம்; கடிதம் எழுதுவாராம்; சோனியா போரை நிறுத்த வேண்டும் என கருணாநிதிக்கு கடிதம் எழுதுவாராம்; அறிக்கைகள் கொடுப்பார்களாம்.

ஆக, இந்த நாடகங்கள் பலவீனமான தமிழகத் தலைமையை கேலிக்குள்ளாக்கியிருப்பதோடு, ஈழத் தமிழர் கொலையில் இந்த மௌனமும் ஒரு பிரதான காரணமாக இருப்பதை நாம் இன்னும் உணரவில்லையா?

தேர்தல் முடிந்து யாருக்கு எத்தனை மந்திரிப் பதவி என்றெல்லாம் பங்கு போட்டு பின்னர் கடைசியில் ஈழத் தமிழர்களுக்காக நாங்கள் குரல் கொடுப்போம் என்றால் அப்போது ஒப்பாரி வைக்க ஈழம் ஒரு இடுகாடாக மட்டுமே இருக்கும்.

போராடுவதற்கான வாய்ப்புக்கள் எப்போதும் வராது. எப்போதாவதுதான் வரும், கிட்டத்தட்ட 13 பேர் தீக்குளித்து மாண்டது நாம் போராட வேண்டும் என்றுதான்.

இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் குண்டர்களால் கொல்லப்பட்ட அப்பாவிப் சீக்கிய மக்களுக்காக எரிந்த நெருப்பு இன்றும் எரிகிறது பஞ்சாப்பில்.

அந்த நெருப்பின் வெளிப்பாடே ப.சிதம்பரம் மீது வீசப்பட்ட செருப்பு.

மன்மோகன் பதறுகிறார்; சோனியா பம்முகிறார்; ஆனால், தமிழன் என்றால் இவனை எப்படியாகிலும் ஏமாற்றலாம் என்கிற எண்ணமும் துணிச்சலும் இருப்பதால்தான் ஈழத்துக்கான எழுச்சிகளை அடக்கி ஒடுக்கிறார்கள்.

போராடுவதற்கான, வீதிக்கு வருவதற்கான வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் தவறவிட்டால் இனி எப்போதும் நம்மால் போராட முடியாது.

மாணவர்களே! வழக்கறிஞர்களே! பெண்களே! அக்கறையுள்ள அரசியல் தலைவர்களே! இப்போதும் நீங்கள் போராடத் தவறினீர்கள் என்றால் இனி எப்போதும் உங்களால் போராட முடியாமல் போகலாம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து போராட்டங்கள் நடத்துவதால் மட்டும் ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது

## ஸ்ரீரவிசங்கர் கூறுகிறார்



சென்னை, ஏப்.26

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக இங்கு முழு அடைப்பு அல்லது உண்ணாவிரதம்' போன்றவற்றை மேற்கொள்வதால் அங்கு பிரச்சினை சரியாகிவிடும் என்று சொல்ல முடியாது. பிச்சைக் காரர்களையே காணாத மக்கள் மற்றவர்களிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் மனநிலை பாதிக்கப்படும் நிலைக்குத்தள்ளப்படுவார்கள்என்பதைக்காணமுடிந்தது.

- இவ்வாறு வவுனியாவில் தங்க வைத்துள்ள இடம்பெயர் தமிழ் மக்களைப் பார்வையிட்ட வாழும் கலை அமைப்பின் தலைவர் ஸ்ரீரவிசங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முல்லைத்தீவு, வவுனியாப் பகுதிகளில் தமிழர்கள் தங்கவைக்கப் பட்டுள்ள முகாம்களைப் பார்வையிட்டு விட்டு நேற்றுமுன்தினம் சென்னை திரும்பிய வாழும் கலை அமைப்பின் நிறுவுநரும், ஆன்மீகத் தலைவருமான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அங்கு செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாகி, வீடு வாசல்களை இழந்து ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஏறக்குறைய 8 லட்சம் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

நான் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் செட்டிக்குளம், அருணாசலா உட்பட 8 முகாம்களைச் சென்று பார்வையிட்டேன்.

மனதைக் கல்லாக்கிக்கொண்டுதான் அங்கு செல்லமுடியும். மனிதனாகப் போக முடியாது என்றுதான் சொல்லவேண்டும். இந்த முகாம்களில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். என்ஜினியர்கள், டாக்டர்கள், வர்த்தகர்கள் எனப் பல்வேறு தரப்பினர் அங்கு தங்கியுள்ளனர்.

பிச்சைக்காரர்களையே காணாத மக்கள் மற்வர்களிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுடன் பேசிய போது, தற்போதுள்ள நிலையில் அவர்களை இப்படியே விட்டுவிட்டால் அவர்களில் பெரும்பாலானோர் மனநிலை பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பதைக் காணமுடிந்தது. அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த தமிழர்களுக்கு வேட்டி, சேலை போன்றவற்றை வழங்கினோம்.

முகாம்களில் தங்கியுள்ளவர்கள் இலங்கை இராணுவத்தினரின் பாதுகாப்பில் இருக்கிறார்கள். இராணுவத்தால் எந்தத் தொல்லையும் இல்லை என்று சொல்கிறார்கள். 'இந்திய அரசு எங்களுக்கு உதவும் என்று நாம் நம்பினோம். கைவிட்டு விட்டார்களே' என்று வேதனையுடன் தெரிவித்தார்கள். இந்த விடயத்தில் இந்திய அரசு மிகப் பெரிய தவறை இழைத்துவிட்டது எனக் கருதுகிறோம்.

தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் அளவுக்குத் தமிழ் தெரிந்த ஒருவரைத் தூதராக நியமிக்காததாலேயே இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணமுடியவில்லை என்று கருதுகிறேன். அத்துடன், இலங்கைப் பிரச்சினை தீராததற்கு இங்கும் சரி, அங்கும் சரி தமிழர்களுக்கிடையே ஒற்றுமை இல்லாததும் ஒரு காரணமாகும். 'பந்த்', நடத்தினோம், 'உண்ணாவிரதம்' இருந்தோம் என்று திருப்தி அடையலாமே தவிர அங்கு பிரச்சினை தீர்ந்துவிடாது. உணவு, உடை என்று நிவாரண உதவிகளைப் பெறும் நிலையில் முகாம்களில் தங்கி இருந்தாலும் தங்கள் சொந்த வீடுகளுக்குச் செல்லவேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

இதுகுறித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கடந்த வியாழனன்று நான் பேசினேன். முகாம்களில் தங்கியிருப்பவர்கள் சொந்த வீடுகளுக்கு உடனடியாகச் செல்லமுடியாத அளவுக்கு வீடு, வாசல்கள் தரைமட்டமாகியுள்ளன. அவற்றை உடனடியாக சீரமைக்க முடியாது என்று ராஜபக்ஷ தெரிவித்தார். தீவிரவாதத்தை வேரோடு அழித்த பின்னே அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ளமுடியும் என்று ராஜபக்ஷ தெரிவித்தார். இருதரப்பினரும் பேச்சு மூலம் பேசித் தீர்த்திருக்கலாம். நானே பிரபாகரனிடம் பேச்சு நடத்துவதற்குப் பலமுறை முயன்றேன். அதற்குப் பலன் கிடைக்கவில்லை - என்றார்.(சி)

# வவுனியா, மன்னாரில் முகாம்கள் அமைத்து 30 ஆயிரம் பேரைத் தங்க வைக்க ஏற்பாடு

கொழும்பு,ஏப்.24

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ள மக்களை சிவில் மற்றும் இராணுவ அதிகாரிகள் படிப்படியாக வவுனியா நகரப் பகுதிக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு அழைத்து வரப்படுபவர்களைத் தெரிவு செய்யப்பட்டுள்ள 5 பாடசாலைகளிலும், மனிக் பாம் பிரிவு 1, பிரிவு 2 ஆகிய இடங்களிலும் தங்கவைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதன்படி 30 ஆயிரம் பேர் வவுனியாவில் தங்க வைக்கப்படுவர் எனவும், அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் 30 ஆயிரம் பேரை மன்னார் மாவட்டத்தில் உள்ள 26 பாடசாலைகளில் தங்க வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை வவுனியாவுக்கு வந்திருந்த அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அமீர் அலி தலைமையிலான உயர் மட்டக் கூட்டத்தில் இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா இலங்கைத் திருச்சபைத் தமிழ்க் கலவன் பாடசாலை, வவுனியா காமினி மகாவித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளையும், வசதிகளுடன் கூடிய வைத்தியசாலைகளாக மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்களையடுத்து, வவுனியா இலங்கைத் திருச்சபைத் தமிழ்க் கலவன் பாடசாலை உடனடியாக அதிகாரிகளினால் கடந்த வியாழக்கிழமை பொறுப்பேற்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களை ஓமந்தை போன்ற இடைத்தங்கல் நிலையங்களில் உடனடியாகத் தங்க வைப்பதற்குப் போதிய இடவசதியில்லாததால் அதிகாரிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும் எண்ணிக்கையில் வந்துள்ளவர்கள் தமது இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கு உரிய வசதிகளின்றி திறந்த வெளியில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# காயமடையும் மக்களின் எண்ணிக்கை குறித்து எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு கவலை

இலங்கையின் போர் நடைபெறும் பகுதிகளில் காயமடையும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

சுருங்கியுள்ள போர் நிலப்பரப்பில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சிக்கியிருக்கின்றனர் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் ஆயிரம் பொதுமக்கள் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், அவர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலைமை காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் சரசி விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த மூன்று மாதங்கள் அல்லது மூன்று நாள்களில் மோதல் பகுதியில் காயமடையும் மக்களின் எண் ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது என எல்லைகள் அற்ற மருத் துவர்கள் அமைப்பைச் சேர்ந்த மருத்துவர் போல் மெக் மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளிடம் இருந்த நிலங்களை கைப்பற்றிய அரச படையினர் பொதுமக்களுக் கான பாதுகாப்பு வலயம் ஒன்றை அறிவித்திருந்தனர். இந்த வாரத்தில் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் பிரவேசித்துள்ள படையினர் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை தொடர்ந்தும் நடத்திவருகின்றனர் எனவும் எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (சி)

## கேக் கண்காட்சி இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தில் 'பிரின்ஸ்' நிறுவனத்தின் கேக் கண்காட்சி நேற்று ஆரம்பமாகியது.

இந்தக் கண்காட்சி இன்று வரை இடம் பெறும் என அந்த நிறுவன நிர்வாகிகள் தெரிவித்தனர். (1)


## தேவை

ரவுண் ஏசி வான் or ஹயஸ் (Town Ace vaan) இனுடைய Front A.C. செற் உடன் தேவை. நல்ல நிலையில் வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 0776105755

## மோட்டார் சைக்கிள் தேவை

தனிப் பாவனையில் நல்ல நிலையிலுள்ள Bajaj, Hero Honda மோட்டார் சைக்கிள் தேவை.

தொடர்புகளுக்கு:- T.P.No 021 222 4257

## தவறிவிட்டது

கோண்டாவில் மேற்கு, காளி கோயிலடியைச் சேர்ந்த சாந்தகுமாரன் இராகுலன் என்பவரது தே.அ.அட்டை இல (841893085V)யும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் A 012465271 என்பன கோண்டாவில் மேற்கு காளி கோயிலடிக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையே தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P.No 0776655649

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி: 2360488, 2360694, 4873929.

## "ஐங்கரன் திருமண சேவை"

யாழ் இந்து கௌரவகுடும்பம், Uk citizen 27, 32, 39வயது, கனடா Citizen 31, 35 வயது, சுவிஸ் Citizen 38, 42 வயது, கொலண்ட் Citizen 30,36 வயது, பிரான்ஸ் Citizen 28 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். இவர்கள் விரைவில் கொழும்பு வரவுள்ளனர். 24 மணி நேர தொலை பேசி வசதி உண்டு.

லண்டன் தொடர்பு: 00447535384166, 0044 7508295863

Fax No:00442086810701, 00442086720673

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் 27.04.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ றாஜீவ் -

[illegible]


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுந்தரம்

கெற்பேலி, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் மிருசுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரம் நேற்று (25.04.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் கலஞ்சென்ற கார்த்திகேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் கனகமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகரத்தினம், பாக்கியம், அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் நாகபூரணமலர் (மலர் - கனடா), சிவ சுப்பிரமணியம், துளசிராணி, பிறேமமல்லிகா சிவநேசன், சிவபாலன் (ஆசிரியர், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), சிவறூபன் ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக பெரியானோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிருசுவில் வடக்கு,*
*மிருசுவில்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா சண்முகராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)



இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கில் வசித்தவருமான சுப்பையா சண்முகராசா 21.04.2009 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - ஞானம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பையா - நல்லையா (இணுவில்) மற்றும் குமாரலிங்கம் - செல்லம்மா (இணுவில்), காலஞ்சென்ற இராசதுரை - சிவயோகம் (இணுவில்) மற்றும் சண்முகநாதன் கணேஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரன் - ஞானேஸ்வரி (லண்டன்), செல்வராசா இரத்தினேஸ்வரி (இணுவில்), சுப்பையா தம்பிநாயகம் (கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வக்குமரன் (லண்டன்), செந்தில்குமரன் (நோர்வே), திருக்குமரன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் மீனா (லண்டன்), கலையரசி (நோர்வே), வாசுகி (லண்டன்), அமரர் இரகுநாதன் (உரும்பிராய்), சோதிநாதன் (லண்டன்), அமரர் சிவயோகநாதன் (சுதுமலை), சபேசன் (லண்டன்), சதீசன் (லண்டன்), சிவசௌந்தரி (லண்டன்), ஜெயபாதுரி (லண்டன்), பிஞ்ஞகன் (இணுவில்), மயூரன் (கனடா), ஜெயந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் சத்தியவதி (ஆசிரியை, மஸ்கெலியா), விஜயதர்சினி (லண்டன்), ஜனனி (உள்ளூராட்சி உதவியாளர், வலி. தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்), திருமுருகன் (லண்டன்), தெய்வீகன் (லண்டன்), குணாழினி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டி வளவு லேன்,*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

தகவல்:
சுப்பையா
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோர் மன நெருக்கீடு நீக்கப்படுவது எப்போது?

வன்னியில் போர்ப் பகுதிக்குள் சிக்குண்டிருந்து தமது உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரேயொரு நோக்கத்துடன் அங்கிருந்து வெளியேறிய- இடம்பெயர்ந்த - ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களில் கடந்த 20 ஆம் திகதிக்குப் பின்னர் சுமார் 12,000 பேர்வரையில் குடாநாட்டுக்கு வந்துள்ளனர்.

எங்கே போகலாம் என்ற ஒரு நிலையில், தங்களைச் சொந்த இடமான குடநாட்டுக்குக் கூட்டிச் செல்லுமாறு அவர்கள் படையினரிடம் கேட்டதாகவும், அதனை ஏற்று மனிதாபிமான முறையில் அணுகி தமது வாகனங்களிலும் கப்பலிலும் ஏற்றிவந்து இங்கு சேர்த்துள்ளனர். படையினரின் இந்த உதவியை வன்னியிலிருந்து வந்த மக்கள் வாழ்க்கையில் என்றும் மறக்கமாட்டார்கள். அவர்களின் குடாநாட்டு உறவுகளும் படையினரின் செயலுக்குத் தமக்குள்ளே நன்றி பாராட்டுவார்கள்.

ஆனால், ஆகப்பிந்தி வந்த பெரும் எண்ணிக்கையினர் எங்கே இருக்கிறார்கள் என்பது தெரியாமல் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தவியாய்த் தவிக்கின்றனர். தம்மால் இயன்றவரை தமது வலுவுக்கு ஏற்ற மாதிரி தென்மராட்சி என்றும், வடமராட்சி என்றும் அலைகிறார்கள். அவ்வாறு அலைந்து திரிந்தாவது தமது குடும்ப உறவுகள் எவராவது குடாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களுக்கு வந்திருப்பார்களா என்பதனை எப்பாடுபட்டும் அறிந்து விடவேண்டும் என்ற அங்கலாய்ப்புடன், உடற்களைப்பும் அலுப்பும் பார்க்காமல் சென்று வருகின்றனர். இது மனித உணர்வின் அதுவும் நெருங்கிய குடும்ப உறவின் மீதான அல்லது உற்றார் மீதான அன்பினால், பாசத்தினால் இயற்கையாக உண்டாகும் மன ஆவல். மனிதநேயம், அன்பு, பாசம், பந்தம் என்பன மனிதனோடு ஒன்றித்தவை. அவை எல்லோருக்கும் பொதுவானவை. ஆகையால் ஆவல் மிகுதியாலும் அன்பின் நீட்டத்தினாலும், குடாநாட்டில் உள்ள நலன்புரி நிலையங்களில் ஏதாவது ஒன்றி தங்கள் உறவுகள் தங்கவைக்கப் பட்டிருப்பார்களோ என்ற மன ஏக்கத்துடன் அலைவதனைப் பொருட்படுத்தத் தேவையற்ற வீண் முயற்சி - வீண் வேலை - என்று எவரும் தட்டிக்கழித்து விடக்கூடாது.

இங்கே இரண்டு தரப்புகளும் - வன்னியிலிருந்து வந்தவர்களும், இங்கே வாழும் அவர்களின் உறவுகளும் - மனத்தாக்கத்துக்கு - உள நெருக்கீட்டுக்கு - ஆளாகிறார்கள் என்பதனை எவரும் கவனத்தில் கொள்வதாக இல்லை.

தங்கள் உறவுகளைப் பார்த்து இரண்டு நிமிடநேரமேனும் தமது நிலையைக் கூறி ஆறுதல் அடைய முடியவில்லையே என்று அங்கிருந்து வந்தவர்களும் -

எத்துணை அவலங்களைச் சந்தித்துத் துன்பத்தின் வடிவங்களாக வந்திருக்கும் இரத்தத்தின் இரத்தங்களை ஒரு நிமிட நேரமேனும் கண்டு ஆறுதல் கூறக் கொடுத்து வைக்கவில்லையே -

பல மைல் தொலைவில் இருந்த வேளைதான், அவர்களின் நிலைமைகளை அறிய முடியவில்லை, சேமம் தெரிய வாய்ப்பில்லை. அவர்கள் எமது பிரதேசத் துக்கு வந்த பின்னரும் அந்த நிலையா - என்று இங்குள்ளோரும் விநாடிக்கு விநாடி தமது மனதை உருக்கி, நெஞ்சம் கனல்வீசி ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள்.

இப்போது குடாநாட்டுக்கு வந்துள்ள தமது இரத்தத்தின் இரத்தங்களை ஒரு நிமிடமேனும் பார்க்க முடியாமல், பேசமுடியாமல் மனம் நொடிபவர்கள், அவர்கள் போர்ப் பிரதேசத்தில் சிக்குண்டிருந்த வேளையில் அவர்களின் சேமநலன்களை இங்கிருந்தவாறே வாரத்தில் ஒருதடவையாவது அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

போர்ப் பிரதேசத்துக்குள் வசித்தவர்களின் புலம்பெயர் உறவுகள், அங்கிருந்து தகவல் அறிந்து இங்குள்ளவர்களுக்குத் தகவல் தெரிவித்தனர். இப்போது அந்த தூரவழித் தகவல் அறியும் வாய்ப்பும் அற்றுப் போய்விட்டது.

அவர்களின் உளநெருக்கீட்டையும் அதனால் உண்டாகப் போகும் உளவியல் தாக்கங்களையும் புரிந்து கொள்ளக்கூடியவர் எவரும் இல்லையா என்ற கேள்வி எல்லோர் மனங்களிலும் எழுவது இயல்பே. மனிதநேயமும் மனிதத்துவமும், உலகில் மனிதனாகப் பிறந்த எல்லோருக்கும் இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகள். அவற்றைத் தேடி யாரிடம் போவோம் என்ற ஆதங்கத்தில் முன்னர் குறிப்பிட்ட இரண்டு தரப்புகளும் இப்போது......! அவர்களின் மனநோவை நீக்க வேண்டும் என்ற மன விருப்பம் அதிகாரிகளுக்கு இயல்பாகவே பிறந்திருக்க வேண்டும். ஆனால் அதனை இன்னும் செயலில் காண முடியவில்லை.

மனிதாபிமானம் பேணப்பட்டு, இடம்பெயர்ந்த மக்களின் நலன்கள் உரியவாறு கவனிக்கப்படுவதாக அடிக்கடி கூறிக்கொள்ளும் அமைச்சர்கள் மகிந்த சமரசிங்காவும், றிஷாத் பதியுதீனும் குடாநாட்டில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கி இருக்கும் மக்களினதும், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நலன்புரி நிலையங்களில் தங்கிஉள்ள மக்களினதும் மனவருத்தத்தைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான சேவையின் ஓர் அங்கமாக உறவுகள் அவர்களைச் சந்தித்துப்பேச ஏற்பாடு செய்வது எப்போது?

# வன்னியில் அவலப்படும் மக்களுக்கு ஐ.நா. மூலம் சர்வதேசம் உதவ வேண்டும்

## கூட்டமைப்பின் சிறிகாந்தா கோருகிறார்.



கொழும்பு, ஏப்.26

வன்னியில் அவலப்படும் மக்களுக்குத் தேவையான உதவிகளை ஐ.நா. மூலம் சர்வதேச சமூகம் வழங்க வேண்டும், அதன் மூலமே அந்த மக்களைப் பாதுகாக்க முடியும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிறிகாந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உடனடிப் போர் நிறுத்தத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து தீவிரமாக வலியுறுத்தி நிற்கின்றது.

போர் தொடர்ந்து கொண்டிருக்கும் மிகச் சிறிய நிலப்பரப்பில் எஞ்சியுள்ள பல்லாயிரம் மக்களின் உயிர்களின் பாதுகாப்புக்கு முன் எப்பொழும் இல்லாத அளவுக்கு போர் நிறுத்தம் இப்பொழுது மிகவும் அவசரமானதாக உள்ளது.

அதே நேரத்தில் அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருக்கும் 2 லட்சம் மக்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவதில் அரசாங்க நிர்வாக இயந்திரம் திணறிக் கொண்டிருக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் நேரடியான பங்களிப்பு இல்லாமல், இந்த இரண்டு லட்சம் மக்களின் அவசியத் தேவைகளை நிறைவேற்றுவது சாத்தியமானதல்ல.

குடிதண்ணீர் முதல் இயற்கைக் கடன்களை கழிப்பது வரையில் ஏராளமான கஷ்டங்கள நிலவுகின்றன. மருத்துவ உதவி பாரிய அளவில் தேவைப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை ஊடாக சர்வதேச சமூகத்தின் நேரடியான உதவி இந்த மக்களுக்கு அளிக்கப்பட்டால் மாத்திரமே அவர்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்ற முடியும் - என்றுள்ளது. (1)

## யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் நாளை கல்விச் செயற்பாடுகள் ஆரம்பம்

அச்சுவேலி, ஏப்.26

யாழ். மாவட்ட பாடசாலைகளின் இரண்டாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் நாளை திங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மாணவர்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் பொருத்தமான மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21ஆம் திகதி ஆரம்பமாக வேண்டிய பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் வடக்குமாகாண பிரதம செயலாளரின் வழிப்படுத்தலின் பிரகாரம் 27ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருந்தது.

நாளை திங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பமாவதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை எனவும் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை கள நிலைக்கு ஏற்ப ..த்தில் தொடரவேண்டும் என வடக்குமாகாண கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (1-11)

## சுப்பிரமணியம் பூங்காவில் நேற்று சிறுவர் மகிழ்வகம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ். சுப்பிரமணியம் பூங்காவில் சிறுவர் மகிழ்வகம் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது.

அமெரிக்க யூத ஒருங்கிணைப்புக் குழு நிறைவேற்றுப் பணிப்பாளர் எமோஸ் சிறுவர் மகிழ்வகத் தைத் திறந்து வைத்தார். புஷ் கிளின்ரன் நிறுவனம் இதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், யாழ். மாநகர ஆணையாளர் செ.சரவணபவ, முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம், சர்வோதய யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.சிவசுப்பிரமணியம் , பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பிரதமவிருந்தினர் தனதுரையில், இச் சிறுவர் மகிழ்வகம் யாழ்ப்பாணச் சிறுவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். யுத்தம் ஓய்ந்து யாழ்ப்பாணச் சிறார்கள் மகிழ்ச்சியாக இந்த இடத்தில் பொழுதைக்கழிக்க வேண்டும்-என்றார்.

யாழ். மாநகர முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் சுப்பிரமணியம் பூங்கா சுற்றாடலின் சிறப்பை நினைவு கூர்ந்தார். யு.எஸ். எயிட் நிறுவனத்தைச் சேர்ந்த சொய்ஸா, சிறுவர் மகிழ்வகத்திற்குரிய உபகரணங்களை தமது மாவட்டங்களுக்குத் தருமாறு வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை விடுத்த போதும் தான் இந்த உபகரணங்களை யாழ்ப் பாணத்திற்குத் அனுப்ப வேண்டும் என்பதில் தான் சிரத்தை எடுத்து அனுப்பியதாகக் கூறினார். (1-120)

## உசன் வித்தியாலய மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.26

உசன் இராமநாதன் மகாவித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை நாளை திங்கட்கிழமை பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் சி.மனோகரன் கேட்டுள்ளார். (1)

# பாதுகாப்புக் காரணங்களால் இம்முறை மேதினக் கூட்டங்கள், பேரணிகள் இடம்பெறா

## பிரதான கட்சிகள் முடிவு

கொழும்பு, ஏப்.26

மே தினத்தை ஒட்டி கூட்டங்களையோ பேரணிகளையோ நடத்துவதில்லை என்று பிரதான கட்சிகள் முடிவு செய்துள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காக இம்முடிவு எடுக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் அறிவித்துள்ளன.

மே தினத்தன்று அலரி மாளிகையில் சகல தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் கொண்ட கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.அமைதியான முறையில் மே தினத்தை கொண்டாட ஆளும் தரப்பு முடிவு செய்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சமய வழிபாடுகளுடன் மே தினத்தைக்கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது.

பிற்றக்கோட்டையில் உள்ள வஜிரா சிறுவர் இல்லத்தில் சமய வழிபாடுகளை நடத்தி மே தினத்தைக் கொண்டாட கட்சி ஏற்பாடு செய்துள்ளதாக கட்சிப் பிரமுகர் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் மேதினக் கூட்டம் கம்பல் பார்க்கில் இடம்பெறவுள்ளது. அக் கட்சியும் பேரணிகளை தவிர்த்துள்ளது. (1)




இலங்கையில் போரை நிறுத்துமாறு கோரி ஈழத்தமிழர்கள் சுமார் 40 ஆயிரம் பேர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த சனியன்று ஒன்றுதிரண்டு நடத்திய பேரணி யில் எடுக்கப்பட்ட படம் இது

பாரிஸ் நகரில் உல்லாசப் பயணிகள் தினமும் குவியும் ஈபிள் கோபுரம் அருகே உள்ள மனித உரிமைகள் சதுக்கத்தில் பேரணி நடந்தது. அங்கு கடந்த இரு வார காலத்திற்கும் அதிகமாக உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் இளைஞர்கள் நால்வர்கள் கோரிக்கைக்கு வலுச்சேர்ப்பதற்காக இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

பிரான்ஸில் பல பகுதிகளில் இருந்து வந்து திரண்ட தமிழ் மக்கள் போரை நிறுத்தக் கோரும் வாசகங்கள் குறித்த ரீ - சேட்டுகளை அணிந்து கொண்டு கோஷங்களை எழுப்பினர். பிரான்ஸின் சோசலிச கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் இந்தப் பேரணியில் உரையாற்றினர். (படம்: பாரிஸில் இருந்து தாஸ்.)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை 14 | 27.04.2009 திங்கட்கிழமை |
| திதி: | துதியை, காலை 06.16 வரை திருதியை பி.இ.04.10 |
| நட்சத்திரம்: | கார்த்திகை மு.ப. 11.26 வரை |
| சுபநேரம்: | 11.59 - 01.29 |
| ராகுகாலம்: | 07.29 - 08.59 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# மட்டக்களப்பில் வவுணதீவுப் பகுதியில் பால் வியாபாரி சுட்டுக்கொலை; மூவரைக் காணவில்லை

மட்டக்களப்பு, ஏப்.25

வவுணதீவு பிரதேசத்தில் நேற்றுக் காலை பால் வியாபாரி ஒருவர் இனந் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

முல்லாமுனையைச் சேர்ந்த வைரமுத்து ராமச்சந்திரன் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ள இந் நபர் நேற்றுக் காலை தனது சைக்கிளில் வீட்டிலிருந்து பால் கொள்வனவுக்காக சென்று கொண்டிருந்த போது வீதியில் வைத்துச் சுடப்பட்டதாகச் சம்பவம் தொடர்பாகக் கூறப்படுகின்றது.

அதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மூவர் காணாமல் போனமை தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் பொலிஸிலும் புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 16ஆம் திகதி செங்கலடி கணபதி நகரைச் சேர்ந்த சண்முகராசா கமலானந்தராஜா (வயது 25) தனது வீட்டிலிருந்து சகோதரியின் வீட்டுக்குச் சென்றதாகவும் அதன் பின்னர் இதுவரை அவர் வீடு திரும்ப வில்லை என்றும் உறவினர்கள் தமது புகாரில் குறிப்பிட்டுள்ளனர் என்றும் கூறப் படுகின்றது.

அக்கரைப்பற்று கோளாவில் பிரதேசத்தில் சமுர்த்தி அதிகாரியாகச் சேவையாற்றிய பொ.ரவீந்திரன் (வயது 35) என்பவர் மகிழூரிலுள்ள அவரது வீட்டுக்கு வாகனத்தில் வந்த சிலரால் விசார ணைக்கு என அழைத்துச் செல்லப்பட்ட தாக தெரிவிக்கப்பட்டது.

## மேல் மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று மாலை வாக்களிப்பு முடிந்தகையோடு, கல்கிசையில் ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் இருகுழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல்களில் 18 வயது இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டார். துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி அவர் மரணமானார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் முடிவு இன்று காலை வெளியாகும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்தது.

தேர்தல் வாக்களிப்பின் போது 51 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அனைத்துக் கட்சிகளின் நடவடிக்கைக் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது. அந்த வகையில் கொழும்பில் -32, கம்பஹாவில் -15, களுத்துறையில் - 9 என்ற வகையில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-7)

## தேசியக் கொடியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டது.

சாஸ்திரிபவனுக்கு முன்பாக இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(அ-1)

## தமிழர் பிரதிநிதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று விடுத்த அறிக்கையில் இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இனப்பிரச்சினை தொடர்பாக தமிழ் பிரதிநிதிகளுடன் இலங்கை அரசு பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும். ஆகக் கூடுதலான அதிகாரப் பரவலாக்கலை வழங்க வேண்டும்.

அதற்கு முன்னதாக உடனடி போர் நிறுத்தத்தை நடைமுறைப் படுத்தி, பொதுமக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டும்.

பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல உதவுவதுடன் அவர்களுக்கு மருத்து மற்றும் உணவு வசதிகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். விடுதலைப் புலிகள் பொதுமக் களை மனித கேடயங்களாக பயன்படுத்துவதை தவிர்த்து போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்- என்றுள்ளது. (அ-1)

## இலங்கையில் போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனும் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர். மக்கள் பாதுகாப்பு வலயத்தில் பொதுமக்கள் கொல்லப்படுவதையிட்டு இந்தியாவின் கவலையை அவரிடம் தெரிவித்தனர்.

அங்குள்ள நிலைமையை சீராக்க இந்தியா தன்னாலான முழு நடவடிக் கைகளையும் எடுத்துள்ளது - என்றார் அமைச்சர் சிதம்பரம். (அ-1)

## புலிகள் வேறொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறு எந்த வெளிநாடும் எந்த வகையிலும் - எந்தத் தோற்றத்திலும் - தலையிட நாம் அனுமதிக்க மாட்டோம்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் றொபேர்ட்வூட் வெள்ளிக் கிழமை அன்று நியூயோர்க்கில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கு பதிலடியாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கும் இந்தியாவின் 'என்.டீ ரீவி'க்கும் வழங்கிய பேட்டிகளில் மேற்கண்ட கருத்துக்களை ஆணித்தரமாக தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச்செயலாளர்மேலும்கூறியதாவது:

விடுதலைப்புலிகளின் பயங்கரவாதத்தினால் கொல்லப்பட்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களும் இலங்கை மக்களே. ஆகையால் வெளிநாடொன்றிடம் விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கையளித்து விட்டு சரணடையுமாறு கேட்பது எந்த விதத்திலும் நியாயமானதல்ல.

விடுதலைப்புலிகள் இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகளுடனேயே போர் நடத்துகிறார்கள். கடந்த 30 வருடங்களாக எமது மக்களே கொல்லப்பட்டுள்ளனர்.

அதன் விளைவுகளையும் தாக்கங்களையும் வேறு எவரையும் விட நாங்களே அதிகம் உணர்வோம் என அமெரிக்காவுக்குக் கூற விரும்புகிறேன்.

முல்லைத்தீவில் பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள ஒவ்வொரு பொதுமகனையும் பாதுகாப்பாக நாம் வெளியேற்றுவோம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை பிடிக்கும் வரை எங்களுடைய இராணுவ நடவடிக்கை தொடரும். இப்பொழுது அவர்கள் வசம் உள்ள முழுப் பகுதியையும் கைப்பற்றும் வரை எங்கள் இராணுவ நடவடிக்கை தொடரும்.

பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள ,98 சத வீதமான பொதுமக்களும் விடுவிக்கப்பட்ட பகுதிகளை வந்தடைந்து விட்டனர். அந்த மக்களின் சுதந்திர வாழ்வுக்காக மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதே இராணுவத்தின் இப்போது முதற்பணியாக அமையும் - என்றார் பாதுகாப்புச் செயலாளர். (அ-6)

## தென்னாசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்றி வரும் றொபேட் ஓ பிளேக்கின் புதிய நியமனத்துக்கு மூதவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது இந்தப் பதவியை வகித்து வரும் ரிச்சர்ட் பௌச்சரின் இடத்துக்கே பிளேக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை, பாகிஸ்தான், நேபாளம், மாலைதீவு, பூட்டான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் விவகாரங்களை இவர் கையாளவிருக்கிறார். (அ-1)

## மூன்றாம் தரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் றொபேட் வூட் வழமையான தமது பத்திரிகையாளர் மாநாட்டை வெள்ளிக் கிழமை நடத்தினார். அப்போது இலங்கை விவகாரம் குறித்துக் கூறியதாவது:

விடுதலைப்புலிகளை ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு மூன்றாவது தரப்பு ஒன்றிடம் சரணடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அதேவேளை ராஜபக்ஷ அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் மோதல்களை நிறுத்துமாறு வேண்டுகின்றோம்.

இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்களுக்கு சர்வதேச நாடுகளே உதவி செய்யப் போகின்றன - செய்யவேண்டியுள்ளது. ஆகையால் அங்கு நடைபெறும் போரை நிறுத்துவதற்கு பங்களிப்புச் செய்ய அனைவரும் தயாராக வேண்டும்.

இலங்கையில் நடைபெறும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழி வகைகள் குறித்து இணைத்தலைமை நாடுகளும் ஜி-8 நாடுகளும் கூட்டாக - மிக நெருக்கமாக ஆராய்ந்து வருகின்றன.

முல்லைத்தீவில் பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள மிகுதிமக்களின் பாதுகாப்புக் குறித்து அமெரிக்கா மிகவும் கரிசனையாக உள்ளது. அந்தப் பிரதேசத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேறி விட்ட போதிலும் ஆயிரக்கணக்கான மக்கள் இன்னமும் அங்கேயே தங்கியுள்ளனர்.

அங்கிருந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கொல்லப்பட்டுவிட்டனர்.

இன்று (வெள்ளிக்கிழமை) இந்தியாவின் விசேட தூதுவர்கள் இருவர் இலங்கையில் நடைபெறும் போர் குறித்து இந்திய அரசின் கவலையையும் கரிசனையையும் கொழும்பு அரசிடம் தெரிவிப்பதற்காக அங்கு சென்றுள்ளதாக எமக்கு அறிய வந்துள்ளது - என்றார் றொபேட் வூட். (அ)


O/L DAY CLASS (8.30-2.00)
பிரிவு I ஒரு சில அனுமதிகள் மட்டும் APR 30 மட்டும்
பிரிவு II 01.05.2009 8.30மணி
★ இவ்வருடம் பிரிவு 06 மட்டும்
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
★ 33 வருடமாக O/L DAY CLASS கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கமாகவும் நடைபெறும் ஒரே இடம்.
விக்னா கல்வி நிலையம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!
உலகநாடு → கொழும்பு → யாழ்ப்பாணத்திற்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
உள்நாடு,வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CDக்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
வாடிக்கையாளரின் நலன்கருதி லண்டன்,சுவிஸ்,பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும் கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
WESTERN UNION ®
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப்பெற்றுக்கொள்ளலாம்
MMBL Money Master
New Branch
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06 - T.P: 0112364525
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

விற்பனைக்கு
பாவித்த நல்ல நிலையில் உள்ள PIV Computerகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
0779184529

பொருளியல் A/L மாணவர்களே
பொருளியல் முறைமைகள்
பிரபல பொருளியல் ஆசிரியர் வே.கருணாகரன் எழுதிய A/L மாணவர்களுக்கான பாடநூல் விலை ரூபா 150/=
தொடர்பு: பகவான் மருந்தகம்
221, நவாலர் வீதி, யாழ்ப்பாணம்

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம்
[ICRC சந்தி அருகாமையில்]
★ நவீன ஸ்கான் (Scan), ECG மற்றும் இரத்த, சல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.
அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனைக் குறைப்பதற்கான சிகிச்சைகள்.
Branches
151, Kannathiddy Road. T.P.: 021 222 7251
71, Sivapiragasam Road, Vannarponnai, Jaffna.
web: www.lavaonline.net E.mail: lavasss@yahoo.com






மலிவு விலையில்......
திருமண அழைப்பிதழ்கள்
ADORNA CARDS
www.andradesigns.com
விசேட விலைக்கழிவு 10%





புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய
திருமண அழைப்பிதழ்களை
எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்
நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்
ANDRA DIGITAL IMAGE
# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகாமை)
# 63, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.
இணையத்தள முகவரி : www.andradesigns.com

வீட்டுப்பாவனைக்குரிய ISO 14001 ISO 9001






தரச் சான்றிதழ் பெற்ற 'கொண்டா' ஜெனறேற்றர்கள் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.






DISH TV விற்பனைக்கு
★IPL கிரிக்கெற் தொடரைப் பார்த்து மகிழுங்கள்.
★STAR VIJAY SONY MAX அடங்கலாக 5 மாதங்களுக்கு இலவசம்.
RG இரத்தினகோபால்ஸ்
இல.65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 6185, 021 222 9231


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.